# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 21 ஞாயிற்றுக்கிழமை (07.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 346


# ஜனவரிக்குப் பின்பே இந்திய வீட்டுத் திட்டம்

## இந்தியாவிடம் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, நவம்பர் 07

போரால் பாதிக்கப்பட்ட பின்னர் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த தமிழ் மக்களுக்கு இந்தியா அமைத்துக் கொடுப்பதாகத் தெரிவித்த 50,000 வீடுகளையும் அமைக்கும் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குப் பின்னரே ஆரம்பமாக உள்ளன. மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இப்போதைக்குப் பணிகளை ஆரம்பிக்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விளக்கி உள்ளார். (32ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் காயமுற்ற இளைஞர் மரணம்

கோப்பாய், நவ. 07

நீர்வேலி மாசிவன் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'ஹைஏஸ்' வான் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிப்படுகாயமடைந்த இளைஞர் நேற்று அதிகாலை மரணமானார்.

நீர்வேலியைச் சேர்ந்த காராளசிங்கம் வரதன் (வயது 32) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். தலையின் பின்பகுதியில் பலத்த காயமடைந்த இவர், உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட வழியில் மரணமானார். (ஒ-9-72-236)

## தமிழ் மக்களுக்காக கிராமம் அமைக்கப் போகிறார் முரளி

சிட்னி,நவ.7

300 வீடுகளை கொண்ட அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய கிராமம் ஒன்றை வடக்கில் அமைக்க இருக்கிறார் இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன். இதற்கென 50 ஏக்கர் காணியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் எனவும் முரளிதரன் தெரிவித்தார். (32ஆம் பக்கம் பார்க்க)

### கொட்டும் மழைக்கு மத்தியில் பஸ்களில் ஏற்றப்பட்டு

## மெனிக்பாம் மக்களில் ஒரு தொகுதியினர் வலுக்கட்டாயமாக நேற்று இடமாற்றம்

வவுனியா, நவ. 7

வவுனியா 'மெனிக்பாம்' முகாம் வலயம் 4இல் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கி இருந்த மக்களில் ஒரு தொகுதியினர் நேற்றுக் கொட்டும் மழைக்கு மத்தியில் வலுக்கட்டாயமாக வாகனங்களில் ஏற்றிக் கதிர்காமர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வலயம் 4இல் உள்ள 35 நிலையங்களில் 3 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். அவர்கள் ஓரளவு அடிப்படை வசதிகளுடன் தற்போது அங்கு வாழ்ந்து வருகின்றார்கள். இந்நிலையில் அவர்களை அங்கிருந்து கதிர்காமர் முகாமுக்குச் செல்லுமாறு அரசதரப்பும் படைத்தரப்பும் கோரி வந்தன.

கதிர்காமர் முகாம் வசதி குறைந்தது எனத் தெரிவித்து, அங்கு செல்வதற்கு மக்கள் மறுப்புத் தெரிவித்து வந்தனர். தங்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துமாறும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும், நேற்று அங்கு சென்ற வவுனியா அரச அதிபர், படைத்தளபதி ஆகியோர் தனித் தனியாகக் கூட்டங்களை நடத்தி உடனடியாக (நேற்றே) மக்கள் அனைவரும் கதிர்காமர் முகாமுக் (32ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கு உல்லாசப் பயணிகளுக்கு ஆனையிறவில் வைத்துப் புத்திமதி

### பண்பாகப் பழக வேண்டும் என்றும் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 7

தெற்கில் இருந்து யாழ்ப்பாணம் வரும் உல்லாசப் பயணிகளுக்கு ஆலோசனை வழங்கும் சிறப்பு நிலையம் ஒன்று ஆனையிறவு இராணுவ முகாமில் நேற்றுமுன்தினம் முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாழும் இந்து மக்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையில் நடக்கக் கூடாது; இந்து மத ஆலயங்களில் சுத்தத்தைப் பேண வேண்டும்; அரைகுறை உடைகள் அணியக் கூடாது; வீதிகளில் மதுபானம் அருந்தக் கூடாது; மக்களுடன் பண்பாகப் பழக வேண்டும் போன்ற அறிவுரைகள் அந்த சிறப்பு நிலையத்தில் வைத்துப் போதிக்கப்படுகின்றன. இதே அறிவுரைகளைக் கொண்ட (31ஆம் பக்கம் பார்க்க)

## பலத்த காற்றுடன் நேற்றிரவு கடும் மழை

யாழ்ப்பாணத்துக்குக் கிழக்கே நிலைகொண்டுள்ள 'ஜல்' புயலின் விளைவாக நேற்று நள்ளிரவு ஒரு மணி முதல் வடபகுதியில் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்தது.

## யாழ்ப்பாணத்துக்குக் கிழக்கே 'ஜல்' மையம் கடல் கொந்தளிப்புக் குறித்தும் எச்சரிக்கை

### இடியுடன் கூடிய மழை தொடரும்

கொழும்பு, நவ. 7

வங்காளவிரிகுடாவில் நிலைகொண்டுள்ள 'ஜல்' புயல் யாழ்ப்பாணத்துக்குக் கிழக்கே 600 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ளது. எனினும் வடக்குக் கரையோரங்ககளில் அதன் பாதிப்புக் குறைவாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்று அது சென்னையில் கரையைக் கடக்கும் எனவானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

கடல் அதிக கொந்தளிப்புடனும் சீற்றத்துடனும் காணப்படும் என்பதால் மீனவர்களைத் தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணிக்கு வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த, அடுத்த 24 மணி நேரத்திற்கான காலநிலை அவதானிப்புத் தொடர்பான செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'ஜல்' புயல் கடற்கரையோர (31 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.–காங்கேசன்துறை வீதி அகலிப்பு அடுத்த மாத இறுதியில் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதியை அகலிக்கும் பணிகள் அடுத்த மாத இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

குடாநாட்டில் உள்ள பிரதான வீதிகளை அகலமாக்கும் பணிகளைச் செய்து வரும் சீன அரசின் முன்னணி முகவர் நிறுவனத்தின் பொறியியலாளர் மைக்கல் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்சமயம் யாழ். - பருத்தித்துறை வீதியை அகலமாக்கும் பணிகள் நடைபெறுகின்றன. அந்தப் பணியின் இறுதிக் கட்ட வேலைகள் மழை காரணமாக (30 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே


நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு பகிரங்க மடல் — பக்கம் 4

வடபகுதி கடல் வளத்துறை எதிர்நோக்கும் சவால் — பக்கம் 21

தமிழர்களின் தீர்வில் மட்டும் ஏன் இந்த மோதல் — பக்கம் 23


## நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை விரைவில் வழங்கக் கோருகிறது ஜனாதிபதி செயலகம்

கொழும்பு, நவ. 7

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இதுவரை நடத்திய விசாரணைகளின் அறிக்கையை விரைவாகத் தருமாறு ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது. இதுவரையான சாட்சியங்களின் அறிக்கையை விரைந்து கட்டம் கட்டமாகச் சமர்ப்பிக்கும்படி தாம் கோரப்பட்டுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (30 ஆம் பக்கம் பார்க்க)


Government Schol.
NEW BATCH
Network Software Engineering
BIT, CIMA-UK, WEB Master-Canada
USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL
SMS your name & course to 772 395 895 & Get Schol.
MCS Supported By UNDP/JRRP
324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org Closing Date 09.11.2010

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...
சிங்கர் எயார்கண்டிஷனர்கள்
• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை

SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்
யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் எல்லைகளின் நிர்ணயப் பணிகள்

## சனத்தொகைக்கு ஏற்ப உறுப்பினர் எண்ணிக்கை

கொழும்பு, நவ.7

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு முன்பாக உள்ளூராட்சிச் சபைகளின் எல்லைகளை நிர்ணயம் செய்யும் பணி அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

உள்ளூராட்சிச் சபைகளின் எல்லைகள் நீண்டகாலமாக நிர்ணயம் செய்யப்படவில்லை. இதன் காரணமாக சில சபைகளின் பிரதேசங்கள் பெரிய இடத்தை உள்ளடக்கியதாகவும் சில சபைகள் சிறிய இடத்தை கொண்டதாகவும் இருக்கின்றன.

தற்போது சன பரம்பலை அடிப்படையாகக் கொண்டே புதிய எல்லைகள் நிர்ணயிக்கப்படவிருக்கின்றன.

தேர்தல் திணைக்களம் இந்தப் பணியை மேற்கொள்ள விருக்கின்றது.

மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை, கிராமசபை ஆகியவற்றின் உறுப்பினர் எண்ணிக்கையை சனத்தொகைக்கு ஏற்ப வகுக்கும் நோக்குடன் இந்தப் பணி முன்னெடுக்கப்படவிருக்கிறது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் புதிய உள்ளூராட்சித்திருத்தச் சட்டத்தின் கீழ் நடத்தப்படவுள்ளதால், மக்கள் தமது பிரதிநிதிகளை சுயாதீனமாகத் தெரிவு செய்ய உதவும் வகையில் எல்லை நிர்ணயம் செய்யப்படவிருப்பதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-ஐ)

# நாடாளுமன்றத்துக்கு மேலும் ஒரு அலுவலகக் கட்டடத் தொகுதி

## 75 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும்

கொழும்பு, நவ.7

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் மேலும் 75 கோடி ரூபா செலவில் புதிய அலுவலகக் கட்டடங்களை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

புதிய அலுவலகக் கட்டடங்களை அமைப்பது தொடர்பாக பிரதமர் டி.எம்.ஜயரட்ணவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அரசின் ஊடகப் பேச்சாளரான அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரச தகவல்திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் வைத்து இத்தகவலைத் தெரிவித்த அமைச்சர், ஹெகலிய ரம்புக்வெல-

நாடாளுமன்றக் கட்டடத் தொடரை அண்டியுள்ள காணியில் மேற்படி அலுவலகக் கட்டடத் தொடர் அமையவுள்ளதாகவும் இடவசதிகளில் நிலவும் பற்றாக்குறை சிக்கலைக் கவனத்தில் கொண்டே இவ்விதம் புதிய அலுவலகக் கட்டடத் தொடரொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஒ-22)

### யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள

# தொழிற் சந்தையில் பணியாளர்களை தெரிவு செய்வதற்கும் வாய்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

பணியாளர்கள் தேவைப்படுகின்ற தனியார் தொழில் நிறுவனங்கள், யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள தொழிற் சந்தையில் பங்குபற்ற விரும்பினால் தமது நிறுவனம் அமைந்துள்ள பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் பொருட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில், தொழிற் சந்தை ஒன்று இடம்பெறவுள்ளது.

வேறு மாவட்டங்களில் உள்ள பல்வேறு தனியார் நிறுவனங்கள் இதில் பங்கெடுக்கவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் தமக்குத் தேவையான பணியாளர்களைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தத் தொழிற் சந்தையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொழிற் சந்தையில் பங்கெடுக்கின்ற அனைத்துத் தனியார் நிறுவனங்களும் அரசில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

தொழிற்சந்தையில் பங்குபற்றும் நிறுவனங்கள் தமக்குத் தேவையான பணியாளர்களை நேர்முகத்தேர்வு வைத்து அன்றைய தினமே தெரிவு செய்யும் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-15)

# திறப்பு விழா

தென்மராட்சி, நவ.7

தென்மராட்சி கிழக்கு கெற்பேலி அ. த. க. பாடசாலையில் மாகாணக் கல்வி அமைச்சின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் (ஈ.எஸ்.பி) நிர்மாணிக்கப்பட்ட அதிபர் அலுவலகக் கட்டடம் நாளை திங்கள் காலை 9.30 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் பொ. நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அலுவலகக்கட்டடத்தை திறந்து வைப்பார். (ஒ-207)

# போலி நாணயத் தாள் அச்சிட்டு வந்த நால்வர் அக்கரைப்பற்றில் கைது

அக்கரைப்பற்று, நவ. 7

அக்கறைப்பற்று புதூர் பிரதேசத்தில் போலி நாணயத்தாள் அச்சிட்டு வந்த குற்றச்சாட்டின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அக்கரைப்பற்று புதூர் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் காலை 7.45 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போதே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதூர் பகுதியில் சந்தேகநபர்களைக் கைது செய்ய முற்பட்ட சமயம் அவர்களில் இருவர் தப்பியோடிவிட்டார்கள் என்றும் பின்னர் அவர்களை அக்கரைப்பற்று முகத்துவாரம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களிடம் இருந்த கார், போலி நாணயத்தாள் அச்சிடுவதற்கான கடதாசிகள், நூல் உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் -

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு, கண்டி, பண்டாரவளை மற்றும் நுவரெலியா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

# பிரதேச சபை உறுப்பினர் விபத்தில் உயிரிழப்பு

மட்டக்களப்பு, நவ.7

வாகரை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நேற்றிரவு வாகன விபத்தொன்றில் பலியானார்.

பிரதேச சபை உறுப்பினரான நவரட்ணம் ருவேந்திரன் (வயது 26) மற்றும் இவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றவேளை இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. புதூர் கதிரவெளி எனும் இடத்தில் சென்றுகொண்டிருந்தபோது கற்கள் ஏற்றிச் சென்ற லொறி யொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பிரதேச சபை உறுப்பினர் உயிரிழந்தார்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த ஏனைய இருவரும் வாகரை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர்.

இதேவேளை ஆத்திரமுற்ற பிரதேசவாசிகள் குறிப்பிட்ட லொறியை தீக்கிரையாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# பாடசாலைகளைத் தரமுயர்த்துவது தொடர்பான கலந்துரையாடல்

வடமாகாணத்திலுள்ள 120 பாடசாலைகளைத் தரமுயர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறி தலைமையில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையில் உள்ள ஆயிரம் பாடசாலைகளைத் தரமுயர்த்தும் திட்டத்தின் கீழேயே இந்த 120 பாடசாலைகளும் வடமாகாணத்தில் தரமுயர்த்தப்படவுள்ளன. இந்தப் பாடசாலைகளைத் தரமுயர்த்துவது தொடர்பாக உள்ள நிலைமைகளை ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், யாழ்., வன்னி பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-15)

# தென்னிலங்கை மக்களுக்குள்ள சுதந்திரங்கள் வடபகுதி மக்களுக்கும் கிடைக்கவேண்டும்

யாழ்ப்பாணம், நவ.7

தென்னிலங்கை மக்களுக்கு எவ்வாறான சுதந்திரம் கிடைக்கிறதோ அதேபோன்ற சுதந்திரத்தை வடபகுதி மக்களும் பெறவேண்டும். பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்கத்தின் கல்விப் புலமைப் பரிசில் திட்டம்-2010 நிகழ்வில் பிரதம விருந்தினராக நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீண்டகாலமாக எமது நாட்டில் நடந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக பிறரில் தங்கி நிற்கும் -கையேந்தி நிற்கும்- சமுதாயமாக எமது சமுதாயம் மாறிவிட்டது. அரசாங்கமோ அல்லது தொண்டு நிறுவனங்களோ வழங்கும் உதவிகளை எதிர்பார்த்து வாழக்கூடாது.

கடந்தகால அரசியல் தலைமைகள் தமது சுயலாப அரசியலுக்காக நடத்தப்பட்ட யுத்தத்தினால் வறுமை ஏற்பட்டது தான் மிச்சம். இதன் காரணமாகவே இன்னொருவரைசார்ந்து நிற்கும்நிலைமை உருவானது. இதனைத் தலைகீழாக நாங்கள் மாற்றி அமைக்க வேண்டும். இன்று கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரிவரப்பயன் படுத்தி நாங்கள் வாழ்வாதாரத்தில் முன்னேற வேண்டும்.

தெற்கிலிருந்து வரும் அரசியல் தலைவர்களுக்காகவே நீங்கள் போடும் மாலைகளை நான் ஏற்கின்றேன்.

அவர்களுக்கு எமது மக்களின் பாரம்பரியம் கலாசாரம் என்பன தெரியவேண்டும். கடந்தகால அரசியல் தலைமைகள் செய்த தவறினால் வெளியில் எமது மக்கள் தொடர்பாக - பயங்கரவாதிகள் என்ற தப்பான அபிப்பிராயம் இருக்கின்றது. இதனை நாங்கள் மாற்றியமைக்க வேண்டும்.

குண்டுச்சத்தம், கொலைகள், கடத்தல்கள் ஒருகாலத்தில் இருந்தன. எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கையுடனான காலம் இருந்தது. தற்போது அவ்வாறான நிலைமைகள் மாற்றப்பட்டு இருக்கின்றன.

இரத்தம் சிந்துவதற்கும் இடப்பெயர்வுக்குமே கடந்தகால அரசியல் தலைமைகள் உங்களை வீதிக்கு அழைத்தார்கள். நான் உங்களை வீதிக்கு அழைப்பது மரம் நடுவதற்காக மட்டுமே. 200 லட்சம் ரூபா பெறுமதியான மரங்கள் நடும் திட்டத்தை மேற்கொள்வதற்காகவே அழைக்கின்றேன்-என்றார்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ரி. மகேஸ்வரகுமார் உரையாற்றுகையில்.:

சமுர்த்தி வங்கிகள் மக்களுக்கு கடன்வழங்கும் வீதம்குறைவாகவே உள்ளது. புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கொடிவாரம் அனுஷ்டிக்கப்பட்டு அதன்மூலம் சேகரிக்கப்படும் பணத்திலேயே வறுமைப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு சேகரிக்கப்படும் நிதி அந்தப்பிரதேச செயலகத்துக்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். 90 கிராம மக்களுக்கு ஒரு லட்சம் வீதம் வீட்டுத்திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம்- என்றார்.

யாழ். பிரதேச செயலர் திருமதி சு. தெய்வேந்திரம் உரையாற்றும் போது:-

வறுமையை ஒழிப்பதற்காக பல்வேறு செயல்திட்டங்களை சமுர்த்திப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். வறுமை நிவாரணம் வழங்கல்- வாழ்வாதார செயற்பாடுகள் - குழந்தைகளுக்கான பால் வழங்கல், சேமிக்கப்பட்ட பணத்தை சுழற்சி முறையில் வழங்கல் போன்றவற்றை திறம்பட மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையிலேயே இன்று வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட சிறுவர்கள் 101 பேருக்கு மாதம் ஒன்றுக்கு 500 ரூபா வீதம் வருடமொன்றுக்கு வழங்க உள்ளோம்-என்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மகேஸ்வரி நிதியத்தின் மூலம் 50 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையும் இந் நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-15)

# தமிழரின் உடனடி பிரச்சினைக்குத் தீர்வு ஆராய 'அரங்கம்' 14 இல் கூடுகிறது

யாழ்ப்பாணம், நவ.7

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் விடயங்கள் குறித்து ஆராய தமிழ்க்கட்சிகளின் அரங்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி கூட விருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிறைக் கைதிகளின் விடுதலை உட்பட மக்களின் உடனடிப் பிரச்சினைகள் ஆகியன தொடர்பாக ஜனாதிபதியுடன் அரங்கத்தின் பிரதிநிதிகள் பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

இந்தப் பேச்சில் சமர்ப்பிக்கவிருக்கும் மகஜரை தயாரிக்க மூவர்கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு தயாரிக்கும் அறிக்கைக்கு இறுதி வடிவம் கொடுக்க எதிர்வரும் 14 ஆம் திகதி அரங்கம் கூடவிருக்கிறது என்றும் -

இனப்பிரச்சினை தீர்வுக்கான திட்டம் டிசெம்பர் இறுதியில் தயாரிக்கப்படும் என்றும் -

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இறுதித் தீர்வுக்கான திட்டம் தயாரிக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைக்கப் [illegible] அவர் தெரிவித்தார். (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறும் முஸ்லிம் மக்களுக்கு உதவ இஸ்லாமிய நாடுகள் பல முன்வந்துள்ளன

## நேற்றைய நிகழ்வில் யாழ்.அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், நவ.7

முஸ்லிம் மக்களுக்கு உதவ இஸ்லாமிய நாடுகள் தயாராகவே உள்ளன. இது தொடர்பாக முஸ்லிம் நிறுவனம் ஒன்று என்னுடன் ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளது. இது குறித்து ஜனாதிபதி செயலணிக்கும் அறிவித்துள்ளேன். அவர்களின் அனுமதி கிடைத்ததும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்- என்று யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

''20ஆவது வருடத்தில் மீண்டும் துளிர்ப்போம்'' என்ற பொருளில் முஸ்லிம் அமைப்புகள் ஒருங்கிணைந்து நடத்திய கூட்டம் யாழ். மாநகர சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.எம். ரமீஸ் தலைமையில் நேற்று சனிக்கிழமை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

மீள்குடியேற்றம் செய்வதற்குமுன் அந்தப் பிரதேசத்தின் நிலைமை சீராகவுள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதன்பின்னரே ஏனைய தேவைகளை நிறைவு செய்யும் வகையில் செயற்பட வேண்டும். இதில் முஸ்லிம் மக்களுக்கும் உரிய நேரத்தில் உரிய வசதிகள் வழங்கப்படும்.

இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பேதம் இன்றி எல்லோரும் ஒரே மக்கள் என்ற அடிப்படையிலேயே அரசு செயற்படுகின்றது. மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற தார்மீகப் பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது.- என்றார்.

சட்டத்தரணி ரமீஸ் தனது தலைமையுரையில்-

முஸ்லிம் மக்கள் தாங்கள் இழந்த பூமியில் மீண்டும் குடியேறி வாழ வேண்டும். அதற்கான கடமை எமக்கு இருக்கின்றது என அல்ஹாஜ் கூறுகிறார். வடக்கு மாகாணத் தமிழ் மக்களும், யாழ்.முஸ்லிம்களும் சகோதரர்களாகவே வாழ்ந்தவர்கள். இலங்கை மக்கள் என்ற அடிப்படையில் நாங்கள் செயற்படுவோம். இது ஒரு நல்ல விடயம். பிரிந்து நின்று செய்வதை விட ஒருங்கிணைந்து எதிர்கால நலன்களை முன்னெடுக்க கூடியதான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஒற்றுமையைப் பலப்படுத்துவோம்.

யாழ்.நகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உரையாற்றும்போது-

தமிழர்கள், முஸ்லிம்கள் என்றபேதம் எதுவு




மின்றி சகோதரர்களாக வாழ்ந்தவர்கள் நாங்கள். பேதமின்றி வாழ்ந்த முஸ்லிம்களை 500 ரூபாவுடனும், ஒரு 'சொப்பிங்' பையுடனும் வெளியேற்றிய செயல் மனவருத்தத்துக்குரியது. முஸ்லிம் மக்களின் சொத்துக்கள் விடயத்தில் மாநகர சபை உரிய நடவடிக்கைகளை எடுத்து அது உரியவர்களிடமே வழங்கக் கூடியதான ஏற்பாடுகள் செய்து வருகின்றது. நாங்கள் ஒன்றாக இணைந்து இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைய முஸ்லிம்களின் சொத்துக்களை வழங்கவேண்டும்- என்றார்.

நிகழ்வில் ஜே.சி.எஸ்.ஈ. நிறுவனத்தின் செயலாளர் எம்.கே.சர்மிளாவும் உரையாற்றினார்.

முஸ்லிம் மக்களின் கோரிக்கை குறித்த மகஜரும் யாழ்.அரச அதிபர், யாழ்.மாநகர முதல்வர், யாழ்.பிரதேச செயலர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது. (எ-7)

## கொண்டாட்டம்.....



ஊக்குவிப்பு: நுவரெலியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகைளில் தேசிய தீபாவளி விழா நேற்று முன் தினம் கொண்டாடப்பட்டது. இதில் ஜனாதிபதி மாணவன் ஒருவனுக்கு மடிக்கணினி ஒன்றை வழங்கினார்.

# கடும் காற்று, கடல் கொந்தளிப்பால் மட்டக்களப்பில் பதற்றம் நீடிக்கிறது

கிழக்குக் கடற்பரப்பில் நிலைகொண்டிருக்கும் புயல் காரணமாக மட்டக்களப்பில் வீசும் கடும் காற்றால் பெரும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

பாண்டிருப்பு, மருதமுனை ஆகிய இடங்களில் கடல் கொந்தளிப்புக் காரணமாக நான்கு படகுகள் கரைக்கு அப்பால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன. பிரதேச மக்கள் தங்கள் வள்ளங்கள் மற்றும் கட்டுமரங்களை கரைக்கு இழுத்து வந்துள்ளனர்.

புயல் வீசும் பட்சத்தில் அனர்த்தங்களில் இருந்து தப்புவதற்காக மக்கள் வேறு இடங்களுக்குச் செல்வதற்குத் தயாராக இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை-

கிழக்குக் கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த தாழமுக்கம் யாழ்ப்பாணத்தைக் கடந்து 200 கி.மீற்றருக்கு அப்பால் தென்னிந்தியாவை நோக்கிச் சென்றுள்ளதால் கிழக்கில் புயல் அச்சுறுத்தல் முற்றாக நீங்கியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.சூரியகுமார் தெரிவித்தார். இருந்தபோதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் காற்று வீசி வருகின்றது. (ஒ-ஐ)

# அரச ஊழியரின் மேலதிக மொழி கற்கைக்கு அரசு ஊக்குவிப்பு வழங்கத் தீர்மானம்

## பிரதமர் ஜயரட்ண தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

அரச ஊழியர்கள் தேசிய மொழியொன்றை மேலதிகமாகக் கற்பதற்கு அரசாங்கம் ஊக்குவிப்புகளை வழங்குவதற்குத் தீர்மானித்திருப்பதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு-

சிங்கள மொழி ஊழியர்கள் தமிழ் மொழியைக் கற்க வேண்டும் என்றும் தமிழ்மொழி ஊழியர்கள் சிங்கள மொழியைக் கற்க வேண்டும் என்றும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

ஒவ்வொருவரும் மேலதிக மொழி ஒன்றை அறிந்திருந்தால் இன்று நாம் முகம்கொடுக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். அபிவிருத்திச் செயன்முறையில் ஓர் அங்கமாக அரசாங்க ஊழியர்கள் மேலதிக மொழியொன்றை அறிந்திருக்க வேண்டும். இதன்மூலம் அரசாங்க சேவைகளை மேலும் வினைத்திறன் மிக்கதாக வழங்கமுடியும்- என்றார்.

# இப்படியும் நடக்கிறது....

பல வருடங்களுக்கு முன்னர் யாழ். குடாநாட்டு மக்கள் கொழும்பு செல்லப் பிரதான ஒரே வழியாகப் பயன்பட்டது கிளாலிப் பிரதேசம் தான். அப்போது தென்பகுதிக்குச் செல்வோர் கிளாலி சென்று அங்கு தங்கி நின்று படகு மூலம் பூநகரி சென்று, பின்னர் அங்கிருந்து தென்பகுதி செல்வது வழமை.

இப்பகுதி பல நூற்றுக்கணக்கான ஏக்கர்களைக் கொண்ட பிரதேசம். சாவகச்சேரி-கச்சாய் வீதி ஊடாகச் சென்றால் கச்சாய்,கெற்பேலிக் கிராமங்கள் வரும். அங்கு இப்போது மக்கள் குடியேறியுள்ளனர். வீதியும் கெற்பேலி வரை விசாலமாகப் புதிய தார் வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.

கெற்பேலிக்கு அப்பால் உள்ள பிரதேசம் இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.கிளாலிக் கிராமமான அப்பகுதி பளைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டது. இங்குள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் கடந்த ஜூலை மாதம் பூசைகள் செய்ய அனுமதிக்கப்பட்டது.

அங்குள்ள தருவைப்பதி நாச்சிமார் ஆலயத்துக்குப் பக்தர்கள் கடந்த பங்குனி மாதம் சென்ற போது இராணுவத்தினர் அனுமதி வழங்கும்வரை அங்கு வரவேண்டாம் எனத் தடை செய்தமையால் அப்பகுதிக்கு எவரும் செல்வதில்லை.

பல ஏக்கர் கொண்ட தென்னத்தோப்புகளில் அங்கு இப்போது தென்னைகள், பனைகள் எவையும் இல்லை. பற்றைகள் வளர்ந்து காடு மண்டிக் கிடக்கிறது அப்பகுதி.

இங்கே எனக்கும் எனது நெருங்கிய உறவினர்களுக்கும் சொந்தமான சில ஏக்கர் தென்னந்தோட்டம் உள்ளது.

இதை விடுவிக்குமாறு கோரி நான் விண்ணப்பித்தபோது இராணுவ அதிகாரிகள் என்னை அங்கு அழைத்துச் சென்று தூரத்தே இருந்து அதனைக் காட்டுவித்தனர். அப்போது அங்கு தென்னை, பனை எதுவும் இல்லை. காடு போல இருந்தது.

அப்பிரதேசம் இராணுவப் பொறுப்பில் உள்ளதாக அப்பகுதி இராணுவம் எனக்கு கடிதம் வழங்கியது.

அப்பகுதியில் எனக்கும் இன்னும் பலருக்கும் சொந்தமான (தற்போது காடு) காணிகள் பல ஏக்கர்கள் உள்ளன.

சன நடமாட்டம் அற்றதும் பெரும் வனாந்தரம் போல் உள்ளதுமான அப்பிரதேசம் ஓர் அரசியல்வாதியின் கண்களில் பட்டுள்ளதாகவும், என்ன விலை கொடுத்தாவது அதனை வாங்கி, யாழ்.குடாநாட்டிலே ஓர் புதிய கிராமம் ஒன்றை உதயமாக்கவும் அவர் திட்டமிட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

கொழும்பில் உள்ள எனது நண்பர் ஒருவர் இப்பகுதியில் நூறு ஏக்கர் காணி விலைக்கு வாங்க முடியுமா என்று கேட்டார். எதற்காக இங்கு எனக் கேட்டபோது ஜேர்மனியைச் சேர்ந்த ஒருவர் இப்பகுதியில் பெரிய ஹோட்டல் ஒன்றைக் கட்டப் போவதாகக் கூறியதாகவும் சொன்னார்.

தற்போது இங்குள்ள சூழ்நிலைகள், நடப்பு விவரங்களை எனது நண்பரிடம் கூறி, உண்மை நிலவரத்தை அறியும்படி சொன்னேன்.

சிலநாள்களின் பின் அவர்கூறிய விவரங்கள் கவலை அளிப்பதாக இருந்தது. நமது எதிர்காலச் சந்ததியினரை உத்தேசித்தாவது விழிப்புடன் இருக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழினம் உள்ளது.

தமிழருக்கென்று ஒரு பாரம்பரியம், கலை, கலாசாரம், பண்பாடு உள்ளது. இன்று வெளிநாடு சென்று வாழும் நம்மவரில் பலருக்கு இது பொருட்டாகத் தெரியாது இருக்கலாம். சைவமும் தமிழும் சொல்லித்தந்த பழக்கவழக்கங்களைப் பின்பற்றும் நாம், கட்டுக்கோப்புடன் வாழ்வதை மாற்றிக்கொள்ளும் சூழ்நிலை உதயமாக இடமளிக்க மாட்டோம் அல்லவா.

எனவே- பணத்துக்காக மண்ணை விற்க முயலும்போது நாம் விழிப்புடன் இருத்தல் அவசியம்.

இன்று நம் கிராமத்து, நகரத்து வாழ்வில் சுற்றுச் சூழல், அயலவர் எல்லாம் உறவுகளுடனும், நெருங்கிய நண்பர்களுடனும் வாழும்போது, இடைநடுவில் வேற்று ஆள்கள் இங்கு வந்து குடியிருக்க நாம் விரும்புவதில்லை. இந்த நிலையிலேயே எதற்கும் நாம் விழிப்புடன் இருப்பது எதிர்காலச் சந்ததிக்கு நல்லது.

- எம்.எல்.விநோதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு

# பகிரங்க மடல்



**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளும் அதன் சிபாரிசுகளும் எதிர்காலத்தில் இலங்கையில் உண்மையான நல்லிணக்கத்தை இனங்களுக்கு இடையில் ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு**

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினருக்கு! வணக்கம்! நீங்கள் நலமாயிருக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளதால், அந்த நல்லைப்பதி உறை குமரனை பிரார்த்திக்கிறேன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் நியமிக்கப்பட்ட - சீ.ஆர்.டி.சில்வா, டாக்டர் அம்ரித் றொகான் பெரேரா, பேராசிரியர் கருணாரட்ண ஹன்கவத்த, சந்திரபால சண்முகம், ஹேவா மாதர கமகே சிறிபால பலிஹக்ஹார, திருமதி மனோகரி இராமநாதன், மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம மற்றும் பேராசிரியர் முகமட் தாஹிர் முகமட் ஜிப்ரி (கடந்த புரட்டாதி மாதம் மரணமடைந்து விட்டார்) ஆகியோரை உள்ளடக்கிய உங்கள் குழுவிடம் தரப்பட்டுள்ள பொறுப்பு கனதியானது; பெரியது; பொறுப்பு வாய்ந்தது.

இனமுரண்பாட்டு விடயங்களில் நாடு கடந்து வந்த - கரடுமுரடான - கல்லு முள்ளும் நிறைந்த- பாதையை ஆராய்வது, அந்தப் பாதையில் நடந்தபோது - அணிந்திருந்த காலணியில் - மறைமுகமாகத் தைத்த முள்ளுகள் பற்றி ஆராய்வது, காலணியையும் தாண்டி காலை நேரடியாகவே தைத்த - காலைக் கிழித்த - இரத்தம் வருவித்த - ரணப்படுத்திய - கல்லுகள், முள்ளுகள் பாதைத் தடைகள் பற்றி ஆராய்வது, உள்ளங்காலில் ஏறி உச்சந்தலை வழி வெளியேறிய கொடூர முள்ளுகள் பற்றி ஆராய்வது, என்பவற்றோடு எதிர்காலத்தில், மேற்படி பாதையை எவ்வாறு செப்பனிடுவதன் மூலம் கல்லுகள், முள்ளுகள் தவிர்க்கலாம், குறிப்பாகக் கல்லுகள், முள்ளுகளை போடுபவர்களை, அவற்றைப் போடவிடாமல் எப்படி நல்வழிப்படுத்தலாம் என்பது பற்றி ஆராய்வது, தீர்வுகளைத் தேடுவது, பொருத்தமான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது...

ஸ்.... அப்பா! இப்பவே எனக்கு மூச்சு முட்டுகிறது...!

இப்படியான ஓர் அரிய காரியத்தைச் செய்யும் நோக்கோடுதான் உங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) நியமிக்கப்பட்டிருக்கிறது என்று நான் என் மனதில் ஒரு மனபிம்பத்தை ஏற்படுத்தினேன். ஆனால்...

இந்த ஆணைக்குழு பற்றிய செய்திகளைத் தேடித்தேடி வாசிக்க நேர்ந்த போதுதான், அது நான் கற்பனை செய்ததில் இருந்து விலகியிருக்கின்றமை தெரியவந்தது.

அச்சு ஊடக விளம்பரங்களில் பெரிய எழுத்தில் பெரிதாக விளம்பரங்களைப் போட்டு விட்டு, பக்கத்தில் சற்று மேலாக (Superscript) ஒரு நட்சத்திரக் குறி போட்டு அதனுடைய விளக்கத்தை உதாரணமாக, ''நிபந்தனைகளுக்கு உட்பட்டது'' என்றோ ''வரிகள் உள்ளடக்கப்படவில்லை'' என்றோ ''கையிருப்பு முடியும் வரை மட்டுமே இச்சலுகை செல்லுபடியாகும்'' என்றோ விளம்பரத்தின் அடிவரியில் - கண்பார்வையைப் பரிசோதிக்கும் விதத்தில் - போட்டிருப்பார்களே... அது போன்ற ஒரு கைங்கரியம்தான் உங்கள் ஆணைக்குழு விடயத்திலும் நடந்தேறியிருக்கிறது.

உங்கள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஆராயத்தரப்பட்டுள்ள தலைப்பு: ''2002 மாசி 21இல் நடைமுறைக்கு வந்த போர் நிறுத்த ஒப்பந்தம் ஏன் தோல்வியடைந்தது, அது தோல்வியடைய வழிவகுத்த சந்தர்ப்பங்கள் மற்றும் காரணங்கள், நேரடியாக, மறைமுகமாக சம்பந்தப்பட்ட நபர்கள், குழுக்கள் பற்றி விசாரணை செய்வது''.

உங்கள் ஆணைக்குழு கருத்திலெடுக்க வேண்டிய காலப் பகுதியாக ஒதுக்கப்பட்ட காலம், 21 மாசி 2002 இலிருந்து 19 வைகாசி 2009 வரை.

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட இன முரண்பாட்டு வரலாற்றையும் மூன்று தசாப்த ஆயுதப்போராட்ட வரலாற்றையும் உடைய நம்நாட்டு இனப் பிரச்சினை பற்றி ஆராய, அதற்குப் பதச்சோறாக எடுத்துக் கொண்ட காலப்பகுதி வெறும் ஏழு ஆண்டுகள்!

✱ உங்கள் ஆணைக்குழு நியமனம் பெற்றது எப்போதெனில்... வடக்கில் இடம்பெற்ற போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் தெற்கில் ஓய்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் தறுவாயில். 15 ஆம் திகதி வைகாசி 2010 இல்.

இத்தனை தாமதத்தின் பின்னும் உங்கள் ஆணைக்குழு உருவாக்கம் பெற்றது ஒன்றும் இலங்கை அரசின் தன்னார்வத்தினால் அல்ல. மனித உரிமை ஆர்வலர்களின் நச்சரிப்புத் தாங்காது ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கை இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆராய நிபுணர் குழுவை அறிவிக்க முற்பட்ட வேளை - அதற்குத் தண்ணிகாட்ட... தாமதப்படுத்த... தடுக்க... என உங்கள் குழு உருவாக்கம் எனவே நான் நினைக்கிறேன்.

✱ நீங்கள் விசாரணைகள் மூலம் பெற்ற தகவல்களை வைத்துக் கொண்டு முன்மொழியப் போகும் சிபாரிசுகள், முன்மொழிவுகள் குறிப்பாக, மீண்டும் இன முரண்பாடுகள் தோன்றா வண்ணம் பிரயோகிக்க வேண்டிய நடவடிக்கைகள், சாட்சியங்கள் என்பவற்றை உள்ளடக்கிய இறுதி அறிக்கை யாரிடம் செல்லப் போகின்றது என்றால்... ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் [illegible] யில், அவ்வறிக்கை [illegible] அனுப்ப உத்தேசித்துள்ளார்களாம்). ஒரு பக்கத்தில் ராஜபக்ஷ, நாட்டின் ஜனாதிபதியே. ஆனாலும் மறுபக்கத்தில்... இறுதிப் போரில் போர்க்குற்றங்கள் இழைத்ததாகச் சர்வதேச அரங்கில் குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பின் - முப்படைத் தளபதி.

இதனால்தான் மனித உரிமைகள் தொடர்பில் கரிசனை கொள்கின்ற மூன்று முக்கிய அமைப்புகளான மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச நெருக்கடிகள் குழு என்பன, சாட்சியமளிக்குமாறு நீங்கள் விடுத்த அழைப்பைக் கூட்டாக நிராகரித்து - உங்கள் ஆணைக்குழு மீது போதிய நம்பகத்தன்மை இல்லையென்றும் குற்றவாளிகள் தண்டனை பெறுவதற்கான சாத்தியங்கள் குறைவென்றும் அறிக்கை வெளியிட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் உங்கள் ஆணைக்குழு மீது அவநம்பிக்கை வெளியிட்டிருக்கிறார். சர்வதேச ஜூரிகள் சபையும் உங்களை அங்கீகரிக்க மறுத்துவிட்டது.

பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கும் (CFA), அது கைவிடப்பட்டதற்கும், அதிலிருந்து இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகக் கற்றுக்கொள்வதற்கும் பெரிதாக எதுவும் இருப்பதாகக் என்னாலும் கருத இயலவில்லை. ஆனால் 'போர் நிறுத்த ஒப்பந்த உடைவை' பிரதான ஆய்வுக் காரணியாக நோக்கியிருப்பதற்குப் பின்னால் ஏதும் உள்நோக்கம் இருக்குமோ எனக் கருதினால்...

போர் நிறுத்த ஒப்பந்த மீறல்களை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழு கண்காணித்து விடுத்த அறிவிப்பின் படி, 30 ஆனி 2005 வரையான காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் போர் நிறுத்த ஒப்பந்தம் 3,006 தடவைகளும் அரச தரப்பினரால் 133 தடவைகளும் மீறப்பட்டுள்ளன.

**போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலத்தில் இராணுவத் தளபதியாகப் பணியாற்றிய முன்னாள் தளபதி சரத் பொன்சேகாவின் சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் உங்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கிறதா என்றால் அதுவும் வினாவிற்குரியதே.**

இது அரசுக்குப் பலமான ஆதாரம். எதற்கென்றால், இன்றைய நிலையில்- போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஒரு தரப்பினராகவும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவாகிய உங்கள் முன் சாட்சியமளிக்க வேண்டிய தரப்பினராகவும் விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளே போர் நிறுத்தத்தை அதிகளவில் மீறியுள்ளனர். இந்த ஆதாரத்தைக் காரணம் காட்டியே அரச படைகள் மீதான சர்வதேசத்தின் கொதிப்பைத் தணித்து விடலாம்.

உங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் அரசிற்கு ஆதரவான வகையிலேதான் செயற்படுவார்கள் என்றே நான் கருதி இருந்தேன். ஆனால், கடந்த ஆவணி 11ஆம் திகதியிலிருந்து நீங்கள் பொதுமக்கள் அமர்வுகளை - போரின் தாக்கத்திற்கு முகம்கொடுத்தவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைப் பதிவுசெய்யவதற்கான அமர்வுகளை - நடத்துவதற்கு முன்வந்ததும் அது மாறிவிட்டது. அந்தச் செயல் வரவேற்புக்குரியதும் பாராட்டத் தகுந்ததுமாகும்.

உண்மையில், வடக்கு மற்றும் கிழக்குப் பொதுமக்களுக்கான அமர்வுகளை அவர்களின் மண்ணிலேயே நடத்தத் தொடங்கிய பின்புதான், உங்கள் ஆணைக்குழுவிற்கு புதிய பரிமாணமே கிடைத்தது. வடக்கில், வவுனியாவில் ஆவணி 14, 15 ஆம் திகதிகளில் பொதுமக்கள் அமர்வு நடைபெற்றபோது அது பெரியளவில் கவனிக்கப்படவில்லை. ஆனால் புரட்டாதி 18 தொடக்கம் 20 வரையான நாள்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் - போரின் பெரும் அவலத்தை நேருக்கு நேர் நின்று எதிர்கொண்ட - மக்களைச் சந்தித்து அவர்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்ய முற்பட்டபோதுதான்... கிணறு தோண்டப் பூதம் புறப்பட்ட கதை நிலையை உங்கள் ஆணைக்குழு எட்டியிருக்கிறது. அரசுக்கு - வேலிக்கு வைத்த முள் காலிலே தைத்த கதையாக நிலைமை திரும்பியிருக்கிறது.

போதியளவு முன்னறிவித்தல் கிடைக்காத நிலையிலும், பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் பெருமளவிலான பொதுமக்கள்- குறிப்பாகப் பெண்கள் உங்கள் ஆணைக் குழுவுக்கு முன் வந்து சாட்சி தந்து - கண் கண்ட சாட்சிகளாக நின்று, மனுநீதிச் சோழன் கதையில் வரும் தாய்ப் பசுவாக உங்கள் ஆணைக்குழு மூலம் - நீதி மணியின் கயிற்றைப் பிடித்து உங்கள் மூலமாகவும் ஊடகங்கள் மூலமாகவும் ஒலி எழுப்பியிருக்கிறார்கள்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசின் நிலவாதத் தர்க்கம்

நாட்டின் ஒரு பிரதேசத்தை ஓர் இனத்துக்கென ஒதுக்க முடியாது. இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு அங்குல நிலமும் இங்கு வாழும் ஒரு கோடியே 95 லட்சம் மக்களுக்கும் சொந்தம். நாட்டின் எந்தப் பகுதியிலேனும் இனவிகிதாசாரம் பேணப்பட வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒரு பிரதேசத்தை ஓர் இனத்துக்கென வரையறுக்க முடியாது; ஒரு பிரதேசத்தை ஓர் இனம் சொந்தம் கொண்டாட முடியாது. அதேபோல் ஒரு பிரதேசத்தை ஓர் இனத்துக்கென வழங்கிவிடவும் முடியாது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்கும்போது இனவிகிதாசாரம் மாறும் என்று சிந்திக்க முடியாது. எவரும் எங்கும் வாழலாம். இதுவே அரசாங்கத்தின் கொள்கை.

இவ்வாறு அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கின்றார் அமைச்சரவைப் பேச்சாளர் - அரசாங்கத்தின் பேச்சாளர்- அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் குடிப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய புதிய குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அபாயகரமான இச்செய்கை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நடத்தப்படும் புதிய காலனித்துவமாகப் பார்க்கப்படுகின்றது. இதனைத் தவிர்த்துக் கொள்வது மிக அவசியம்- என்று இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நல்லிணக்க ஆணைக்குழு முன் அம்பலப்படுத்திய விடயத்திற்கு அரசாங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட பதில் இது.

கர்தினால் அம்பலப்படுத்திய, புட்டுக்காட்டிய அரசின் இரகசியத் திட்டம் சரியானதுதான். அதுவே இலங்கைக் குடியரசின் கொள்கை, நிலைப்பாடு. அதற்கான ஏற்பாடுகள், நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்று அமைச்சர் ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டும் என்பதற்காக அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பேரில் பெரும்பான்மை இனத்தவரான சிங்கள மக்களை, தமிழ் மக்களின் பூர்வீகப் பிரதேசங்கள் என்று ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளில் திட்டமிட்டுக் குடியேற்றுவது சிங்கள அரசுத் தலைவர்கள் காலத்துக்குக் காலம் கையில் எடுக்கும் அரசியல் ஆயுதமாகும். அவ்வாறு செய்வதன் மூலம் சிங்கள மக்களின் வாக்கு வங்கியை தமது பக்கத்துக்குத் திருப்பி ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்து தமது கையில் வைத்திருப்பதற்கான இனவாதம் வழிந்தோடும் சூழ்ச்சியுமாகும்.

இப்போது- முப்பது வருடங்களாக நடைபெற்ற போர் முடிந்த கையோடு- சூட்டோடு சூடாக தமிழர் பிரதேசங்களைத் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் ஏப்பம் விடுவதற்கு, வடக்கு, கிழக்கின் குடிப்பரம்பலில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு, அரசு தீவிரமாக ஈடுபடுகின்றது.

அது நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் கர்தினாலால் போட்டு உடைக்கப்பட்டதால், அரசு செய்வது சரியே, அதில் தவறு எதுவும் இல்லை என்று அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் ரம்புக்வெல நியாயப்படுத்தியிருக்கிறார்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்கள் என்பது ஏற்கனவே பண்டா - செல்வா ஒப்பந்தம் மூலமாகவும், இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலமாகவும் இலங்கை அரசாங்கங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அந்தப் பிரதேசங்களில் நாட்டின் பிறபகுதிகளைச் சேர்ந்தவர்கள் சுயமாகக் குடியமர்வதை எவரும் ஆட்சேபிக்க முடியாது.

ஆனால் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் குடிப்பரம்பலைத் தலைகீழாக்கி, தமிழ் மக்களை அங்கு சிறுபான்மையினராக்கும் கபட நோக்கத்துடன் அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழர்களை அவர்களின் சொந்தப் பிரதேசங்களிலேயே சிறுபான்மையினராக்கும் கபடத்தனமான முயற்சியாகும்.

இலங்கை சோசலிஸ ஜனநாயகக் குடியரசு என்பது நாட்டுக்குரிய பெயர்ப்பலகை. அவ்வாறிருக்க தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்களில் அவர்களை சிறுபான்மையினராக்கும் நியாயமும், நீதியும் ஆகுமா? இதன்மூலம் சமாதான சக வாழ்வுக்கு, சோசலிஸத்துக்கு எங்கே இடமுண்டு?

மூடிய வேலிகளுக்குள் தொல்லியல் ஆராய்ச்சி என்ற பேரிலும், ஏதேதோ கண்டுபிடிப்புகளைச் செய்வதாகவும் கூறி-

வடக்கு, கிழக்கில் சிங்கள மக்களும் வாழ்ந்தார்கள், அவர்களின் பூர்வீகப் பிரதேசங்களே வடக்கும், கிழக்கும் என்று நிறுவ அரச ஆதரவுடன் செயற்பாடுகள் நடந்தேறுகின்றன.

இவை வடக்கும் கிழக்கும் தங்களது தாயகம் என்று தமிழர்கள் சொந்தம் கொண்டாடக் கூடாது என்பதனை நிலைநாட்டுவதற்கான நயவஞ்சகம் நிறைந்த திட்டம்.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு அங்குலமும் நாட்டிலுள்ள ஒரு கோடியே 95 லட்சம் மக்களுக்கும் சொந்தமானது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு ஏற்புடையது எனக் கொண்டாலும்-

ஒரு தர்க்கரீதியாக நோக்கின்-

பூர்வீகச் சிங்களப் பிரதேசங்களில் அரசு தனது ஏற்பாட்டில் தமிழ் மக்களை பாதுகாப்புடன் பெரும் எண்ணிக்கையில் திட்டமிட்டுக் குடியேற்ற வேண்டும். அவர்கள் அங்கு தமது மொழி, மத, கலாசார உரிமைகளை அனுபவித்து வாழ்வதற்கு வகை செய்ய வேண்டும். அதற்கு அரசாங்கம் இணங்குமா? அவ்வழி செயற்படுமா?

# உயர் பாதுகாப்பு வலய மக்களுக்கு மாற்றுக் காணிகள் அல்லது நட்டஈடு

## அமைச்சர் மில்றோய் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,நவ.7

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் விடயத்தில் விடுவிக்க முடியுமான பகுதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். ஆனால் கட்டாயமாக இருக்க வேண்டிய சில அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. இதனால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு மாற்றுக் காணிகளையும் நஷ்டஈட்டையும் வழங்கவுள்ளோம். சில இடங்களில் தற்போதைக்கு அதியுயர் பாதுகாப்பு வலையங்களை நீக்குவது சாத்தியமில்லை.

இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தம்மை மீள் குடியேற்றக்கோரி யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களின் நிலைமை தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரிடம் அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களின் நிலை, அதியுயர் பாதுகாப்பு வலையங்களின் விவகாரம் குறித்து விவரிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் விடுவிக்கக்கூடிய காணிகளை விடுவித்து பாதுகாப்புப் படையினரை வேறு இடங்களுக்கு மாற்றி வருகின்றோம்.

உரிய மக்களுக்கு குறிப்பிட்ட காணிகளை வழங்க முடியும். ஆனால் சில இடங்களில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்க வேண்டியது அவசியம். எனவே உடனடியாக அனைத்தையும் செய்து விடமுடியாது. பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு நஷ்டஈடும் வழங்கப்படும்.

திருகோணமலையில் சம்பூர் பிரதேசமும் அதியுயர் பாதுகாப்பு வலயமாக உள்ளதால் அதனை நீக்குவது சாத்தியமற்ற விடயம். எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் தம்மைக் குடியேற்றக்கோரி யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சு என்ற வகையில் தீர்வு ஒன்றை வழங்க ஆராய்ந்து வருகின்றோம். இந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் என்ன அடிப்படையில் வசித்தனர் என்பது குறித்து ஆராய வேண்டியுள்ளது. எனவே அந்த மக்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை மாவட்ட அரச அதிபரிடம் கோரியுள்ளோம்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் அறிக்கை கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய முடியும். இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஒன்றை வழங்குவது குறித்தே கவனம் செலுத்துகின்றோம். இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதுடன் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடவுள்ளோம் - என்றார். (த-ற)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.7

யாழ்.மாவட்டத்தில் ஹோட்டல் முகாமைத்துவக் கல்வி தொடர்பான அறிமுகக் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.நகரத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெறும் பிரதம விருந்தினராக திறன் அபிவிருத்திக் கல்விப் பணிப்பாளர் எஸ். செந்திலிங்கம் கலந்து கொள்வார். (ஒ-302)

# மாணவருக்கான இலவசக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.7

மல்லாகம், கோட்டைக்காடு சாளம்பை விழுதுகள் சமூக அபிவிருத்திக் கழகம் நடத்தும் ஜீ.சி.ஈ. சாதாரண தர மாணவர்களுக்குக்கான இலவசக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 17ஆம் திகதிவரை கோட்டைக்காடு அ.த.க.பாடசாலையில் மாலை 6.30 மணிமுதல் 8.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இலவசமாக நடத்தப்படுகின்ற இந்தக் கருத்தரங்கில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-9)

# சங்கானையில் இன்று மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ.7

றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர்கள் இந்த முகாமில் பங்குபற்றுவர்.

இதில் கலந்துகொண்டு இரத்தப் பரிசோதனை மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுப் பயன்பெறுமாறு சங்கானை றோட்டறக்ட் கழகத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-10)

# செவ்வாய்க்கு ஒத்திவைப்பு

தென்மராட்சி, நவ.7

பளையில் இன்று ஞாயிறு இடம்பெறவிருந்த உயர்மட்ட அதிகாரிகளின் கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த இக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்றும் பிரதேச மக்களை அன்றையதினம் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 22 | : | 08.11.2010 திங்கட்கிழமை |
| திதி: | : | துதியை மு.ப.09.00 வரை |
| நட்சத்திரம் | : | அனுசம் மு.ப.11.23 வரை |
| சுபநேரம் | : | 12.05-01.35 வரை |
| ராகுகாலம் | : | 07.35-09.05 வரை |

# உயிர்த்தெழுதலும் - நாமும்

இன்றைய நற்செய்தி வாசகத்தில் உயிர்த்தெழுதல் உண்மையா? பொய்யா? என்ற விவாதம் ஒன்று இயேசுவிற்கும், சதுசேயருக்கும் இடையே நடைபெறுவதை நாம் அறிந்து கொள்கின்றோம். (லூக் 20 : 27 - 40) இந்த விவாதத்தை ஆரம்பிக்கும் சதுசேயர் மோசேயின் திருச்சட்டத்தை சுட்டிக் காட்டி (இ.ச. 25 : 15) சகோதரர் ஏழு பேர் இருந்தனர். மூத்தவன் ஒரு பெண்ணை மணந்து மகப்பேறின்றி இறந்து போனார். இரண்டாம், மூன்றாம் சகோதரர்களும் அவரை மணந்தனர். இவ்வாறே எழுவரும் மகப்பேறின்றி இறந்தனர். கடைசியாக அப் பெண்ணும் இறந்தார். அப்படியானால் உயிர்த்தெழும் போது அவர் அவர்களுள் யாருக்கு மனைவி ஆவார்?




இந்த சதுசேயருடைய எண்ணம் இதற்குரிய தெளிவான விளக்கத்தை இயேசு மூலமாக பெற்றுக்கொள்வதல்ல. மாறாக இயேசுவை இந்தக் கேள்வியில் சிக்கவைத்து அவரை அவமானப்படுத்துவதுடன் அவரது போதனைகளையும் பொய்யானவை என்பதை மக்கள் முன் நிரூபிக்க வேண்டும் என்பதேயாகும். காரணம், இந்த சதுசேயர் இயேசுவின் போதனைகளை விமர்சித்ததுடன் ''வான தூதரும், உயிர்த்தெழுதலும், ஆவிகள் இல்லை'' (தி.பா - 23: 8) அது பொய்யான போதனையே என்று எடுத்துக்கூறி வந்தார்.

ஆனால் இயேசுவோ சதுசேயரை நோக்கி இக்கால வாழ்வில் மக்கள் திருமணம் செய்கின்றார்கள். ஆனால் வருங்கால வாழ்வைப்பெற யாரும் இறந்து உயிர்த்தெழும் போது திருமணம் செய்து கொள்வதில்லை. இனி அவர்கள் சாகமுடியாது.

அவர்கள் வானதூதரைப் போல் இருப்பார்கள். உயிர்த்தெழும் மக்களாய் இருப்பதினால் கடவுளின் மக்களே என்று கூறியதுடன் கடவுள் மோசேயிடம் ''ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்'' (வி.ப. 3: 6) என்று கூறியுள்ளதை அவர்களுக்கு எடுத்துக்காட்டி, அவர் இறந்தோரின் கடவுள் அல்ல, வாழ்வோரின் கடவுள் என்பதை தெளிவு படுத்தியதுடன் ''உங்களுக்கு மறைநூலும் தெரியாது. கடவுளின் வல்லமையும் தெரியாது'' (மத் 22 : 29) என்று கண்டிக்கிறார். இயேசுவின் இப்பதிலைப் கேட்ட அங்கிருந்த மறைநூல் அறிஞர்கள் ''போதகரே நன்றாகச் சொன்னீர் என்று பாராட்டினர்.''

அன்று சதுசேயர் மறைநூலில் தமக்குச் சார்பான சிலவற்றை வைத்து மக்கள் மத்தியில் தவறான சிந்தனைகளை ஏற்படுத்தியது போன்று இன்றும் சிலர் வேதாகமத்திலே தமக்குச் சார்பான சிலவற்றை எடுத்து எம்மத்தியிலே விவாதம் செய்வதுடன், எமது திருச்சபையைப் பற்றித் தவறான கருத்துக்களைக் கூறியும் வருகின்றனர். இதனால் எம்மில் சிலர் அவர்களுடன் இணைந்து கொள்கின்றனர். இதற்குக் காரணம் எமக்கு வேதாகமமும் தெரியாது, திருச்சபையின் பாரம்பரிய வரலாறும் தெரியாததே ஆகும். ஆகவே எமக்குரிய சந்தேகங்களை எமது குருக்கள் மூலமாகப் பெற்றுக் கொண்டு திருச்சபையின் மக்களாக வாழ்வோம்.

க.அருள்நேசன், குருநகர்.

# வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை

சஷ்டியை நோக்க சங்கடங்கள் தீர்ந்திடும்
இஷ்ட நாயகனாம் இளையவனை நினைந்திடில்
கஷ்டங்கள் தீரும் கவலைகள் விலகிடும்
நிஷ்டை செய்வோம் இவ் மூவிரு நாள்களிலும்

மானிடம் மேன்மையுற மாட்சிமை பொங்கிட
பேணி வணங்கிடுவோம் பேரானன் சூர சம்காரனை
ஏணியில் ஏற்றிடுவான் எங்கள் திருப்பரங்குன்றத்தான்
நாணிக் குறுகிடும் நம்மன ஆணவம்

வாராயோ கந்தா திருச்செந்திலுறை சோதியே
பாராமல் பார்த்திடுவாய் பழம் நீயாய் பழனியிலே
சோராமல் வாழ சுவாமி மலை மீதிலே சோதியானவனே
காரானா திருத்தணிகையனே பழமுதிர்ச் சோலையுறை முருகா.

தெல்லியூர் தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வல்லியப்பர் கோபாலப்பிள்ளை

**(வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்)**



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா என அழைக்கப்படும் வல்லியப்பர் கோபாலப்பிள்ளை (வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்) (05.11.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வல்லியப்பர் மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், நாகர் சிவபாக்கியத்தின் அன்பு மருமகனும்,நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் புஸ்பாகரன்(கொலன்ட்), புஸ்பதீபன், கஜன், கஜந்தினி, ராகுலன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும் ஜான்சி (கொலன்ட்), வனஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கொலன்டில் வசிப்பவர்களான அருன், சயன், கஜன் ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.11.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(105673)

## திருமதி வாசுகி ஜெயப்பிரகாசன்



திருவையாறைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட வாசுகி ஜெயப்பிரகாசன் 01.11.2010 இல் காலமானார்.

அன்னார் குமாரசுவாமி ஜெயப்பிரகாசன் அவர்களின் அன்பு மனைவியும் கோபாலபிள்ளை - நாகம்மா தம்பதியரின் பாசமுள்ள புத்திரியும் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி (மாஸ்ரர் நெடுந்தீவு) - தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகளும் அஸ்வின், பிரவீன் ஆகியோரின் பாசமுள்ள அம்மா வும் தாசன் (சுவிஸ்), கனடாவில் வசிப்பவர்களான கருணா, சந் திரதாசன், ஜானி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இந்திரா தேவி (சுவிஸ்) கனடாவில் வசிப்பவர்களான மதிவதனி, பிரபாநந் தினி, ரகுகுலன், ஜெயகௌரி சக்திவடிவேல், ஜெயகுமார், ஜெயதீஸ்வரி பாலமுகுந்தன், ஜெயபாரதி விமலன் (யா/நல்லூர் சென் பெனடிக்ற் வித்.) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.11.2010) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(105671)

36/12, செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்:
கு.விமலன்.

# கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.7

வடமாகாண கோட்டக் கல்வி பணிப்பாளருக்கான கூட்டம் நாளை திங்கட் கிழமை காலை 9 மணிக்கு வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெற உள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம் பெறும் மேற்படி கூட்டத்தில் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பில் கலந்து ரையாடல் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (201-15)

# தெல்லிப்பழை அம்மனுக்கு புதிய காண்டாமணி

வலி.வடக்கு,நவ.7

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்திற்கு லண்டனில் இருந்து புதிய காண்டாமணி ஒன்று எடுத்து வரப்படவுள்ளது.

924 கிலோ நிறையுடைய இக்காண்டா மணி லண்டனில் வாழும் துர்க்கையம்மன் அடியவர்களினால் ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் இம் மணியைப் பொருத்துவதற் காக மணிக்கூண்டுக் கோபுரம் ஒன்றை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-86)

# முல்லைக்கான பஸ்சேவை; இன்றுமுதல் பாதை மாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.7

பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவிற்கான பஸ்சேவை இன்றுமுதல் பரந்தன், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஊடாக நடைபெறும். இதுவரை காலமும் மாங்குளம், ஒட்டுசுட்டான், முள்ளியவளை ஊடாக இடம்பெற்று வந்த இந்த பஸ் சேவைக்கு 150 ரூபா ஒரு வழிக்கட்டண மாக அறவிடப்பட்டது.

தற்போது இச்சேவை பரந்தன், விசுவமடு, புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு, முள்ளியவளை ஊடாக முல்லைத்தீவிற்கு இடம்பெறும். இச்சேவைக்கு ஒரு வழிக் கட்டணமாக 120/= அறவிடப்படும். (ஐ-319)

# நித்திய கருமவிதி விளக்கநூல் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.7

ஐப்பசி மாத வெள்ளிக்கிழமையன்று சிவதீட்சை பெறுகின்ற சிவனடியார்கட்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இயற்றிய ''நித்தியகருமவிதி'' என்னும் விளக்க நூலை இல.525/2, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மில்க்வைற் தொழிலகத்தில் வைத்து காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் அன்பளிப்பாக வழங்கவுள்ளதாகத் அதன் உரிமையாளர் இதய கோபால் தெரிவித்தார். (ஐ)

# சர்வமத பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,நவ.7

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தினால் எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சர்வமத பிரார்த்தனை நிகழ்வொன்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட 4 ஆம் வருட மாணவன் கா.கௌரீசன் அவர்களின் அன்பு அண்ணன்



## காராளசிங்கம் வரதன்

அகால மரணமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

4 ஆம் வருட முகாமைத்துவ மாணவர்கள்

# மரண அறிவித்தல்

## துரையப்பா பொன்னுத்துரை



புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா பொன்னுத்துரை நேற்று (06.11.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா- வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா- யோகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான கோபாலப்பிள்ளை, சுப்பிரமணியம், நடராசா, இலட்சுமி, கந்தசாமி, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்னம்மாவின் கணவரும் மகேஸ்வரி, பிறேமா, குகநேசன், இரத்தினேஸ்வரன், சிவனேஸ், ரகுனேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருளானந்தம், சிவனேஸ்வரன், கலாநிதி, ஸ்ரீதேவி, வனிதா, காஞ்சனா ஆகியோரின் மாமனும் யோசெவ், தங்கராசா (ஜேர்மனி), வசந்தாதேவி (கனடா), கமலாம்பிகை (கனடா), அமரர் இராசலிங்கம் மற்றும் சுந்தரேஸ்வரி, சத்தியபாமா ஆகியோரின் மைத்துனரும் நிறஞ்சிதன், கஜன், சிந்துஜா, சுஜன், சிந்துஜன், திவ்விகா, யதுசன், தவராஜ், யசிந்தன், மயூரி, நிந்துஜா, ஜீவிதன், கஜீபன், யதுசன், லிதுனா, சானுஜன், அஷ்சயா, சுரேன், துவாரகா ஆகியோரின் பேரனும் ஜனுஜனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல.91, பிரதான வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

91, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குகநேசன்
(மகன்-நேசன்)

(105679)

# கண்ணீர் அஞ்சலி



எனது அருமை மைத்துனர்
வல்லியப்பர் கோபாலப்பிள்ளை (தங்கராசா)
(வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்)
அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

மைத்துனர்,
ஐ.மகேந்திரன் குடும்பம்.

(105674)

# வேலை வாய்ப்பு

## விற்பனை பிரதிநிதி

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி பிரதேசங்களில் எமது உற்பத்திப்பொருட்களை (மரக்கறி விதைகள், சோள விதைகள், விதை உருளைக்கிழங்கு, விஷேட பசளைகள், மற்றும் பீடை நாசினிகள்) விற்பனை செய்வதற்கு கீழ் குறிப்பிட்டுள்ள தகைமைகளை உடைய சிறந்த ஒரு தமிழ் நபரை எதிர்பார்க்கின்றோம்.

- மேல் குறிப்பிட் துறையில் அனுபவமும் அறிவும் உடைய மிகவும் ஈடுபாட்டுடன் வேலை செய்யக்கூடியவர்
- விவசயா துறையில் பட்டப்படிப்பு அல்லது டிப்ளோமா தகைமை பெற்றிருத்தல்
- திருமணமாகாத 25-30 வயதுக்குட்பட்டவராயிருத்தல்
- ஆங்கிலம், சிங்கள மொழிகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்

தலைமை தாங்கும் தகுதியும், தனது தொழிலை பெருமையாக கருதி நிறுவனத்தின் தராதரங்களை பேணி வேலை செய்ய விரும்புவர்களும் மாத்திரமே விண்ணப்பிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

**தன்னம்பிக்கையுடைய விண்ணப்பதாரிகள் 7 நாட்களுக்குள் தங்களது முழுமையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

Human Resources Manager
**Opex Agro (Pvt) Ltd.**
No.127, W.A.D. Ramanayake Mawatha,
Colombo 02.
E-mail: hr@opexagro.com

# தேவை

வீதி அபிவிருத்தி வேலைக்குப் பின்வருவோர் தேவைப்படுகின்றார்கள்.

1. Excavator Operator ஒருவர் (01)
2. Tipper Operators மூன்றுபேர் (03) (கனரக வாகன ஓட்டுனர்)
3. Wheel Loader Operators இரண்டுபேர் (02)

China Railway No.5,
தொடர்பு: மைக்கல், தொ.பே.: 0778454272
No. 126, சொலமன் லேன்,
ஒல்ட்பாக் றோட்,
யாழ்ப்பாணம்.

(105682)

# VACANCIES

Euroville Engineers and Constructors {pvt} Ltd, an ISO 9001:2008 certified company is in the lookout for suitably qualified persons to fill to following positions. Applicants should be dynamic persons and should be able to work independently with initiative. Remuneration package includes salary and incentives. Applicants should be between 24 to 40 years of age.

| POSITION | QUALIFICATION |
|---|---|
| *1. Technical officer* | *NDT, NDES, HNDE or equivalent* |
| *2. Civil Engineer* | *B.Sc (Eng) or equivalent* |
| *3. Accountant* | *ACA, ACCA, CIMA or equivalent* |
| *4. Book Keepar* | *AAT* |

Experience in the respective fields would be considered as additional qualification. Interested applicants are requested to forward their CV to reach the following address on or before 14th November 2010.

***The Establishment Manager,***
***Eurovlle Engineers and Constructors (pvt) Ltd,***
***No. 45, Forest Office Lane, Jaffna.***

(C-572705)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெல்லின் உத்தரவாத விலையை அதிகரிக்க உதவுமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய்,நவ.7

நெல் உற்பத்திச்செலவு என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதால் அதற்கேற்றவாறு நெல்லின் உத்தரவாத விலையையும் அதிகரிக்குமாறு பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டறவுச் சங்கத் தலைவர் வலி.தென் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரிடம் கோரியுள்ளார்.

வலி.தென் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றபோது இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பண்டத்தரிப்பு பல நோக் குக் கூட்டறவுச்சங்கத் தலைவர் நெல் உற்பத்தி குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:-

குடாநாட்டு விவசாயிகள் மழையை நம்பியே காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள். கூலி உட்பட நெல் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதால் விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் சென்ற வருடம் நெல்லைச் சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதுடன் அவர்கள் நெற்செய்கையில் ஈடுபடப் பின்னடிக்கின்றார்கள். எதிர்காலத்தில் நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் நெல்லின் உத்தரவாத விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுள்ளது -என்றார்.

இதே வேளை-

விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக விவசாயக் கிணறுகளைப் புனரமைத்துத் தரும்படியும் பயிர்களுக்கு நீர் இறைப்பதற்கு மின்சார வசதியை ஏற்படுத்தித் தரும்படியும் தலைவர் மேலும் கேட்டுக் கொண்டார். (சு-115)

## தபால் அமைச்சின் செயலர் நாளை வருகிறார்

யாழ்ப்பாணம், நவ.7

தபால் தொலைத்தொடர்பு அமைச்சின் செயலாளர் அசோகா ஜெயவர்த்தனா நாளை யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொள்கிறார்.

காலை 8.30 மணிக்கு யாழ். பிரதம தபால் நிலையத்துக்கு வருகை

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

செய்யும் அவர் அங்கு மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிடுவார்.

ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்தும் தபால் சேவையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் தபாலாக அதிகாரிகளுடன் அவர் ஆராய்வார். (ஐ)

## எழுத்தாளர் பரமசாமியின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.7

ஓய்வுபெற்ற அரசகரும மொழித் திணைக்கள மொழி பெயர்ப்பாளரான இணுவையூர் சோ.பரமசாமியின் ''சமய நோக்கில் தமிழ் இலக்கியச் சிந்தனைகள்'' நூல் வெளியீட்டு விழா கடந்த 31 ஆம் திகதி இணுவில் பொது நூலக மண்டபத் தில் யாழ்.பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி க. தேவராஜா தலைமையில் நடை பெற்றது.



கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் ப.கணேசன் வரவேற்புரை வழங்கினார். யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் எஸ். சிவலிங்கராஜா வெளியீட்டுரையையும், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு வை. சோமஸ் கந்தக்குருக்கள் ஆசியுரையையும் வழங்கினர். பேராசியர் எஸ். விசாகரூபன் நூலின் விமர்சன உரை நிகழ்த்தினார். மூத்த எழுத்தாளர் சிற்பி நயப்புரை வழங்கினார். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திருநாவுக்கரசு வாழ்த்துரை வழங்கினார்.

அன்றைய தினம் நூலாசிரியர் மூத்த எழுத்தாளர் சிற்பியினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். நூலாசிரியர் பரமசாமி எழுதிய பன்னிரண்டு கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பரமசாமியின் பெயரை கௌரவ கலாநிதிப் பட்டத்திற்குச் சிபார்சு செய்யப் போவதாக பேராசிரியர் க. தேவராஜா தனது வெளியீட்டுரையில் குறிப்பிட்டார். (த-120)

## சகலகலாவல்லி வித்தியாலயம் 10ஆம் திகதி கையளிக்கப்படும்

தென்மராட்சி,நவ.7

தென்மராட்சி தெற்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்து வருவதால் அது எதிர்வரும் பத்தாம் திகதி அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது.

யுத்த அனர்த்தங்களால் முழுமையாகச் சேதமடைந்த வித்தியாலய கட்டடங்களைச் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினர் புனரமைத்துள்ளனர்.

எதிர்வரும் பத்தாம் திகதி வித்தியாலயம் கையளிக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - இப் பகுதியில் உள்ள வீதிகளும் துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது. (த-207)

## துர்க்கையம்மன் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு துரிதகதியில் புனரமைப்புப் பணி

வலி.வடக்கு, நவ.7

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய கும்பாபிஷேகத்தையொட்டி ஆலயத்தில் கட்டடப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து வந்துள்ள சிற்பிகள் சுமார் எண்பது பேருடன் யாழ்.குடாநாட்டுத் தொழிலாளர்களும் இணைந்து கட்டடப் பணியைமுன்னெடுத்து வருகின்றார்கள்.

தற்போது கட்டடத்தின் தூண்கள் மற்றும் கூரை வேலைகள், மணிக்கூட்டுக் கோபுரப் பணிகள் . இடம்பெற்று வருகின்றன. ஆலய உள்வீதியின் கூரைகள் அகற்றப்பட்டு சிமெந்து பிளேட்டாக மாற்றப்படும் பணிகள் தற்போது இடம்பெற்றுள்ளன.

இதேவேளை இருநூறுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் இப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பல லட்சம் ரூபா செலவில் இப் புனருத்தாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இக்கட்டடப் பணிகளுக்கான உதவிகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வதியும் அடியவர்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (201-86)

## அலங்கார வளைவுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.7

தும்பளை, நெல்லண்டை பத்திரகாளியம்மன் கோயில் நுழைவாயில் அலங்கார வளைவு அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஆலய பரிபாலன சபைத் தலைவர் சுபா ரவிந்திரன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அலங்கார வளைவு கட்டுவதற்கு என அவுஸ்திரேலியாவில் வசிக்கும் தும்பளைவாசி ஒருவர் 9 லட்சம் ரூபா வழங்கி உள்ளார். (ஐ-236)

# வீதிகளில் அதிகளவு விளம்பரங்கள் சுற்றுலாத்துறைக்கு மிக அசிங்கம்

### ஜேர்மன் தூதரக அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.7

யாழ். மாவட்டத்தின் வீதிகள் தோறும் அதிகளவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர, அரசியல்சார் பதாகைகள் மாவட்டத்தின் சுற்றுலாத்துறைக்கு அசிங்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார் ஜேர்மன் தூதரகத்தின் ஆவணப்படுத்தல் மற்றும் செய்தி விவகாரப் பிரிவின் தலைவர் கைடோ பௌமான்.

நல்லூரிலுள்ள ஜி.ரி இசற் விருந்தினர் இல்லத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்தகால யுத்தத்தின் போது அழிவடைந்த பகுதிகள் யுத்தம் முடிவடைந்த பின்னர் துரிதகதியில் அபிவிருந்தி செய்யப்படவேண்டும். பல்வேறு துறைகளில் அந்த அபிவிருந்தி அடையப்பட வேண்டும். சுற்றுலாத் துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் யாழ். மாவட்டத்தின் வீதிகளில் விளம்பர நிறுவனங்களினதும் அரசியல் சார்ந்தவர்களினதும் அதிகளவான பதாகைகள் காணப்படுகின்றன. மாவட்டத்தில் அபிவிருத்தியை விட விளம்பரப் பதாகைகளையே அதிகம் காண முடிகிறது -என்றார். (த-14)

## நல்லூர் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடத் திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், நவ.7

புதிதாக அமைக்கப்பட்ட நல்லூர் பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழாவும் ''ஊருணி'' நூல் வெளியீடும் இன்று காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில்நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் சகல உத்தியோகத்தர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி நல்லூர் பிரதேச செயலரும், உத்தியோகத்தரும் கேட்டுள்ளனர். (201-311)



வலி.கிழக்கு ஆயுள்வேத பாதுகாப்புச்சபை வலி.கிழக்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் இணைந்து புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தில் கடந்தவாரம் நடமாடும் இலவச மருத்துவ முகாமை நடத்தினர்.

இந்த மருத்துவ முகாமில் சிகிச்சைக்காக காத்துநிற்கும் நோயாளிகளைப் படத்தில் காணலாம்.

*(படம்:-கோப்பாய்ச் செய்தியாளர்)*

# கல்வித்துறையில் சாதனை படைக்கும் கிராமப்புற மாணவரையும் பாராட்ட வேண்டும்

### ஓய்வுபெற்ற அதிபர் உரை

யாழ்ப்பாணம், நவ.7

கிராமப்புறங்களில் கல்வித் துறையில் சாதனை படைப்பவர்கள் அந்தச் சமூகத்தால் பாராட்டப்பட வேண்டும். அதன் மூலம் அவர்களுக்குச் சமூகப் பொறுப்புக் கையளிக்கப்படுகின்றது என்று சுன்னாகம் மக்கள் நலன் புரி மன்றத் தலைவரும், ஓய்வு பெற்ற அதிபருமான சிறில் சுகந்தரன் தெரிவித்தார்.

சுன்னாகம் மக்கள் நலன்புரி மன்றத்தின் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட கல்வியியலாளர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்காலச்சூழலில் கிராமப்புறங்களில் கல்வியாளர்கள் சாதனைகளைப் படைத்து வருகின்றனர். அவ்வாறானவர்கள் அந்தச் சமூகத்தில் உள்ளவர்களால் மதிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட வேண்டும்.

அத்தகைய கௌரவத்தை அவர்களுக்கு வழங்குகின்றபோது அங்குள்ள ஏனைய எதிர்கால மாணவர்களுக்கு அது உந்துதலாக அமையவுள்ளது. அத்துடன் பாராட்டப்படுகின்ற கல்விச் சாதனையாளர்கள் எதிர்காலத்தில் அந்தச் சமூகத்தைக் கட்டியெழுப்புபவர்களாக மாறுவார்கள்.

சுன்னாகம் மக்கள் நலன்புரி மன்றத்தால் கல்விச் சேவைகள் மட்டுமன்றி பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனைச் சிறந்த முறையில் மேற்கொள்ள இப்பகுதியில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்துவருகின்ற நலன்விரும்பிகள் தமது பங்களிப்பையாற்றி வருகின்றனர். அந்தப் பெருந்தகைகள் இத் தருணத்தில்பாராட்டப்பட வேண்டியவர்கள் - என்றார்.

இந்த நிகழ்வில் சுன்னாகம் கதிரைமலைச் சிவன்கோயில் சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள், சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை ரெக்ஸ் சவுந்தரா ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

சுன்னாகப் பகுதியைச் சேர்ந்த 34 கல்விச் சாதனையாளர்கள் இந்த நிகழ்வில் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.(201-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,
தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு,
கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி
கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும்
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(C/564561)



# Digital Offset Press

## Visiting Cards

1/2 மணிநேர சேவை
Hotline 0755 30 30 30

| | |
|---|---|
| 100 Nos | 6.00 |
| 200 Nos | 5.00 |
| 500 Nos | 4.00 |
| 1000 Nos | 2.50 |

NO Positive Plates Colour Separation

## Colour Certificates

| | |
|---|---|
| A4 10-25 | 50.00 |
| A4 26-50 | 40.00 |
| A4 51-100 | 35.00 |
| A4 101-200 | 30.00 |
| A4 Above 200 | 25.00 |

## Plastic Id Cards

| | |
|---|---|
| 1 | 250.00 |
| 2-10 | 200.00 |
| 11-20 | 175.00 |
| 21-50 | 125.00 |
| 51-100 | 110.00 |
| 101-200 | 100.00 |
| 201-300 | 90.00 |
| 301-500 | 80.00 |
| Above 500 | 70.00 |
| Above 1000 | 60.00 |



**Happy Digital Centre (pvt)Ltd**
No-75 1/1, Sri Sumanatissa Mawatha Colombo-12
Tel:0094 11 4937336.


## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.7

சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

இத் தீட்சையை ஏழு வயதிற்கு மேற்பட்ட இருபாலரும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)


**தேவை**

இரும்பு வியாபாரத்தில் அனுபவமுள்ள, அல்லது வேலை பழக விரும்புபவர்கள் உடன் தேவை.
வயது:- 20க்கும் 35க்கும் இடைப்பட்டவர்கள்
**சுதானி ரேடர்ஸ்,** 286, பலாலி, வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இராச பாதை வீதியில் கல்வியியல் கல்லூரிக்கு அண்மையில் நன்னீர் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இருபாலை- பருத்தித்துறை வீதியாலும் இதற்குப் பாதையுண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
0777316127, 0787786737

**தேவை**

நல்லூர் அல்லது அதை அண்டிய பகுதியில் 2 பரப்புக்குள் வீட்டுடன் அல்லது வெறும் காணி தேவை. 0779963186 (தரகர் வேண்டாம்).

**தவறிவிட்டது**

மானிப்பாய்க்கும் வல்வெட்டித்துறைக்கும் இடையில் இராசவீதிப் பகுதியில் கல்விச் சான்றிதழ்கள் அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து த.மனோகரக்குருக்கள், சிவன்கோயிலடி, வல்வெட்டித்துறை என்னும் முகவரியுடன் அல்லது 021 3007783 தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.
(சி/572701)

**பயிற்சி வகுப்பு**

Annan Adrian (Dip. hair and Beauty Care- India), (Glow representative, Eye Channel 11th, 23 rd 10.30am, 15th 10am). மணப்பெண் அலங்காரம், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, Orders எடுக்கப்படும். பயிற்சி வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் உண்டு.
தொலைபேசி: 0771962056/ 2366139/ 2508666.
(சி/572346)


## சலரோக விழிப்புணர்வும் இரத்தப் பரிசோதனையும்

யாழ்ப்பாணம்,நவ.7

306 பி1 மாவட்ட சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படும் சலரோக விழிப்புணர்வும், இலவச இரத்தப் பரிசோதனையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்குச் சாவகச்சேரி நவீன சந்தைச் சதுக்கம், சங்கானை நவீன சந்தைச் சதுக்கம், கோப்பாய் லயன்ஸ்கழக அலுவலகம் ஆகிய இடங்களில் நடைபெறும்.

இதில் 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ஜெயவத்சலன் (எம்.ஜே.எவ்) முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக மாவட்டத் தலைவர் லயன் டாக்டர் மைத்திரி பெரேரா கலந்துகொள்வார். கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள மருத்துவக் குழுக்களினால் நடத்தப்படும் இப்பரிசோதனைகளில் பொதுமக்கள் கலந்து பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)


**8 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு**
**Happy Story Book Album**
புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு மட்டும்

**Platinum Package**
10x28/30 30 Sheets 10,490/= Only
(Printing, Uv Gloss,
Cover print, Binding & Rexsin Box )
12x28/30 30 Sheets 12,490/= Only
(Printing, Uv Gloss,
Cover print, Binding & Rexsin Box )

**Gold Package**
12x28/30 35 Sheets Endura 16,690/= Only
(Printing 3 Matlic ,
Uv Gloss, Binding, Photo Glass Cover
& Rexsin Box , with 12x18 Duro Free )

Hotline 0755 30 30 30



**Happy Digital Centre (pvt)Ltd**
No-75 1/1, Sri Sumanatissa Mawatha Colombo-12
Tel:0094 11 4937336.


**5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு: 18.08.1936
இறப்பு: 07.11.2005



**அமரர் பிலேந்திரன் ஜேம்ஸ்**

ஆண்டு ஐந்து மறைந்தாலும் அப்பா!
நீர் பொழிந்த பாச நினைவுகள் நீங்காது
நிலை வாழ்வு பெற வேண்டுகின்றோம்.

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சென்.மேரிஸ் முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

**எமது நிசான் குட்டியின் ஓராண்டு நினைவலைகள்**

அமரர்
**றிச்சேட் நிசான்**

மலர்வு
20✱04✱1994



உதிர்வு
07✱11✱2009

கண்ணுக்குள் கண்ணாக
பண்புடனும் பாசத்துடனும்
உனைப் பாரினில் வளர்த்தோமே!
கடவுள் எங்களைவிட்டு-உன்னை
இடைநடுவே தன்னிடம் சேர்த்துவிட்டார்
ஏதும் அறியா பச்சிளம் பாலகனாய் நீ
துள்ளித்திரிந்த காலங்கள் நிழல்போல்
மனதில் தோன்றுதே!

நல்ல போராட்டத்தைப் போராடினேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டான்.

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பி, உறவினர்கள்.

இல.14 பெந்தெக்கோஸ்தே லேன்,
அரியாலை.

(105665)


# தமிழ் பயிற்சியாளர்கள் தேவை

இலங்கையின் உறுதியானதும், பாரியதுமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது, நாடளாவியரீதியில் பரந்து, தொழில்நுட்பத்துறையில் மிகுந்த தேர்ச்சியும், 48 வருடகால அனுபவமும் கொண்டு இலங்கை மக்களின் காப்புறுதித் தேவைகளை பரிபூரணமாய் நிறைவேற்றி வருகின்றது. இந் நிறுவனத்தில் இணைந்துகொள்ள தமிழ் பயிற்சியாளர்களுக்கான தொழில்வாய்ப்பு காத்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இவ் விண்ணப்பதாரி நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறிப்பாக வடக்கு கிழக்கு பிராந்தியங்களுக்கான வியாபார முன்னேற்றத்தில் பொறுப்புள்ள பயிற்சியாளராக இருத்தல் வேண்டும்.

## பதவிக்கான தகைமைகள்:

- மனித வள முகாமைத்துறை வியாபார முகாமைத்துவம் அல்லது வியாபார நிர்வாகம் ஆகியவற்றில் பட்டதாரியாகவிருத்தல் வேண்டும்
- தமிழ், ஆங்கில தொடர்பாடலில் தனி ஆற்றலும், சிங்கள மொழித் தொடர்பாடல் விஷேட தகைமையாகவும் கொள்ளப்படும்
- கணனித்துறையில் தனி ஆற்றல் கொண்டிருத்தல் வேண்டும்
- தலைமைப் பொறுப்புடன் நிறுவனத்தின் சேவைக் குழுவினை கொண்டு நடாத்தும் ஆற்றல்
- நாடெங்கும் பரவலாகப் பயணித்தல்
- வடக்கு மாகாணத்தை வதிவிடமாகக் கொண்டோரும் விண்ணப்பிக்கலாம்
- விண்ணப்பதாரி 30 வயதிற்குக் குறைந்தவராயிருத்தல் வேண்டும்.

## சலுகைகள்:

வருடாந்த போனஸ், மருத்துவ காப்பீடு, ஏனைய அனுகூலங்கள் அடங்கிய கவர்ச்சிகரமான ஊதியம்.

நீங்கள் மேற்கூறிய தகைமைகளைக் கொண்டிருப்பின் உடனடியாக இம் முன்னணி நிறுவனத்துடன் இணைந்து உங்கள் ஆற்றலை வெளிக்காட்டுங்கள். உங்களது சுயவிபரத்தினை உறவினரல்லாத இரு நபர்களின் பெயர் முகவரியுடன், இவ் விளம்பரத்தைக் கண்ட 7 வேலை நாள்களுக்குள் கீழ்காணும் முகவரிக்கு அல்லது jobs@srilankainsurance.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தபால் மூலம் அனுப்புவதாயின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிடவும்.

**உதவிப் பொது முகாமையாளர்** - HR
**ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் லிமிட்டட்,**
**இல.21, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு 2.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயற்செய்கை தொடர்பான கூட்டங்கள் இல்லை; அழிவுகளைச் சந்திக்கும் ஒட்டுசுட்டான் வயல்கள்

முல்லைத்தீவு,நவ.7

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வயற்செய்கை தொடர்பான கூட்டங்கள் இதுவரை நடைபெறாமையால் கட்டுப்பாடுகள் யாவும் தளர்ந்த நிலையில் நெற்பயிர்கள் அழிவுகளைச் சந்தித்து வருகின்றன.

ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்திற்குட்பட்ட கற்சிலைமடு, பெரியகுளம், பெருங்கருவேப்ப முறிப்புக் குளம், துவரமோட்டைக்குளம், காஞ்சுரமோட்டைக்குளம், சின்னக்குளம் ஆகிய குளங்களின் கீழ் காலபோக நெற்செய்கைகள் 90 வீதம் பூர்த்தியடைந்துள்ளன. ஆனால் வயற்செய்கைக் கூட்டங்கள் நடத்தப்படாததால் கட்டுப்பாடுகள் யாவும் தளர்ந்து பயிர்களுக்குச் சேதம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

கட்டுப்பாடுகள் எதுவுமில்லாததால் இரவு பகலென வித்தியாசமின்றிக் கால் நடைகள் கட்டாக்காலிகளாக அலைந்து திரிகின்றன. வேலிகள் அடைக்கப்படாமையால் இவை நெல் வயல்களுக்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்துகின்றன. தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் நெற்பயிர்கள் செழிப்பாக வளர்ந்து வரும் நிலையில் கால்நடைகளினால் ஏற்படுத்தப்படும் அழிவுகள் விவசாயிகளுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தாம் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் செய்கை பண்ணிய நெற்பயிர்கள் தமது கண்களுக்கு முன்னாலேயே அழிவதை இவர்களால் பொறுக்க முடியாதுள்ளது.

கற்சிலைமடு கமக்காரர் அமைப்பு இதையெல்லாம் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. இதற்கு கமநலச் சேவைகள் உதவி ஆணையாளர்தான் தீர்வொன்றை வழங்க வேண்டுமெனப்பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-500)

## மாணவர்கள் சமுகமளிக்கவும்

முல்லைத்தீவு,நவ.7

முல்லைத்தீவு, விசுவமடு மகாவித்தியாலயத்தினூடாக க.பொ.த (சா/த) பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்களின் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் புள்ளி விவரங்களுடன் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (க-ற)

வன்னி வலம்

## கிளி. சாரணர் ஒன்று கூடல் 13 ஆம், 14 ஆம் திகதிகளில்

கிளிநொச்சி,நவ.7

கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஒன்றுகூடல் இந்தமாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இருநாள்கள் நடைபெறவிருக்கும் இந்த ஒன்று கூடல் 13 ஆம் திகதி ஆரம்பமாகி 14 ஆம் திகதி மாலை 4மணியளவில் நிறைவு பெறும்.

இந்த ஒன்று கூடலுக்கான சகல ஏற்பாடுகளையும் கிளிநொச்சி மாவட்ட சாரணர் அனைவரும் சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் செ.சுப்பிரமணியம் கேட்டுக்கொண்டுள்ளார். சாரணர் தலைவர்கள் சாரணர்களின் திறமைகளை விருத்தி செய்யும்படியான பங்களிப்பினை நல்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலதிக தகவல்களைப் பெறும் பொருட்டுத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே இது தொடர்பான அறிவுறுத்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-496)

## இடமாற்றம்

முல்லைத்தீவு,நவ.7

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபரான செ.தயானந்தா யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இவரது இடத்திற்கு எஸ். கோணேஸ்வரன் நியமிக்கப்பட்டு கடமைப் பொறுப்புக்களையும் ஏற்றுள்ளார்.

இந்த பிரதேசத்தில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டு வரும் வேளையில் உதவி அரசாங்க அதிபரின் பணிகள் முக்கியம் வாய்ந்தவையாகும். (க)

## புதிய உதயம்



கிளிநொச்சியில் தேசிய சேமிப்பு வங்கியின் கிளையொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதில் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர், மத்தியவங்கியின் ஆளுநர் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

(படங்கள்: கிளிநொச்சி செய்தியாளர்)

## மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் அடிமட்டத் தேவைக்கான பகுப்பாய்வுக் கூட்டம்

முல்லைத்தீவு,நவ.7

கற்சிலைமடுவில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் அடிமட்டத்தேவைக்கான பகுப்பாய்வுக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தின் மீள் எழுச்சி கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவரான சி. ஜெயரத்தினம் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தினை கிராம அபிவிருத்தி அமைப்பின் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளரான மன்மதன் ஒழுங்குபடுத்தியிருந்தார்.

இதில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் கற்சிலைமடுக் கிராமத்தில் மேற்கொள்ளவேண்டிய அத்தியாவசியமான வேலைத் திட்டங்களை முன்மொழியுமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதனைத் தொடர்ந்து திருத்தப்படாத உள்ளூர் வீதிகள் பற்றியும் முன்பள்ளிகள் அமைத்தல், பொதுநூலகம் அமைத்தல், பொதுச் சந்தை அமைத்தல் போன்றவை பற்றியும் அங்கு கூடியிருந்த மக்களால் முன் மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் இந்த வேலைகள் ஒவ்வொன்றாக ஆரம்பிக்கப்படும் எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சுமார் 150 க்கும் மேற்பட்ட பொது மக்கள் இந்தக் கூட்டத்தில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். (க-500)

## மயானம் இல்லாத காரணத்தால் உடல்களை அடக்கம் செய்வதில் சிரமம்

முல்லைத்தீவு,நவ.7

ஒட்டுசுட்டான் கிராம மக்கள் பொது மயானம் இல்லாததால் இறந்தவர்களை அடக்கம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த மக்கள் ஒட்டுசுட்டான் வெடுக்குநாறிக் குளத்திற்கு அருகில் இருந்த மயானத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்து வந்தனர். தற்போது அந்தப் பகுதியில் இராணுவம் நிலை கொண்டிருப்பதால் மயானம் இயங்குவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பிரதேச மக்கள் இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றார்கள்.

ஆகவே இந்த மக்களின் அவசர தேவையான மயானத்தை அமைத்து வழங்குமாறு உரியவர்களிடம் இந்தப் பிரதேச மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(க-500)

## கல்லுக்கு அதிக விலை

முல்லைத்தீவு,நவ.7

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தற்போது வீடுகள் அமைக்கப்பட்டுவரும் நிலையில் அதிகவிலை கொடுத்துக் கற்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர்.

ஏற்கனவே இங்கே இயங்கி வந்த கல் விற்பனை நிலையம் இயங்காதுள்ளது.

இதனால் 4 ஆயிரம் ரூபாவுக்கு வாங்க வேண்டிய கல்லுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் கல்லையும் தென்பகுதியிலிருந்தே கொண்டுவர வேண்டியுள்ளது.

எனவே இந்தப் பிரதேசத்தில் முன்னர் இயங்கிவந்த கல் விற்பனை நிலையத்தை மீளவும் ஆரம்பிக்க வேண்டுமென மக்கள் கூறுகின்றனர். (க-500)

## தமிழில் தேசிய கீதத்தைப் பாடத்தடை

### சிறிதரன் எம். பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,நவ.7

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இலங்கைத் தேசிய கீதத்தைத் தமிழில் பாடுவதற்கு இராணுவம் அனுமதி மறுத்து வருகிறது. இது சிங்கள மேலாதிக்கத்தின் உச்சக்கட்டமே என குற்றம் சாட்டியுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்திலும் சுட்டிக் காட்டி அரசின் கவனத்துக்கு கொண்டு வரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தேசிய கீதத்தைத் தமிழில் பாடுவதற்கு இராணுவம் அனுமதி மறுத்த சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன.

அண்மையில் கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வின்போது தேசிய கீதத்தைத் தமிழில் பாட ஆரம்பித்த போது அங்கிருந்த இராணுவத்தினர் தேசிய கீதத்தை தமிழில் பாடுவதை உடனடியாக நிறுத்துமாறு மாணவர்களுக்குத் கட்டளை இட்டனர். அது மட்டுமன்றி சிங்கள மொழி யிலான தேசிய கீதத்தை 'கசற்' மூலம் ஒலிக்கச் செய்யவும் அவர்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டனர். இது போன்ற சம்பவங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பரவலாக இடம்பெற்று வருகின்றன.

இது மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மலையாளபுரத்தில் உள்ள அபிவிருத்திச் சங்கம் ஒன்றின் தலைவராக புலனாய்வுத்துறையைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் சில பாடசாலைகளின் பெயரையும் மாற்றியமைக்கும் முயற்சியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இந்த சம்பவங்கள் கிளிநொச்சி மாவட்ட இராணுவ அதிகாரிகளின் தலைமையிலேயே இடம்பெறுகின்றன.

இவை போன்ற இராணுவ ரீதியான நெருக்கீடுகள், ஆக்கிரமிப்புகள் காரணமாக மக்கள் அச்ச உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர். சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழ விரும்பும் மக்களை மீளவும் நெருக்கடி நிலைக்குள் தள்ளி தமிழ் மக்கள் யுத்தத்தையே விரும்புகின்றனர் என சர்வதேசத்துக்கு காட்ட இந்த அரசு விரும்புகிறது.

ஒரு நாடு ஒரே மக்கள் என்று கூறிக் கொண்டு தமிழ் மக்களை [illegible] (த-14)

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு நெலுக்குளத்தில் புதிய அலுவலகம்

வவுனியா,நவ.7

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு நெலுக்குளத்தில் அலுவலகக் கட்டடமொன்று அமைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலர் இம்மாதம் 24 ஆம் திகதி வரை இதற்குரிய கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

மூன்று கோடி 87 லட்சம் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் வட மாகாண சபையினால் பல உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நகரில்



# IELTS இன்றி
## Spot Admissions
# மூலம் UK இல்
# உயர் கல்வி

## West End College London

| | | |
|---|---|---|
| இடம் | : | Green Grass Hotel & Restaurant \| 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna. |
| திகதி | : | 20th November 2010 |
| நேரம் | : | காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை |

Spot Admission by the College Representatives
**Ms. Hannah Bilcliffe & Ms. Marie Lovett**

**VISA** பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும்

**இலவசம்**

**O/L** உடன் குறைந்த கட்டணத்தில்!

தேவையான ஆவணங்கள்

- சுயவிபரக் கோவை (CV)
- கடவுச்சீட்டின் பிரதி (Passport Copy)
- கல்விச் சான்றிதழ்கள் (O/L, A/L உள்ளடங்கலாக)

**flex Institute**
*Step Towards a Bright Future*
(A Subsidiary of Flex Graphic)

**For appointment please contact :**
**0777-761346**

**4, IBC Road, Wellawatte, Colombo 6.**
E-mail: flexinstitute@sltnet.lk
Web: www.flexinstitute.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா நலன்புரி முகாம்களில் 17,641 அகதிகளே உள்ளனர்

## அரசு தகவல்

கொழும்பு, நவ.7
வவுனியா நலன்புரி முகாம்களில் தற்போது 17,641 அகதிகள் மட்டுமே தங்கியுள்ளனர் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள 1,158 அகதிகள் அடங்கலாக மொத்தமாக 18,380 அகதிகளே நிவாரண முகாம்களில் உள்ளனர் என மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

கதிர்காமம் நலன்புரி முகாமில் 4,011 பேரும், ஆனந்தகுமாரசுவாமி முகாமில் 5,612 பேரும், இராமநாதன் நலன்புரி நிலையத்தில் 2,327 பேரும், அருணாசலம் மற்றும் மெனிக்பாம் நலன்புரி நிலையங்களில் முறையே 2,569 பேரும், 2,703 பேரும் இருக்கின்றனர் என அமைச்சின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்குப் புறம்பாக சுயாதீன அமைப்புகளின் முகாம்களில் 11,780 பேர் இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசு இதுவரை 65,271 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 12,094 பேரை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றியுள்ளது.

இதற்குப் புறம்பாக மருத்துவம், மனிதாபிமானம், வயோதிபம், நீதிமன்ற உத்தரவு, வெளிநாட்டுக் கடவுச்சீட்டு உரிமையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அநாதைகள், மதகுருமார் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் என தேவைகளின் அடிப்படையில் 27,652 பேரை விடுதலை செய்துள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை வடபகுதியின் 5 மாவட்டங்களில் 396 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன என ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான ஒத்துழைப்புக்கான அலுவலகம் தெரிவித்துள்ளது. அதேவேளைமேலும் 196 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலேயே கண்ணி வெடிகள் அகற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)



வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பாரியார் திருமதி கௌரி சண்முகலிங்கன் பரிசில் வழங்குவதையும் -

அருள்நெறி மன்றத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா மலரான 'அருளமுதம்' மலரின் நூல் வெளியீட்டுரையை கலாநிதி மா.வேதநாதன் நிகழ்த்துவதையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:-கோப்பாய்ச் செய்தியாளர்)

# கஞ்சா வியாபாரி கைது

மட்டக்களப்பு, நவ. 7
வாழைச்சேனை பிரதேசத்தில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் போது 850 கிராம் அரைத்த கஞ்சாத் தூளும் 350 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.ஏ. ஜே.எஸ்.கொடிசிங்க தெரிவித்துள்ளார். (த319)

# சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் நிரந்தர இணைப்பைப் பெறமுடியாது

## மின்சக்தி அமைச்சு தீர்மானம்

கொழும்பு, நவ. 7
சட்ட விரோதமான முறையில் மின் இணைப்பைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு நிரந்தரமாக மின் இணைப்பைப் பெற்றுக்கொள்ள முடியாதவாறு அவர்களது விண்ணப்பங்களை ரத்து செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மின் சக்தி, எரிசக்தி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சட்ட விரோதமான முறையில் மின் இணைப்பைப் பெற்ற 292 பேர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் இந்தத் தீர்மானம் செயற்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சுத் தெரிவித்தது. அத்துடன் கடந்த சில தினங்களில் சட்ட விரோதமான முறையில் மின்சார இணைப்பைப் பெறமுயன்ற சிலர், மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (05)

# சாவகச்சேரி பிரதேச சபைக்கு புதிய இரண்டு மாடிக் கட்டடம்

நாவற்குழி, நவ. 7
சாவகச்சேரி பிரதேச சபைக்கு இரண்டுமாடிகளைக் கொண்ட மாநாட்டு மண்டபத்துடன் இணைந்த ஓர் அலுவலகக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரின் பணிப்பின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டடம் அமைக்கும் திட்டத்தின் கீழ் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியுமென அறிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபைக்கு 2 கோடி 90 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. கொடிகாமத்தில் இந்தக் கட்டடம் அமையும்.(த-121)

# டிப்ளோமாதாரிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 7
உயர்தேசிய ஆங்கில டிப்ளோமா (HNDE) கற்கைநெறியைப் பூர்த்தி செய்து இதுவரை நியமனம் கிடைக்காத ஆசிரியர் தொழிலை விரும்புகின்ற டிப்ளோமாதாரிகள் நாளை திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் ஆங்கில பாடத்துறைத் தலைவரை சந்திக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-201)

# திடீர் விபத்துக்களால் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

## கொழும்பு தேசிய வைத்தியசாலை தகவல்

கொழும்பு, நவ. 7
திடீர் விபத்துகள் காரணமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியங்கள் இருக்கின்றன என கொழும்பு தேசிய வைத்தியசாலை திடீர் விபத்துப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ஆரியவன்ஸ தெரிவித்துள்ளார்.

அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் பெரும்பாலானோர் திடீர் விபத்துகள் காரணமாகவே சேர்க்கப்படுகின்றனர் எனவும், 1995 ஆம் ஆண்டு முதல் இதுவரை வெளியான அறிக்கைகளின் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

கடந்த வருடம் முதல் ஒன்பது மாதங்களில் விபத்து கள் காரணமாகச் சேர்க்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 27 வீதமாகக் காணப்பட்டது. அத்துடன், இவ்வெண்ணிக்கை இவ் வருடம் 28.5 வீதமாக அதிகரித்துள்ளது எனவும் டாக்டர் பிரசாத் ஆரியவன்ஸ தெரிவித்தார்.

விபத்துகள் காரணமாக சேர்க்கப்படும் நோயாளர்களுக்காக ஒருசில சந்தர்ப்பங்களில் நோயாளி ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா செலவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (சி)

# சைப்ரஸ் மரங்கள் வெட்டுவதை உடன் நிறுத்துமாறு பணிப்புரை

## நுவரெலியா நகருக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

கொழும்பு, நவ. 7
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நுவரெலிய நகருக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். நுவரெலியா ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற தீபாவளிக் கொண்டாட்டங்களுக்காகவே அவர் அங்கு விஜயம் மேற்கொண்டார்.

நுவரெலியா நகருக்கு உரித்தான சைப்ரஸ் மரங்கள் வெட்டி அகற்றப்படுவதை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி அண்மையில் பணிப்புரை விடுத்ததன் காரணமாக மரங்கள் வெட்டப்படுவது நிறுத்தப்பட்டன.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு முன்னர் வெட்டப்பட்ட மரங்களைப் பார்வையிட்ட ஜனாதிபதி இதுபோன்ற நிலைமை மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நுவரெலிய நகர மக்களுடன் அந்நியோன்னியமாக உரையாடிய ஜனாதிபதி கழிவுப் பொருள்களைக் கொட்டுவதன் காரணமாக மாசடைந்துள்ள குதிரைப்பந்தயத் திடலையும் பார்வையிட்டார். குப்பை கூளங்கள் கொட்டப்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் அவர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தில் அமைச்சர்களான ஆறுமுகன் தொண்டமான், சீ.பி. இரத்நாயக்க ஆகியோரும் இணைந்து கொண்டனர். (சி)

# சர்வதேச தமிழ் எழுத்தாளர்கள் மாநாடு கொழும்பில் ஜனவரி 5 முதல் 8 வரை

கொழும்பு, நவ. 7
கொழும்பில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது என்று பி.பி.சி. தமிழோசை தெரிவித்துள்ளது.

இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் உள்ள தமிழ் எழுத்தாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது எனக் கூறப்படும் இந்த மாநாட்டில் கலை, இலக்கியம், கல்வி மற்றும் தொடர்பூடகங்கள் குறித்த விடயங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன என அதன் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் கலைஞர்கள் தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்வதற்கான நோக்கத்துடன் நடத்தப்படுகின்ற ஒரு பயிற்சிப் பட்டறை போன்றதே இந்த மாநாடு என்று அதன் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான எழுத்தாளர் முருகபூபதி கூறியுள்ளார்.

ஆனால், இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரசால் மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என குற்றஞ்சாட்டும் எழுத்தாளர்களின் குழு ஒன்று, அப்படியான சூழ்நிலையில் இத்தகைய தமிழ் எழுத்தாளர் மாநாடு இலங்கையில் நடத்தப்படுவதால் அது இலங்கை அரசின் பிரசாரங்களுக்கு சாதகமாக அமைந்து விடும் என்று கூறி இந்த மாநாட்டை எதிர்க்கிறார்கள்.

இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான எழுத்தாளர்கள் இந்த மாநாட்டை எதிர்த்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருக்கிறார்கள். (சி)




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆங்கிலதின விழா அண்மையில் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# இந்தியா - இலங்கை கப்பல் சேவை: தூத்துக்குடியில் பரிசோதனைக் கருவி

கொழும்பு, நவ. 7
இந்தியா-இலங்கை இடையேயான கப்பல் சேவையை ஆரம்பிப்பதன் முதற்கட்டமாக தூத்துக்குடி துறைமுகத்தில் கடவுச்சீட்டுகளைப் பரிசோதிக்கும் கருவிகள் பொருத்தப்படவுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக கடவுச்சீட்டுகளைப் பரிசோதிக்கும் கருவிகளை வழங்குமாறுகோரி துறைமுகத் தலைமைப் பொறியியலாளரினால் இந்தியக் குடிவரவுத்துறை திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

விரைவில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அவற்றை உடனடியாக வழங்குமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN UK




100% SATISFACTION GUARANTEED

## இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதி வழங்கலும்

லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் IELTS இன்றி ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும். January மற்றும் February Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

தலைநகரில் அதி கூடுதலான விசாக்களை பெற்றுக்கொடுத்துவரும் எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

| | |
|---|---|
| காலம் | 14th November 2010 (Sunday) - 10.30 a.m |
| இடம் | GREEN GRASS HOTEL, NO:33 ASIRVATHAM LANE, HOSPITAL ROAD, JAFFNA |

## SEP/OCT மாதங்களில் விசா கிடைத்து பயணமானவர்கள்



விசா நடைமுறைகளுக்கு முன்னரும் பின்னரும் எவ்விதகட்டணங்களும் அறவிடப்படமாட்டாது*

## எமது சேவை முற்றிலும் இலவசமானது

*Condition Apply

பதிவுகளுக்கு **COLOMBO** - 0117 555511, **JAFFNA** - 021 7538395
**HOTLINE** - 0117 555514

**January/February** மாதங்களுக்கான அனுமதிகள் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.2000 க்கு மேற்பட்ட மாணவர்களை UK யில் உள்ள பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளுக்கு அனுப்பி சாதனை புரிந்த எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

EXPONET
Overseas Consultants

Head office -
379-1/2, Galle Road,
Colombo 6, Sri Lanka.

Jaffna Branch -
102 2/2, Navalar Road,
Jaffna.

London Branch -
No:56,The Gradens
Harrow Middlessex
Ha1 4EY,UK

www.expogroup.lk Email:nimal@expogroup.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழையின் இரு முகங்கள்

இலக்கியக் காட்சி 64

நா.நல்லதம்பி, மட்டுவில்.

ஒருநாள் மாலை. கருமேகங்கள் கூடி உலகம் இருளில் மூழ்கிவிட்டது. பெருமழைக்கான அறிகுறி; அதற்கான கட்டியம் கூறுவதுபோல ஓயாத மின்னலும் இடைவிடாத முழக்கமும். அத்துடன், அங்குமிங்கும் மரங்களை அசைக்கும் பெருங்காற்றும் சேர்ந்து கொண்டது.

கண்களை மூடிக்கொண்டிருந்தாலும், கண்களைத் திறப்பது போல மின்னல் மின்னிக் கொண்டே இருந்தது; கண் பூத்துப்போகும் என்பார்களே, அப்படியான மின்னல்! இருளை வெட்டிப் பிளப்பது போன்ற மின்னல்; பயமாக வும் இருந்தது. மின்னலும் இடியும் கலந்துதான் கோடைமழை பெய்யும் என்பார்களே, அதற்கான அறிகுறிதான் தென்படுகிறது.

இவ்வாறு முகிற்கூட்டத்தின் இருளையும் அந்த இருளை வெட்டுவதுபோல வரும் மின் னலையும் அகநானூற்றுப் புலவர் இடைக்காடர்,

''துஞ்சுவது போல இருளி, விண்பக

இமைப்பது போல மின்னி...'' என்ற பாடல் வரிகளால் காட்சிப்படுத்துகின்றார். இயற்கை தரும் நிகழ்வுகளிலும் விநோதங்களைக் கண்டுபிடித்து, அதற்கு வடிவம் கொடுத்துத் தாமும் இன்புறுவதோடு மக்களையும் மகிழ்விப்பதே புலவர் தொழில் போலும்!

மழை தொடங்குவதற்கு முன் கருக்கொண்ட மேகங்கள், வானத்தை மறைத்து உலகை இருளாக்கி விட்டிருந்தன. திசைகள் எல்லாம் தூங்கிவிட்டாற்போல ஒரே இருள்மயமாக இருந்ததனால் புலவர்,

''துஞ்சுவது போல இருளி'' என்று கூறுகின்றார். சிறிது நேரத்தில் திடீர் திடீரென வானத்தில் சில பகுதிகள் வெளித்து மறைகின்றன. கண்ணை மூடித் மூடித் திறப்பது போல நிகழும் இந்த மின்னலை,

''விண்பக, இமைப்பது போல மின்னி'' எனக் காட்டுகின்றார் புலவர். மின்னலைத் தொடர்ந்து இருண்ட வானத்தைப் பிளப்பது போன்ற இடியோசை - முழக்கம் கேட்கிறது.

முகில்களின் உராய்வினால் ஒளியும் ஒலியும் - மின்னலும் முழக்கமும் ஒரே நேரத்தில் உண்டாகின்றன என்பதுவும், அவை புவியை வந்து சேர்வதில் அவற்றின் வேக வித்தியாசம் காரணமாக, ஒளி (மின் னல்) முதலிலும் ஒலி (முழக்கம்) பின்னாகவும் நம்மை வந்தடைகின் றன என்பதுவும் நாம் அறிந்ததே.

மின்னலும் இடியும் கருமுகில் களின் உராய்வினால் ஏற்படும் பொழுது மழைத்துளியும் விழத் தொடங்குகிறது. அதனால் நமது நெஞ்சம் நடுக்கம் உறுகின்றது என்கிறார் புலவர்.

*''உறைக் கொண்டு*
*ஏறுவது போலப்பாடு சிறந்து உரைஇ*
*நிலம் நெஞ்சு உட்க ஓவாது சிலைத்து''*
(உரைஇ - உராய்ந்து)
என்பது அவர் பாடல் வரிகள்.

இரவு முழுவதும் இவ்வாறு மின்னலும் இடியுமாக மழை பெய்து கொண்டேயிருந்தது. கார்முகில் தனது வளத்தையெல்லாம் மண்ணுக்கு வழங்கிவிட்டு, குழந்தை பெற்று மெலிவுற்ற தாயைப்போல வெண் முகிலாகி வானத்தின் மேலெழுந்து உயர் மலையைத் தாண்டிப் போகும்போது வைகறையாகிவிட்டது.

வைகறையில் எழுந்து பார்த்தபோது, மழையில் நனைந்த மரங்களின் இலைகள் காலைக் கதிரவனின் கதிர்களில் பட்டு ஒளிவீசுங் காட்சி கண்ணுக்கு விருந்தாக அமைந்தது எனப் புலவர் பாடல் முடிகிறது;

*துஞ்சுவது போல இருளி, விண்பக*
*இமைப்பது போல மின்னி, உறைக்கொண்டு*
*ஏறுவது போலப் பாடுசிறந்து உரைஇ*
*நிலம் நெஞ்சு உட்க ஓவாது சிலைத்தாங்கு*
*ஆர்தளி பொழிந்த வார் பெயல் கடைநாள்*
*ஈன்று நாள் உலர்ந்த வாலா வெண்மழை*
*வான்தோய் உயர்வரை ஆகும் வைகறை*
(அகநானூறு 139)

இவ்வாறு மழையின் ஒரு முகமான கோடை மழை பெய்து சில நாள்களில் ஒரு மழை பெய்தது. அது முற்றிலும் மாறுபட்ட தன்மையில் அமைந் திருந்தது. ஆயினும் அது நாம் வழக்கமாகக் காண்கின்ற மழையின் இன்னொரு முகம்தான்.

முகில்கள் கடல்நீரை முகந்துகொண்டு வானத்தில் படர்ந்து இருள் உண்டாகச் செய்கின்றன. பரந்த உலகம் இருக்கும் இடம் தெரியாமல் மூடப்பட்டுக் கிடக்கிறது. நீரைச் சுமந்து கொண்டு முகில்கள் வானத்தில் ஏறிச் செல்லும்போது சுமை தாங்கமுடியாமல் தாழ்ந்து மண்ணை நோக்கி வருகின்றன. சிறு மின்னல் தோன்றி மறைகின்றது. இதோ மழை சொரியத் தொடங்குகிறது. இடைவிடாது மழை சொரிகின்றது. ''சோ'' என மாரி பொழிகின்றது.!

ஆயினும் கோடை மழையின் போது இருந்த பலமான மின்னலும் இடியும் ஆரவாரமும் இப்போது இருக்க வில்லை. கேட்பதற்கு இந்த மழையின் ஒலி மிக இனிமையாக இருக்கின்றது! கண்ணைப் பறிக்கும் மின்ன லும் இல்லை. தாரை தாரையாக எங்கும் விடாமல் விழுகின்ற மழை நீரின் 'சோ' என்ற ஒலியில் பாணர் இசைக்கும் யாழ் நரம்புகளின் இனிய ஒலியைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது!

மழையின் குரலில் கடுமையான இடி முழக்கம், மின்னல் மட்டுமன்றி யாழ் ஒலி போன்ற மென் மையும் இருக்கின்றது என மழையின் இந்த முகம் நமக்குக் காட்டுகின்றது!

இந்த நினைவோடு இரவுப் பொழுது கழிகின்றது. வைகறையில் எழுந்து வெளியே பார்க்கும் போது ஒரே வெள்ளத்தால் நிலம் மூடிக் கிடக்கின்றது!

*மாக்கடல் முகந்து மாதிரத்து இருளி*
*மலர்தலை உலகம் புதைய, வலனேர்பு*
*பழங்கண் கொண்ட கொழும்பல் கொண்மூப்*
*போழ்ந்த போலப் பலவுடன் மின்னித்*
*தாழிந்த போலச் சொரிவன பயிற்றி*
*இடியும் முழக்கும் இன்றிப் பாணர்*
*வடியுறு நல்யாழ் நரம்பு இசைத்தன்ன*
*இன்குரல் அளிதுளி தலைஇ நன்பல*
*பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறை*
(அகநானூறு) என் இங்கே காட்சிப்படுத்து கின்றார் புலவர்.

(20ஆம் பக்கம் பார்க்க.....)

# கசக்கப்படும் அரும்புகள்

*1960 களில் இளம் எழுத்தாளராகத் தமிழ் சிறுகதைத் துறையில் காலடிவைத்த கே.விஜயன் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவர். வீரகேசரி பத்திரிகையில் பணிபுரிந்தவர். சிறுகதை மட்டுமன்றி நாவல், இலக்கிய விமர்சனம் ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்.*

*'விடிவு கால நட்சத்திரம்' இவரது முதலாவது நாவல். 'மனித நிழல்கள்' என்ற இவரது நாவல், வீரகேசரி பத்திரிகையின் பிரதேச நாவல் போட்டியில் பரிசுபெற்றது.*

*இவரது தொடர்கதைகள் பல பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன.*

*மலையகச் சிறுகதைகளின் இரண்டாவது தொகுப்பான 'உழைக்கப் பிறந்தவர்கள்' சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள இவரது 'கசக்கப்படும் அரும்புகள்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.*

சிறுகதை

கே.விஜயன்

முத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 172

அப்பொழுது தங்கமணிக்கு எட்டு வயதிருக் கும். அப்பனின் கையினைப் பிடித்து, தன் சூம்பிய காலினை இழுத்து இழுத்து தவளைப் பாய்ச் சலுடன் வேகமாக நடந்து பஸ் ஏறி கொழும்பு வந்து ஒரு வீட்டில் ஐந்து வருடங்களை வேலைக்காரியாகக் கழித்து இன்று மறுபடியும் மலை நாட்டிலிருக்கும் லயன் காம்பராவை நோக்கி...

பஸ் வேகமாக ஓடிக் கொண் டிருக்கிறது. ஜன்னலருகில் அமர்ந் திருக்கிறாள் தங்கமணி. முகத்தின் மீது கூடுதல் காற்று ஊதித் தள்ளித் தலைக் கேசத்தை விசிறிடச் செய்கிறது. அந்திவானின் சிவப்பு வெளிச்சத்தில் இருள் நிழல்களாக மலைச்சரிவுகளின் தரிசனம்.

கண்ணிமைகளில் அசைவில்லை. 'அம்மாவைப் பார்க்கலாம்' என காதருகில் ஒரு முணுமுணுப்பு. நினைவு அலைக்கழிப்பின் பிரமை. மலைச்சரிவுகளில் பஸ் வண்டியின் சறுக்கலோட்டம். அம்மாவின் நினைவுகள் அடிக்கடி வரும். தெருவோரம் போகும் நேரமெல்லாம் அவள் நினைவில் பதிவாள்.

கீரை விற்றுக் கொண்டிருப்பாள் - அந்த மூக்குத் திப் பெண். அவளைக் கண்டதும் மனம் பேதலித்து அலை மோதும்இ ''அம்மா!'' நெஞ்சு கதறும்.

அந்தக் கீரைக்காரி அம்மாவைப் போலவே இருப் பாள். மெலிந்த முகம். பெரிய கண்கள். வெற்றி லைச் சாரலால் சிவந்த உதடுகள். மூக்குத்து டாலடிக் கும் நாசி, அட, அம்மாதான். அம்மாவேதான். மனம் அடித்துக்கொள்ள ஆவலால் உடம்பு நடுங்கும்.

***

கொழும்பில் பெரிய வீடு. வீட்டில் எல்லோருமே நல்லவர்கள். வீட்டு ஐயா, அம்மா, அந்த டிரைவர்.... அன்பிற்குக் குறைவில்லை, அது போல் வேலைக் கும் பஞ்சமில்லை. கால்களை இழுப்பதும், நடப்பதும், ஏதாவது செய்து கொண்டிருப்பதும், ஓயாது கடைக்குப் போவது. டிரைவர்கூட அடிக்கடி சிகரெட் வாங்க விரட்டியடிப்பான். போதாதற்குத் தோட்டவேலை, மலசலகூடம் கழுவுவது இத்யாதி இத்யாதி இப்படிப் பல பல....

சாப்பாட்டிற்குக் குறைவில்லை. மிஞ்சுவதெல்லாம் அவள் வயிற்றிற்குள் தான். சம் பளம் கிடைத்தது. மாதா மாதம் ஒரு கள்ளனைப் போல்வரும் அப்பன் அதனை வாங்கிப் பொத்திக் கொண்டு நைசாக நழுவி விடுவான்.

அம்மாவைப் பற்றிய நினைவுகள் உந்தித்தள்ள அப்பாவைக் காணும் ஆவல், ஆர்வம் பொங்கித் ததும்ப கால்களை இழுத்து இழுத்து வந்தால் அப்பாவைக் காணமுடியாது. அவர் அங்கிருந்து நகர்ந்து நாழிகைகள் கடந்து விட்டிருக்கும். மறுபடியும் கால்களின் இழுப்புடன் வேகமாகக் கேட்டரு கில் வந்தால், தெருவைக் கடந்து கொஞ்சம் தொலைவில் போய்க்கொண்டிருப்பார்.

அப்பாவைக் கண்ட நாள்களும் உண்டு. அப்பொழுதெல்லாம், ''எலே! என்ன உருப்படியா ஒரு வேலையும் செய்ய மாட்டியாமே, தோலை உரிச்சுப்புடுவேன் உரிச்சி. அம்மா ஐயா எல்லார் கிட்டயும் மருவாதியா நடக்கணும் தொஞ்சுதா?'' என உறுமலொன்று பாய்ந்து வர, கரிக் கட்டை போன்று கறுத்து மெலிந்த கையொன்று நீண்டு வந்து 'நறுக்' கெனத் தலையில் குட்டி 'ணங்ணங்' எனக் கன்ன எலும்பைச் சுண்டிவிடும்.

''அம்மா!''

நினைவு வலியும் கள்ள வலியும் இணைந்து ஒரு வேதனை அழுகை எழும். எதனையும் செவிக் குள் நுழைந்து மனதில் சுமக்காமல் 'அப்பா' என்ற அந்தக் கறுவல் மனிதன் மறைந்து விடுவான்.

எசமானியம்மாள் மோசமானவர் அல்ல,



அன்பானவர்தான். ஏதோ சில சமயங்களில் 'சட்புட்'டெனக் கத்துவார் அவ்வளவுதான். எசமான் சூரியன் மாதிர் வருவார்; போவார். அவர் எண்ணமெல்லாம் கணக்கு வழக்குகளிலே இலயித்தும் கிடக்கும். பணம் சம்பந்தமான நினைவுகளுடன் உருள்வது வாழ்க்கையானவர், இறை பக்தியில் கனிந்த பழம். அத்தி பூத்தாற் போல் அன்பாகச் சில வார்த்தைகள் பேசுவதுண்டு.

''அம்மா பார்க்கப் போகணுமா?''

''உம்! உம்!''

தங்கமணி பேச முடியாமல் தலையாட்டுவாள். தலையாட்டுதலில் மகிழ்ச்சி பொங்கிப் பிரவகிக்கும் கண்கள் நட்சத்திர மணிகளென ஒளிர்வுபெறும்.

''தீபாவளி வரட்டும்!''

(20ஆம் பக்கம் பார்க்க.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் வங்கி கிளையின் ஓராண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,நவ.7

மக்கள் வங்கியின் கல்வியங்காடு சேவை நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மேற்படி சேவை நிலையத்தில் இடம்பெறவுள்ளதாக வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (201)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி **அன்னலட்சுமி பேரம்பலம்**

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் 15.03.1969 முதல் 13.08.1992 வரை (23 வருடங்கள்) சிறந்த ஓர் ஆசிரியையாகக் கடமையாற்றியவர். அவர் பாடசாலையின் வளர்ச்சிக்கு தம்மாலான பங்களிப்புக் களைத் தொடர்ந்து வழங்கி வந்தார். இப்படியான நல்ல ஓர் ஆசிரியை காலமானதையிட்டு மனம் வருந்துவதோடு, துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச்சமூகம்.** (105628)

## விழிநீர் சொரியும் ஓராண்டு

தோற்றம் 04 . 03 . 1938



மறைவு 03 . 11 . 2009

அமரர் **சுப்பிரமணியம் கந்தையா** (கந்தசாமி)
(இராசாந்தோட்டம்- காரைநகர்)
திதி: 07.11.2010

சிந்தையில் அகலாத திருவுருவமே- எங்கள்
சிந்தனைக்கு உருத்தந்த எம் தந்தையே!
நீங்கள் போன ஓராண்டு தெரியவில்லையே- விழியில்
நீர் மட்டும் உங்கள் பிரிவைச் சொல்லுகின்றதே

எமக்காகப் பிறந்து எமக்காக வாழ்ந்து
எமக்காக உருகி எம்மை விட்டுச் சென்ற
அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இராசாந்தோட்டம்
சித்திவிநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

சரஸ்வதி ஸ்ரோஸ்,
403D, இறம்பைக்குளம்,
வவுனியா.
[க/572492]

என்றென்றும் நெஞ்சங்களில் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 180ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 17 . 01 . 1969



இறப்பு 16 . 05 . 2010

செல்வி **குமாரவேலு புஸ்பதேவி** B.Com. (Hons)
(ஆசிரியை, யா/சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்)

எங்கள் குலவிளக்கே! ஏற்றமிகு திருமகளே!
தூங்குகின்றாய் என்று இருந்தோம்- எம்மை
ஏங்க வைப்பாய் என்று எண்ணவில்லை
உன் வாழ்வு மலருமென்று நாமிருந்தோம்
அது கருகிப் போனகதை எம் நெஞ்சில்- வெந்தணலால்
சுட்டது போல் வேதனையைக் கொடுக்குதம்மா!
கடைக்குட்டியாக வந்துதித்த கற்பகமே!
பார்க்கும் இடமெல்லாம் தோன்றுகின்ற உன்னுருவம்
அலையலையாய் மோதியிங்கு வேதனையைக் கூட்டுதம்மா!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

விளானை,
களபூமி, காரைநகர். [105642] **குடும்பத்தினர்.**

## கந்தசஷ்டி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயிலில் கந்த சஷ்டி விரத பூசைகள் நேற்று முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தினமும் காலை 7.15 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் (மூலவர்) 8.30 மணிக்கு விசேட பூசையும் முற்பகல் 11 மணிக்கு ஸ்நபனாபிஷேகம் (உற்சவம்) விசேட பூசையும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு சண்முகார்ச்சனையும் 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் (பெருமாள் உள்வீதி உலா வருதலும்) இடம் பெறும்.

கந்தன்கருணை' என்னும் தலைப்பில் தினமும் பிற்பகல் 4.45 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் செந்தூர்ச்செல்வன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

கந்தசஷ்டி விரிவுரையை தினமும் சத்திரச் சந்திக்கு அருகில்உள்ளநடன முருகன் வைத்திய நிலைய டாக்டர் சு.நவரத்தினம் வழங்குவார். (201)

* * *

யாழ்ப்பாணம்,நவ.7

நீர்வேலி கந்த சுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி விரத நிகழ்வு நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும்10ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு விஸ்வரூப தரிசனமும் மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சூரசம்காரமும் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை திருக்கல்யாணத் திருவிழாவும் இடம்பெறும். (201)

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மிகக் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1kg 450 ரூபா மட்டும், தொடர்பு: விஜயகுமார், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

### வீடு வாடகைக்குண்டு

187, ஆடியபாதம் வீதியில் (மருத்துவ பீடத்துக்கு முன்பாக) 5 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக் குண்டு.

தொடர்பு:- கனகசபை தர்மகுலசிங்கம், இல.187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 0779050260

## மரண அறிவித்தல்

### பேரம்பலம் அன்னலட்சுமி (கிச்சி ரீச்சர்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்.சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் அன்னலட்சுமி 03.11.2010 புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் சி.க. பேரம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொற்கொடி தம்பதியினரின் அன்பு மகளும் கனகசபை - பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும் கேதீஸ்வரன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), யோதீஸ்வரி (சங்கானை), நிகிலா தீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சற்குணதேவி (பிரான்ஸ்), சிவகுமாரன் (பிரான்ஸ்), பாலபாஸ்கரன் (ஓமான்), யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் துஷ்யன், இந்துஜன், சஞ்சித், சங்கவி (பிரான்ஸ்), சௌமினி, டஸ்மினி (உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்), கீர்த்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி (பொன்னாரக்கா), நடராசா, தனலட்சுமி, கந்தசாமி மற்றும் முத்தையா பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*பிளாக் வீதி, சங்கானை.* 021 300 7635

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மாட்டின் லேனில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 0452612 (105654)

### விற்பனைக்கு

பொமனேரியன் கறுப்புநிற சோடி நாய்களும் Dashousd பெண் நாய்கள் இரண்டும் உடன் விற்பனைக்கு உண்டு.

மனோகரன் மாஸ்ரர்
அரசடி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

### காணி விற்பனைக்கு

உடுப்பிட்டி தொண்டைமானாறு வீதியில் 10 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 021 3218172 (104470)

### வீடு விற்பனைக்குண்டு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும், 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 0776146434 (105510)

### கடை வாடகைக்கு


யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடி ஒழுங்கையில் மூன்று மாடிகளைக் கொண்ட இரு கடைகள் வாடகைக் குண்டு.

தொடர்பு:
021 222 8145, 077 6184354 (105513)

### விற்பனைக்கு அல்லது குத்தகை அடிப்படை

கொக்குவில் கிழக்கு, கொக்குவில் Champion Lane இல் 2 ¾ பரப்புக் காணியும் அடங்கலாக சகல வசதிகளுடனான புதிதாகக் கட்டப்பட்ட மேல் வீடு (two story Bungalow) விற்பனைக்கு அல் ... அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங் களும் விரும்பத்தக்கது. தொ.பே: 0774160757 (105334)

## மரண அறிவித்தல்



### முருகன் சீவரட்ணம் (ஜீவா)

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர், காங்கேசன்துறை, சீமெந்து தொழிற்சாலை, தொழில்நுட்பவியலாளர்- சவூதி அரேபியா)

கட்டுவன் வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சீவரட்ணம் (22.10.2010) வெள்ளிக்கிழமை சவூதி அரேபியாவில் இயற்கை மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருச்சுனன் என அழைக்கப்படும் முருகன்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிறேசர்லேன், தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தையா- சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் வவா என அழைக்கப்படும சூரியகலாவின் அன்புக் கணவரும் ஆதவனின் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்) அன்புத் தந்தையும் மைனாவதி (மல்லாகம்), இராசலட்சுமி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாணிக்கம், லட்சுமியின் பெறாமகனும் காலஞ்சென்ற நடேசு மற்றும் இராசரத்தினம் (வவுனியா), சந்திரலீலா (உரும்பிராய்), வசந்தமாலா (ஜேர்மனி), லோகநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஆனந்த மோகன் மற்றும் குகநேசநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வரட்ணம் (உரும்பிராய்- கயன் பந்தல் உரிமையாளர்), ஜெயபாலசிங்கம் (ஜேர்மனி), இராஜேஸ்வரி (ஜேர்மனி), விஜியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகலனும் தயாபரன், லோகரஜனி, சுதர்சன் (இத்தாலி), கிருபானந், சுகன்யா, கஜீபன், சர்மினி, தர்சன், லக்சன், தட்சாயினி, ஜேர்மனியில் வசிக்கும் நீரஜா, சிந்துஜா, செபிற்றா, கனிஷ்ரா, கம்சிகா, கார்த்தி, கஜித் ஆகியோரின் அன்பு மாமனும் மீரா, சமந்தா (சுவிஸ்), கஜன் (பிரான்ஸ்) ரயு (இந்தியா), கஜானா, ஜெலினா (ஜேர்மனி), சுதர்சன் (இத்தாலி), மைதிலி ஆகியோரின் சித்தப்பாவும் சுவேதன் (சுவிஸ்), மெல்வின், மதீசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2010) முற்பகல் 11 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மல்லாகம்.* (105646) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமொழிகளும் விடைகளும்

01. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் செல்லாது.
(முக்கியமானவர் இன்றி எக்கருமமும் நடை பெறுவதில்லை).
02. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
(ஒற்றுமையே பலத்தைத் தரும்).
03. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
(உத்தம சிநேகிதனின் நட்பு).
04. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை.
(திருப்தியற்ற மனம்).
05. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
(இளமையின் சிறப்பு).
06. ஈட்டி எட்டின மட்டும் பாயும். பணம் பாதாளம் மட்டும் பாயும்.
(பணத்தின் வலிமை).
07. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
(தகுதிக்கு மேல் ஆசைப்படக் கூடாது).
08. ஊசி போகுமிடம் பார்ப்பார். உலக்கை போகுமிடம் பாரார்.
(சிறு விடயங்களில் கவனமும், பெரிய விடயங்களில் கவனயீனமும்).
09. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.
(வீண் பெருமை).
10. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
(வறுமையிற் செம்மை).
11. குடிப்பது கூழ். கொப்பளிப்பது பன்னீர்.
(வீண் பெருமை).
12. பதறாத காரியம் சிதறாது.
(அமைதியின் வெற்றி).
13. பேராசை பெருந்தரித்திரம்.
(மிதமிஞ்சிய ஆசை அழிவைத் தரும்).

ஜெ.கேமதன் - 5 V
யா/அருணோதயக் கல்லூரி,
அளவெட்டி.

## உதவி

வேடன் எய்த அம்பினால் காயப்பட்ட கழுகு ஒன்று விவசாயி ஒருவரின் வீட்டுத் தோட்டத்தில் வந்து வீழ்ந்தது. இதை அவனது மனைவி கண்டாள். கழுகின் மீது இரக்கம் கொண்டு காயத்துக்கு மருந்து போட்டாள். இது விவசாயிக்குப் பிடிக்கவில்லை. ''கழுகு மோசமானது. கோழிக்குஞ்சுகளைத் திருடி உண்ணும் பறவை. அதற்கு இரக்கம் காட்டாதே.'' என்றான்.

''அப்படிச் சொல்லாதீர்கள். யாரையும் தீயவர்கள் என ஒதுக்கக் கூடாது. அன்பு காட்டினால் அவர்களும் அன்பாக இருப்பார்கள்.'' என்றாள் மனைவி.

சில நாள்கள் கழிந்தன.

கழுகு நன்றாகக் குண்மாகி பறந்து சென்றது. தினமும் விவசாயி வீட்டுக்கு வந்து செல்லும். அப்படி ஒருநாள் வந்தபோது, விவசாயியின் குழந்தை தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தது. அப்போது ஒரு பாம்பு அங்கே வந்தது. குழந்தையைக் கொத்த அருகே சென்றது. உடனே கழுகு பாம்பைக் கால்களால் கௌவிப் பறந்து சென்றது. ''பார்த்தீர்களா! நாம் அன்று செய்த உதவியால் தான், இன்று குழந்தை ஆபத்தில் இருந்து தப்பியது'' என்றாள் மனைவி. விவசாயி கழுகுக்கு மனத்தால் நன்றி சொன்னான்.

சி.பகிரதன் - 9
யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை.

## பூக்கள்



வண்ண வண்ணப் பூக்கள் - நல்ல
மணம் நிறைந்த பூக்கள்
என்னைப் பார்த்துச் சிரிக்கும் - அவை
இனிய நல்ல பூக்கள்
ஆடி அசையும் பூக்கள் - நான்
அருகில் சென்று பறிப்பேன்
கூடை நிறைந்து போகும் - நான்
பார்த்தால் மலர்கள் சிரிக்கும்

பார்க்கும் போது சிரிக்கும் - நான்
பறிக்கும் போதும் சிரிக்கும்
சேர்த்துக் கட்டும் போதும் - அவை
சிரித்துக் கொண்டே இருக்கும்.

இ.பாதுஷா - 4B
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

## பொது அறிவு

01. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு எது?
- இந்தியா
02. அதிக நீர் அருந்தும் பறவை எது?
-புறா
03. மிகச் சிறிய முட்டையிடும் பறவை எது?
- தேன்சிட்டு
04. கண்களின் மூலம் வியர்வை வெளியேறும் உயிரினம் எது?
-முதலை
05. சத்தமிடாத விலங்கு எது?
-ஒட்டகம்
06. பித்தப்பை இல்லாத முலையூட்டி எது?
-எலி
07. பல் இல்லாத முலையூட்டி எது?
-தேவாங்கு
08. கடல் நீரைப் பருகும் ஒரே ஒரு பறவை இனம் எது?
-பென்குயின்.

சி.தவஅமுதீசன் - 7 B
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.





ப.ஜெனியன் தரம் -7,
யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயம்.


அ.சோபிகன் தரம் -8C,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி


ந.ரிச்சஜன் தரம் -9E,
யா/மத்திய கல்லூரி.


பூ.பிரகஜன் தரம் -4B,
யா/இந்து ஆரம்ப பாடசாலை.


தி.சதுரிஜன் தரம் -6C,
யா/இந்துக் கல்லூரி.



சு.ஜனந்தினி தரம் -4D,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்


இ.கவிராஜ் தரம் -6,
யா/சந்திரபுர ஸ்ரீசந்திரவரோதய மகா வித்தியாலயம்.


ஏ.லோஜினி தரம் -9A,
யா/ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்.




## உங்களுக்கும் பரிசில்கள்... விடை தெரியுமா?81

01.உலக சிக்கன தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியால் என்ன சேமிப்புத் திட்டம் ஆரம்பமாகவுள்ளது?
02.தலைசிறந்த உதைபந்தாட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் விருதின் பெயர் என்ன?
03.இலங்கை சிறுகைத்தொழிலாளர் சம்மேளனம் இவ்வாண்டு எத்தனையாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது?
04.ஐக்கிய அரசு குடியரசில் தன்னாட்சியைப் பெற்ற நாடுகள் எத்தனை?
05.வடக்கு, கிழக்கில் 550 கிராமங்கள் எந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயற்படவுள்ளன?

### உங்களுக்குத் தெரியுமா? 79 இற்கான விடைகள்

01. அஜித் நிவாட் கப்ரால்.
02. நண்டு, இறால்.
03. பாஃகோ
04. மானிப்பாய் இந்துக் கல்லூரி
05. எயார்ரெல்

### விடை தெரியுமா?

தெரிந்தால் 12.11.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### பரிசுபெறுவோர் விபரம்

01. சு.நிலக்ஷிகா - 2
யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை.
02. வி.விஸ்னுஜன் - 9
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
03. பா.அம்புஜன் - 9 A
யா/புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.
04. ம.மதுமிதா - 5
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
05. சு.தர்மிகா - 9 C
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..................................................
தரம் :-..................................................
பாடசாலை :-..................................................
..................................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் பிறந்த தமிழர் ஜேர்மனியில் இன்று ஓர் அமைச்சர்

## உழைப்பால் உயர்ந்த ஐயன் கிருகரன்



அண்மையில் ஜேர்மன் நாட்டின் ஹம்பேர்க் நகரில் பொருண்மிய விவகார அமைச்சராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ஐயன் கிருகரன் 1939 ஆம் ஆண்டு பருத்தித்துறையில் பிறந்தவர். ஐக்கிய இராச்சியத்தில் கல்வி பயின்ற இவர் அங்கு தனது கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த பின்னர் 1970இல் ஜேர்மனி சென்றார். ஜேர்மனி சென்ற இவர் அந்நாட்டின் ஹம்பேர்க் நகரிலுள்ள ''கொள்கலன் குத்தகைக் கம்பனி'' ஒன்றில் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து ஜேர்மனியில் அநாதை அந்தஸ்தில் வாழ்ந்து வந்த ஐயன் கிருகரனுக்கு லண்டன் சென்று புலமைக்கல்வி கற்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பின்னர் சென்கர் நகரில் வாகனக்கம்பனி ஒன்றின் ஆங்கிலப் பகுதி அலுவலகத்தில் பணிபுரிந்துள்ளார். 1970 இல் இவர் ஹம் பேர்க் நகருக்குச் செல்லும் போது இவரிடம் 3000 ஜேர்மனி மார்க் பணம் மாத்திரமே இருந்தது.

பீங்கான் கழுவிப் பிழைத்தார் ஜேர்மனியில் சைவ உணவக மொன்றில் சாப்பாட்டுப் பீங்கான்கள் கழுவும் தொழிலில் ஈடுபட்டிருந்த இவர் பின்பு ''கொள்கலன் கம்பனி'' ஒன்றில் லிகிதராக இணைந்து சேவையாற்றினார். இவரது அபரிமித திறமைகளைப் பாராட்டி இக் கம்பனி இவருக்கு முகாமையாளர் பதவியை வழங்கி இருந்தது.

அக் கம்பனியில் கடமையாற்றியவாறே 1977 இல் தனது சொந்தக் கம்பனியொன்றை ஸ்தாபித்தார். ''கொள்கலன் ராஜா'' என்னும் புனை பெயரில் பிரபலமடைந்தார் இவர். ஹம்பேர்க் நகரின் வடக்கு ஜேர்மனி துறைமுக நகரில் இவரது கம்பனி செழிப்புற வளர்ந்தது. 1990 இன் நடுப் பகுதியில் இக்கம்பனியை விற்றதன் பின்னர் கொள்கலன் குத்தகைக் கம்பனிகள் சிலவற்றை ஸ்தாபித்தார். தற்போது இவரது மூலதனம் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனச் செய்திகள் கூறுகின்றன. ஹம்பேர்க்கில் இவர் கடமையாற்றிய வேளையில் அமெரிக்க கம்பனி ஒன்று தன்னைத் தங்களுடன் இணைந்து கொள்ளும்படி கேட்டதாகவும்; ஜேர்மனி மார்க் 10,000 தருவதாயின் இதற்குச் சம்மதிப்பதாகக் கூறியதாகவும் சஞ்சிகையொன்றில் இவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க டொலர் 10,000 தருவதாக அமெரிக்கக் கம்பனி கூறியிருந்தது. ஜேர்மனி தூதுவர் பாராட்டு இலங்கையரான இவருக்கு ஜேர்மனி அமைச்சர் பதவி கிடைத்ததை ஜேர்மனி தூதுவர் குஜன்ஸ் புளொட்னர் பாராட்டியுள்ளார். 60,000 இலங்கையருக்கு ஜேர்மனி வாழ்விடம் அளித்துள்ளதெனக் கூறிய அவர் கரன் அவர்களுக்குக் கிடைத்துள்ள அமைச்சர் பதவி அனைவராலும் பாராட்டப்படக் கூடியதொன்று. ஐயன்கரன் வர்த்தகத் துறையில் மாத்திரமல்லாது அரசியலிலும் அளப்பரிய கீர்த்தி பெற்றுள்ளார். இவர் ஒரு தர்ம சிந்தனையாளனுங் கூட. இவர் பல்வேறு நலன் புரித் திட்டங்களுக்குத் தனது பங்களிப்பை நல்கியுள்ளார் எனவும் ஜேர்மனி தூதுவர் கூறியுள்ளார். வறியவர்களுக்கு அவரின் உதவி வறியவர்களுக் கான பல திட்டங்களையும், சிறுவர்களின் மேம்பாட்டிற்கான கல்வித் திட்டங்களையும் ஊக்குவித்து நிதி வழங்கியுள்ளார். ஜெரூசலேம் நிதியத்தையும் வெகுவாக ஆதரித்து வந்துள்ளார். சமூக, கலாசார ஈடுபாட்டிற்கான ''பெடறல் குடுருஸ்-ஜூன் 2007'' விருதையும் பெற்றுள்ளார். நாற்பது வருடங்களாக ஐயன்கரன் ஹம்பேர்க்கில் வாழ்ந்துள்ளார். நீண்டகாலமாக ஜேர்மனி மக்களில் ஒருவராக வாழ்ந்து வந்த இவரிடம் இது வரை ஜேர்மனி கடவுச்சீட்டே இல்லையாம். இவருக்கும் பிர ஜாவுரிமை வ்ழங்க வேண்டு மெனக் கூறிய அந்நாட்டு உயரதி காரிகள், தாமாகவே இவருக்குச் சிபார்சு வழங்கியுள்ளனர். ஜேர்மனி பிரஜாவு ரிமையை அவரும் விரும்பு கின்றார்.

ரம்யன்

# திருமணத்துக்குப் பதிவுக்கட்டணம் இரண்டாயிரம் ரூபாவா...?

கடந்த 30.08.2010 அன்று உடுவில் சிங்கம் வீதியிலுள்ள ஒரு திருமண வீட்டிற்குச் சென்றிருந்தேன். மணமக்கள் ஒரு கோயிலில் தாலி கட்டும் வைபவத்தை முடித்து விட்டு மணமகள் வீட்டிற்கு வந்து திருமணப் பதிவுக்காகக் காத்திருந்தனர்.

பி.ப சுமார் 3.30 மணியளவில் உடுவில் பகுதிக்குரிய விவாகப்பதிவாளர் ஒருவர் வந்தார். பத்து நிமிட நேரத்தில் மாலை மாற்றுதல் உட்பட திருமண விவாகப்பதிவு வேலைகள் நிறைவுற்றன. திருமணப் பதிவில் உதவிய ஒருவர், மாப்பிள்ளை-பெண் வீட்டாரிடமிருந்து தலா ரூ500/= வீதம் வாங்கி 1000/= ரூபாவை அன்பளிப்பாகப் பதிவுக்காரரிடம் கொடுத்தார். அதை வாங்கிப் பார்த்த திருமணப்பதிவாளர், உதவியவரை அழைத்து அவர் காதில் ஏதோ சொன்னார். புருவத்தை உயர்த்தியபடி திரும்பிய உதவியாளர், பதிவாளருக்கு 1000/= ரூபா போதாதாமென்று கூறி, மேலும் இருபகுதியினரிடமிருந்து தலா 500/= ரூபா வாங்கி மொத்தமாக 2000/= ரூபாவைத் திருமணப்பதிவுகாரரிடம் கொடுத்தார். இதைப்பார்த்துக் கொண்டிருந்த என்னை ஏதோ ஓர் உணர்வு உலுக்கியது. திருமணப்பதிவின் போது அன்பளிப்பாகக் கொடுப்பது வேறு, இவ்வளவு தரவேண்டுமென்று வற்புறுத்தி வாங்குவது வேறு. இத்தனைக்கும் மணமக்கள் இருவரும் உள்ளூர் வாசிகள். வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுமல்லர்.இது யாழ்.மாவட்ட உதவிப் பதிவாளர் நாயகத்திற்கும், அவரது அதிகாரிகளுக்கும் சமர்ப்பணம்.



திருமணத்தில் கலந்து கொண்ட ஒருவர். நன்றி

-சுமோஜினிந்-

## இடி இடிக்கும் போது

இடி இடிக்கும்போது வாயைத் திறந்து கொண்டிருக்க வேண்டும் என்று கூறுவார்கள் இது ஏன் தெரியுமா? இடி இடிக்கும் போது அதன் ஒலி அலைகள் மிக வேகமாக வந்து செவிப்பறை கிழிந்து காது கேட்கும் சக்தியை இழந்து விட ஏதுவாகும். நாம் வாயைத் திறந்து வைத்துக் கொண்டோமாயின் வாய் வழியாக வெளிக்காற்று உட்சென்று செவிப்பக்கம் சென்று மோதும். அப்போது அவ்வெளிக்காற்று செவிப்பறையில் இடி இடிக்கும்போது ஏற்படும் அதிக அதிர்வை வாங்கிக் கொண்ட செவிப்பறை பாதிக்காமல் பாதுகாக்கும்.

க.நிஸா

# சுற்றுச்சூழலில் ஆரோக்கியமான வாழ்விற்கு சுத்தமான நீர்



புவிப்பந்தில் நீண்டு உயர்ந்து செல்லும் மலைத்தொடர்களையும், வளைந்து நெளிந்து செல்லும் மிகப்பாரிய நீர் அருவிகளையும் சமுத்திரங்களையும் நாம் காண்கின்றோம். ஆயினும், இப்புவியில் காணப்படும் நீரில்01% மாத்திரமே தான் மனித இனம் பயன்படுத்தி வருகின்றதெனும் உண்மையை நீங்கள் அறிவீர்களா? இந்த ஒரு வீதத்தில் மிகுதி 99%மும்உப்புநீர்,உறைபனி மலைகள் ஆகும்.இந்நீரைக் குடிப்பதற்கோ, கழுவுவதற்கோஅல்லது தொழிற் சாலைகள்,இயந்திரங்களுக்கோ பயன்படுத்த முடியாது. உலகின் சனத்தொகை பயங்கர வேகத்தில் அதிகரித்து வரும் இந்த வேளையிற் கூட நாம்,வரையறுக்கப்பட்ட இந்த 1% நீர் வளத்தை மாத்திரமே தான் பயன்படுத்தி வருகின்றோம். உலகளாவிய ரீதியில் மிகமிகச் சொற்பமான நீரையே நாம்பயன்படுத்துகின்றோம் என்பதைப்புரிந்து கொண்டோமாயின் நீரை வீண்விரயஞ் செய்யாது தேவைக்கேற்ப பயன்படுத்துதல் நன்று.

சர்வதேச மெங்கும் வருடமொன்றிற்கு 1500 கியூப்/கிலோமீற்றர் கழிவு நீர் உற்பத்தியாகின்றது. இக்கழிவு நீரை உரியவாறு சுத்திகரிப்மோமாகில் நீர்ப்பாசனத்திற்கும், சக்திப்பயன்பாடிற்கும் இதனை மீண்டும் பயன்படுத்த முடியும்.

அபிவிருத்தியடைந்து வரும்ஒரு சில நாடுகளிலே தான் இந்த நீர் இயந்திரங்கள் மூலம்நன்னீராக்கப்படுகின்றது. இந்த இயந்திரங்களின் விலைகள் மிகமிக அதிகரித்து காணப்படுவதனால் பெரும்பாலான நாடுகள் இதில் அக்கறை செலுத்தவில்லை.

பெரும்பாலான அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இதற்குரிய போதுமானளவு சட்டவாக்கங்கள் அல்லது சட்டவிதிகளை அமுல் நடத்தத் தவறியமையினால் இந்தநாடுகளில் 80% மான கழிவுநீர் எதுவிதபயன்பாடுமின்றி வீண்விரயமாகின்றது.

இன்றைய நவீன யுகத்தில் அபிரிமிதமான சனத்தொகைப் பெருக்கத்தின் மத்தியில் எண்ணற்றதொழிற்சாலைகளைக் காணமுடிகிறது. பெரும் எண்ணிக்கை யிலான தொழிற்சாலைகளும் வீடுகளும் தமது தேவைக்கு ஓரளவு போதுமான நீரைப்பெற்றுக் கொண்ட போதிலுங் கூட அந்த நீரின் அளவு தமக்குப் போதுமானதாக இல்லையெனக் கொக்கரிக்கின்றன.

சமூகத்தின்மத்தியில்நீரின்பற்றாக் குறையானது இன்று தவிர்க்க முடியாத தொன்றாகி விட்டது. புவி மேற்பரப்பில் காலத்திற்குக் காலம் ஏற்படக்கூடிய வரட்சியும்,வீண்விரயமாகும் கழிவு நீரும் மனித வர்க்கத்திற்கு மாத்திரமல்லாது சுற்றுச் சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதைச் சூழல் கற்கைகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. உலக மக்கள் அனைவரினதும் ஆரோக்கிய வாழ்விற்குச் சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக, நீரின் தேவைக்கேற்ப நீரின் தரத்தை உயர்த்த வேண்டுமென ''உலக நீர் நாள் 2010'' மாநாட்டில்தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நீரின் தேவைகள் யாவை? உங்களது உடலில் நீர் அற்றுப் போய்விடுமாயின் உடல் இயக்கங்கள் முற்றாக நிறுத்தப்பட்டு விடும். உங்களது உடல் எடையின் அரைப்பங்கை நீர், நிர்ணயிக்கின்றது.நீராகாரமின்றி ஒரு சில நாள்களுக்கு மாத்திரமே தான் உயிருடன் இருக்க முடியும். உடல் இயக்கத்திற்குச் சக்தி தேவை. சக்தி வெளிப்பாட்டிற்கு நீரின் தேவை மிக மிக அத்தியாவசியமாகும். உடலில் திரவ நிலையில் குருதிச் சுற்றோட்டம் நடைபெறகின்றது.குருதிச் சுற்றோட்டத் தின் போது உடலின் பல பாகங்களிலுமுள்ள கலன்களுக்கு ஒட்சிசனை எடுத்துச் செல்வது நீரேயாகும். இதேபோன்று நோய் எதிர்ப்புச் சக்தியுள்ள நிணநீர்க் கலங்களுக்கும் நீரின் தேவை இன்றி யமையாததாகும். உணவு ஜீரணிப்பதற்கு நீர் தேவை. அவ்வப்போது வியர்வை வெளியேறுகின்றது. அதற்கும் நீர் தேவையாகின்றது. உங்களது உடலில் பல பாகங்களிலும் நீர் திரவநிலையில் இருப்பது மாத்திர மல்லாது,உடலின்கலங்களின் வழமையானசெயற்பாட்டிற்கும்நீர் தேவை. நீரின் பிரதான தேவைகள் பற்றி இப்போது அறிந்து கொண்டீர்களா? இது மாத்திரமல்லாது இன்னோரன்ன பற்பல தேவைகளுக்கும் நீர் மிக முக்கியமான தாகும்எனவே நீரைச்சிக்கனப்படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைத் தீர்வில் திசை திருப்பும் அரசியல்

ஆசியாவின் மிகத் திறமையான அரசியல் சாணக்கியம் வாய்ந்தவர்களில் ஒருவராகக் கருதப்பட்டவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவார். உள்நாட்டிலும் சரி சர்வதேச அளவிலும் சரி மிகவும் கவனமாகக் காய்களை நகர்த்தி தான் விரும்பியவற்றை நிறைவேற்றுவதில் வல்லவர் எனப் புகழப்பட்டவர். அவரே ஒரு முறை நான் வயிற்றில் குற்றப்போவதாகப் பாவனை செய்து விட்டு முகத்தில் குத்துபவன் எனத்தன்னைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஒரு சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார கொள்கைக் கட்டமைப்பை நோக்கி வளர்ச்சி பெற்று வந்த இலங்கையை அந்நிய முதலீட்டாளர்களுக்குத் திறந்து விட்டதன் மூலம் ஒரு தங்கு நிலைப் பொருளாதாரத்துக்குள் மீள முடியாதவாறு தன்னிய பெருமை இவருக்கே உரியது. அது மட்டுமின்றி இவ்வமைப்பை மாற்ற முடியாதவாறு ஒரு அரசியலமைப்பினை உருவாக்கி தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வந்து அந்த அரசியலமைப்பையும். இலகுவில் மாற்ற முடியாத ஒரு நிலையை உருவாக்கியவர். அது போன்று சர்வதேச அரசியலிலும் மேற்குலக விசுவாசியான இவர்

சந்திரசேகர ஆசாத்

இந்தியாவுடனும் சீனாவுடனும் கூட நெருக்கமான உறவுகளைத் தந்திரோபாய ரீதியில் கையாண்டு வந்தார். ஜே.ஆர். அரசைத் தன் கட்டுக்குள் கொண்டு வர இந்தியா போராளிகளைக் கையாண்ட வேளையில் இலங்கை, இந்திய ஒப்பந்தம் மூலம் இந்தியாவையே விடுதலைப் புலிகளை அழிக்கும் பணியில் களத்தில் இறக்கிய பெருமை அவருக்கு உண்டு.

இன்று அவருக்கு எவ்விதத்திலும் குறைந்து விடாத திறமையுடன் அரசியல் களத்தில் நடைபோடுபவர் தான் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்பு அறுதிப் பெரும்பான்மையை எட்ட முடியாத நிலையில் நாடாளுமன்றக் கூட்டத் தொடரையே கூட்ட முடியாமல் திண்டாடினார் சந்திரிகா அம்மையார். அடுத்த ஜனாதிபதியாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ எதிர்க் கட்சியினரின் பலவீனங்களை நன்றாகக் கணக்கிட்டு எதிர்க்கட்சிகளை உடைத்து அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றார். 104 அமைச்சர்கள் கொண்ட ஒரு பிரமாண்டமான அமைச்சரவையை உருவாக்கினார். ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் பிளவுபட்டுப் பலவீனமடைந்தன. இன்றும் அதே தந்திரோபாயத்தின் மூலம் பலகட்சிகளைப் பகுதியாகவோ, முழுமையாகவோ மடக்கி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டு வருமளவுக்கு வலுப் பெற்றுள்ளார். இவ்வாறே சர்வதேச அரசியலிலும் சீனாவின் பக்கம் உறுதியாக நின்ற போதிலும் மேற்கு நாடுகளுடனும், இந்தியாவுடனும் நெருக்கமான உறவுகளைப் பேணிவருகிறார்.

இன்று இலங்கையின் சர்வ வல்லமையுள்ள ஜனாதிபதியாக விளங்கும் மஹிந்த ராஜபக்ஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரின் ஆதரவு கொண்ட நாடாளுமன்ற அதிகாரத்துடன் மிகவும் சக்தி வாய்ந்த மனிதராக விளங்குகிறார்.

அதாவது அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வந்து இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியுள்ளது. இதை அவர் எவ்வாறு பயன்படுத்துகிறார் அல்லது பயன் படுத்தப்போகிறார் என்பது தான் இப்போது எழும் கேள்வி.

ஆனால் இத்தகைய ஒரு அரியவாய்ப்பு புறமொதுக்கப்பட்டு நிறைவேற்று அதிகாரமும், மூன்றில் இரண்டு நாடாளுமன்றப் பெரும்பான்மையும் இனப்பிரச்சினைத் தீர்வை மேலும் சிக்கலாக்கிப் பின் தள்ளும் வகையில் பாவிக்கப்படுகிறது என்பதே யதார்த்தமாகும்.

18ஆவது திருத்தச் சட்டமும், உள்ளூராட்சிச் சபைகளுக்கான திருத்தச் சட்ட மூலமும் நடைமுறையில் இல்லாவிட்டாலும் சட்டபூர்வமாக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட சில அதிகாரங்களைப் பறிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன. அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு சுற்றுநிருபத்தின்படி ஆசிரிய இடமாற்றங்கள் தொடர்பான மாகாணசபையின் அதிகாரம் கூட கல்வியமைச்சினால் பறித்தெடுக்கப்பட்டு விட்டது. இத்தகைய திருத்தச் சட்டங்களுக்கு அரசாங்கத்துடன் இணைந்துள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளும் ஆதரவு வழங்குகின்றன என்பது தான் வெட்கக்கேடான விடயம்.

அண்மையில் வெளியிடப்பட்ட பொது நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சிங்கள மொழி மூலம்தோற்றியோரில் 257 பேர் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழ் மொழி மூலம் தோற்றியோரில் ஒருவர் கூடத் தெரிவு செய்யப்படவில்லை. இதே போன்று கடந்த வருடமும் தெரிவு செய்யப்பட்ட 32 பேரும் சிங்கள மொழி மூலம் தோற்றியவர்களே. அதாவது இலங்கையின் பொது நிர்வாக சேவை வேகமாகச் சிங்கள மயப்படுத்தப்பட்டு வருவதற்கு இது ஒரு சாட்சியமாகும். எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் அரசுடன் தொடர்பு கொண்டு தங்கள் காரியங்களை நிறைவேற்ற சிங்களம் தெரிந்திருப்பது தவிர்க்க முடியாததாகும்.

இப்படியாகப் புற்றுநோய் போல மேலும் மேலும் தமிழ்மக்களின் உரிமைகள் பறிக்கப்படும்போது இனப்பிரச்சினைத் தீர்வு சிக்கலுக்குள் தள்ளப்படுவது மட்டுமன்றி எட்ட எட்டப் போய்க் கொண்டிருக்கும் நிலைமையே உருவாகி வருகிறது.

அதே வேளையில் இனங்களுக்கிடையே கசப்புணர்வை வளர்க்கவும், முறுகல் நிலையை உருவாக்கி மோதல்களை ஏற்படுத்தவும், இன்னும் சொல்லப் போனால் ஒரு இனக்கலவரத்தை உருவாக்கும் வகையில் சிங்கள மக்களைத் தயார்ப்படுத்தும் ஒரு நிலை தோற்றுவிக்கப்படுகிறதா என்ற கேள்வியை அண்மையில் இடம் பெற்ற சில சம்பவங்கள் எழுப்பியுள்ளன. அதாவது சிங்கள மக்களே மேலாதிக்கம் படைத்தவர்கள் எனவும் அவர்கள் எது செய்தாலும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனப்போக்கு அவர்கள் மத்தியில் திட்டமிட்டு ஊட்டப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுகிறது.

தென்னிலங்கையிலிருந்து வந்து யாழ். புகையிரத நிலையத்தில் தங்கியிருந்து தங்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்றும் படி பிடிவாதம் பிடித்தல், சுற்றுலாப்பயணிகளாக வந்து யாழ்.நூலகத்துக்குள் புகுந்து குழப்பம் விளைவித்தல், தந்தை செல்வா நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ள வளாகத்துக்குள் புகுந்து அழிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், தமிழ்ப் பிரதேசமெங்கும் புத்தர் சிலைகளை நிறுவுதல், தமிழ் ஊர்களைச் சிங்களப் பெயரிட்டு அழைத்தல், இராணுவக் குடியிருப்புகள் என்ற போர்வையில் வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுதல் போன்று இடம்பெறும் பல சம்பவங்கள் ஏதோ ஒரு அபாயத்தைச் சுட்டிக் காட்டுவனவாகவே தோன்றுகின்றன. அதாவது இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமானது'' அவர்கள் எங்கும் எப்படியும் நடந்து கொள்ளலாம், ஏனைய மக்களின் உணர்வுகளை மதிக்க வேண்டியதில்லை என்ற மேலா திக்கக் கருதோட்டத்தை அவர்கள் மத்தியில் வலுப்படச் செய்வதே இச்சம்பவங்களின் உள்நோக்கம் எனக் கருத வேண்டியுள்ளது.

இன்று சுவரொட்டிகள் ஒட்டுபவர்கள் கைது செய்யப்படுகின்றனர். ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் தடுக்கப்படுகின்றன. சில சமயங்களில் பொலிஸாரால் தாக்கப்படுகின்றன. சுவரொட்டிகள் ஒட்டுவது, ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பன ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் தங்கள் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தக்

**ஞாயிறு காரம்**

கையாளும் அனுமதிக்கப்பட்ட வழிமுறைகள். ஆனால் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு அவற்றுக்கு எதிரான அடக்குமுறைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் தமிழ் மக்களுக்கு விரோதமாக மேற்கொள்ளப்படும் சட்ட விரோத நடவடிக்கைகள், இனவாதத்தை தூண்டி இனமுறுகல்களைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் என்பன பொலிஸார், ஆயுதப்படையினர் முன்னிலையிலேயே இடம்பெறுகின்றன. ஆனால் பொலிஸார் அவற்றைத் தடுத்து நிறுத்துவதோ அல்லது சம்பந்தப்பட்டவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதோ கிடையாது.

எனவே இன ஒடுக்குமுறை மூலம் இனவாதத்தைத் தூண்டும் இந்த நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்துக்குள் இருக்கும் வலிமை மிக்க சில சக்திகள் பின்னணியில் உள்ளன என்பது புலப்படுகின்றது. அதாவது சிங்கள இனமேலாதிக்க வெறி சிங்கள மக்கள் மத்தியில் திட்டமிட்ட வகையில் மக்கள் மயப்படுத்தப்பட்டு வருகின்றது.

இச் சம்பவங்களுக்குச் சிகரம் வைத்தாற் போன்று அண்மையில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி லெப்.கேணல் அனில் அமரசேகர சாட்சியமளிக்கையில் இலங்கையில் தமிழர், முஸ்லிம்கள் என அழைக்கப்படுவதற்கு எமது ஒரு தரப்பும் இல்லையெனவும் அனைவரும் சிங்கள என அழைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்ததிருந்தார். இதேவிதமான ஒரு கருத்தை முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா முன்பொரு பத்திரிகைப் பேட்டியில் குறிப்பிட்டதை நாம் மறந்து விட முடியாது. இவற்றை நாம் எவ்விதத்திலும் தனி நபர்களின் கருத்துக்கள் எனப் புறமொதுக்கி விட முடியாது. மாறாக இவை ஆயுதப்படைகள் மத்தியில் இனவெறி மேலாதிக்கச் சிந்தனை எவ்வளவு தூரம் வலுப்பட்டுள்ளது என்பதன் வெளிப்பாடு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவற்றிலிருந்து நாம் இரு விடயங்களைத் தெரிந்துகொள்ள முடியும். ஒன்று, சிங்கள மக்கள் மத்தியில் திட்டமிட்டு வலுப்படுத்தப்படும் இனமேலாதிக்க வெறி, மற்றது- வெவ்வேறு சட்டங்கள் மூலமும், அரசாங்கத்தின் கட்டளைகள், நடைமுறைகள் மூலமும், தமிழ் மக்கள் அனுபவிக்கும் மிகக் குறைந்த பட்ச உரிமைகள் கூட பறிக்கப்படும் கயமைத்தனம்.

இதில் நாம் அவதானிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் நாம் குறிப்பிட்ட சம்பவங்கள் அனைத்துமே தனித்தனிச் சம்பவங்களாகவே நோக்கப்படுகின்றமை ஆகும். இவற்றுக்கு எங்கோ ஒரு மையத்திருந்து மறைமுகமான குழுவினால் இயக்கப்படும். அரசியல் பின்னணி உண்டு என்பது வெளியே தெரிவதில்லை. அப்படி அவற்றை எமது மக்கள் உணரும் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ்க்கட்சிகள் அவற்றைப் பூசிமெழுகத் தவறுவதும் இல்லை.

இவற்றைத் தனித்தனிச் சம்பவங்களாக நோக்குவதில் உள்ள அபாயம் என்னவென்றால், எங்கள் கவனம் இவை தொடர்பான விடயங்களிலேயே திசைதிருப்பப்படும். எங்கள் கவனம் இப்படியே திசை திருப்பப்பட இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் கிடப்பில் போடப்படும். அதே வேளையில் தீர்வுக்கான சாத்தியங்களும் மெல்ல மெல்லப் பின் தள்ளப்படும்.

இது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் சாணக்கியத்தின் இன்னுமொரு ஆற்றல் மிகு வெளிப்பாடுதான்.

எவ்வாறு எதிர்க்கட்சிகளை உடைத்துச் சிதைத்துத் தன்னை ஒரு அதி சக்தி வாய்ந்த மனிதராகப் பலப்படுத்திக் கொண்டாரோ. அவ்வாறே வெவ்வேறு வழிகளில் தமிழ் மக்களுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து அவர்களை வெறுங்கையர்களாக்கி பலவீனப்படுத்தி தமது உரிமைகளுக்காக போராடும் அவர்களது வலுவைச் சிதைப்பதே அவரது நோக்கமாகும்.

இத்தகைய திசை திரும்பல் சதிகளுக்கு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சில தமிழ்க்கட்சிகளும் துணைபோவது தான் கவலையளிக்கும் விடயமாகும்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 20 மாதங்கள் கடந்த பின்பும் இன்று வரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு சிறு முன்னெடுப்பும் இடம்பெறவில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் சட்ட பூர்வமாகவும், சட்ட பூர்வமற்ற வழிமுறைகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே நாளாந்தம் எமக்கு மேல் திணிக்கப்படும் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அதே வேளையில் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை எட்டும் முயற்சிகளில் தீவிரமாகச் செயற்பட வேண்டியது முக்கியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டு நீங்காத மூன்றாண்டு நினைவலை



அமரர்
பரமநாதன்
ஜெயக்குமார் [ஜெயா]

திதி: துதியை (08.11.2010)

**அன்னை மடியில்:**
**20.07.1982**

**ஆண்டவன் பிடியில்:**
**11.11.2007**

எங்கள் அன்பின் ஜெயாவே!
எங்கள் வீட்டில் ஒளி தந்த தூண்டாமணி விளக்கே!
நீ ஓடிமறைந்து மூன்றாண்டுகள் ஆனதுவே!
உன் முல்லை மலர் சிரிப்பும், முகம் மலர்ந்த தாமரையும்
சொல்ல வொண்ணா சோகத்தில் எமை அழுத்துதைய்யா
உனது புன் சிரிப்பும் அன்பான பேச்சையும் தேடி
அலைகிறோம் எங்கள் ஜெயாவே!
ஆயிரம் பேர் எமக்கு ஆறுதல் சொன்னாலும்'
உன் வார்த்தைக்கு ஈடாகுமா ஜெயா
கந்த ஷஷ்டி திருநாளில் கந்தன் அருள்பெறுவதற்கு
கல்வளைப் பிள்ளையார் பாதம் பணிந்து
திரும்பிவரும் வேளைதனில்
கயவர்களின் பிடியில் சிக்கி கந்தன் தன்
காலடியில் உனை அழைத்தானே ஜெயா!
கந்த ஷஷ்டி திருநாள் வந்ததுமே உனை மறந்தவர்கள்
கூட நினைக்கின்றார்கள் ஜெயா
உன்னை என்றுமே மறக்கக் கூடாது என எண்ணி
என்றுமே மங்காத கந்த ஷஷ்டி திருநாளில் கொடியவர்கள்
உனை இறைவன் அடி சேர்த்தார்களோ
உதிரத்தில் எழுதினாலும் உனது பாசத்திற்கு
உயிர் கொடுக்க முடியாது ஜெயா!
மூன்றாண்டுகள் என்ன
மூவாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவு எமைவிட்டு அகலாது ஜயா ஜெயா!
உன்நினைவால் இங்கிருக்கும் நாமும்
அன்னிய நாட்டில் வாழும் உன் அண்ணன் தம்பியும்
தீயாக கனத்த இதயத்தோடு வாடி வதங்கி உன்
ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
எவ் ஆலயம் சென்று நீவரும் வழியில்
எமைவிட்டுபிரிந்து சென்றாயோ
அவ் ஆலயத்தில் உன் ஆத்ம சாந்திக்காக
அன்னதானம் செய்து உன் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துடிதுடிக்கும்:
உன் அம்மா, அண்ணாமார், அக்கா, தம்பி, அத்தான்,
அண்ணிமார், சித்தப்பா, பெறாமக்கள், மருமக்கள்.

தாவளை, இயற்றாலை,
கொடிகாமம்.

(105437)


## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, ஈச்சமோட்டைச் சந்திக்கு
அண்மையாக சுவாமியார் வீதியில் ½ பரப்புக்
காணியுடன் உள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து
காலை 6 தொடக்கம் இரவு 8 மணிவரை
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
(105318)

## தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவ
முள்ள மற்றும் பழகவிரும்பும்
பெண் பிள்ளைகள் தேவை.
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T..P 021 2222899
(இ/572496)

## வீடு விற்பனைக்கு

K.K.S Road இற்கு அருகில் கோண்டாவில்
மேற்கு, கோண்டாவில் சந்திக்கும், இணுவிலுக்கும்
இடை யில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0714946056, 0777406087,0114854576
(105512)

## காணி விற்பனைக்கு

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து 100 யார் தூரத்தில் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியின் மூன்றாவது ஒழுங்கையில் 2.ஆவது. காணி நான்கு பக்கங்களும் மதிலுடனும் கிணற்றுடனும் கூடிய ஒரு பரப்பும் 4 குழியுமான விஸ்தீரணம் கொண்ட காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:தொ.பே: 07766299161

## காணி தேவை

யாழ்.நகரில் இருந்து
- A-9 வீதியில் அரியாலை வரை,
- K.K.S வீதியில் தாவடி வரை,
- பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தி வரை,
- மானிப்பாய் வீதியில் ஆனைக்கோட்டை வரை

5 பரப்புக்கு மேல் காணி அல்லது வீட்டுடன் காணி தேவை.
தொடர்பு : 0772032880
(105624)


ஓம் நமசிவாய

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23.04.1935
உதிர்வு: 06.11.2003

வல்வெட்டித்துறையைப்
பிறப்பிடமாகவும்
ஆலய வீதி, காங்கேசன்துறையை
வசிப்பிடமாகவும் கொண்ட
**திருமதி முத்துசாமி**
**செல்லபாக்கியம்**
எமது குடும்பத் தலைவியின் ஏழாம்
ஆண்டு சிரார்த்ததினமாகிய இன்று
(07.11.2010) ஞாயிற்றுக்கிழமை
வதிரி பரமானந்த ஆச்சிரமத்தில்
நடைபெறும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் தொடர்ந்து
நடைபெறும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு எமது உற்றார்,
உறவினர், நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கணவர்- முத்துசாமி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
ஐயனார் வீதி, பருத்தித்துறை.

(105440)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்:
24.09.1926

ஆண்டவன் அடியில்
08.10.2010

## அமரர் கந்தையா சின்னப்பா



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
பாசமுள்ள எங்கள் அப்பாவே!
புன்சிரிப்பின் புகழிடமே-உங்கள்
பூ முகத்தை இனி எங்கே காண்போம்
மெழுகுவர்த்தியாக நீங்கள் உருகி எம்மை
மேன்மையடைய வைத்த தெய்வமே
நீங்கள் இல்லாத வீடு ஒளியிழந்து விட்டது
மண்ணில் நாம் உங்கள் பிரிவால் துடிக்கின்றோம்
விண்ணில் சொர்க்க வாசல் திறந்திருந்ததோ - அப்பா?
எங்கள் உயிரும் உணர்வும் உள்ளவரையில்
நாம் எப்படி தந்தையே உங்களை மறப்பது?
எங்கள் அன்புத் தெய்வமே
உங்களின் ஆத்மா சாந்தியடைவதாகுக
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இன்று (07.11.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக் கிருத்தியம் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் எல்லோரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.**

கைதடி கிழக்கு, கைதடி.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சிகளை விரட்ட மூலிகைகளை எரித்துப் புகையூட்டும் பாதுகாப்பு முறையைத் தெரிந்து வைத்திருந்த யாழ்.மக்கள்

**குறிப்பு**

*யாழ்ப்பாணத்தில் தாம் கடமையாற்றிய வேளையில் தமது சிவில் நிர்வாகக் கடமைகளின்போது தாம் பெற்ற அனுபவங்கள் குறித்து லியனார்ட் வூலப் தாம் எழுதிய நூலில் விபரித்துள்ள குறிப்புக்கள் இவ்வாரமும் தொடர்கின்றன.*

மன்னாரிலிருந்து திரும்பியதும் நான் வன பரிபாலனப் பாதுகாவலர் ஜி.டி.ரெம்ப்ளருடன் (G.D.Templer) தங்கினேன். இவரது பங்களா யாழ்ப்பாணக் கடற்கரையோரமாக அமைந்திருந்தது. எமது பங்களாவில் எந்த நேரமும் கடல் மணம் வீசிக்கொண்டிருக்கும். எமது பங்களாவிலிருந்து சற்றுத் தூரத்தில் ஒரு வீட்டில் ஆங்கிலேய விதவை ஒருவர் தனது இரு பெண்பிள்ளைகளுடன் வசித்து வந்தார். நாங்கள் அவர்களுடன் இணைந்து ''வாக்கிங்'' போவதை வழமையாகக் கொண்டிருந்தோம்.

அவர்களில் க்வென் (Qwen) என்ற யுவதிமீது எனக்கு விருப்பம் ஏற்பட்டது. அவரும் என்னை விரும்பினார். 1906 ஆம் ஆண்டு இருட்டிய பிறகு இரண்டு இளம் பெண்களுடன் கடற்கரையில் திரிவது என்பது இலங்கையில் ஒரு அசாதாரணமான விடயமாகக் காணப்பட்டது. பெரிதும் மதிக்கப்படும் அந்த யுவதிகளின் தாயாரும் இதனை அனுமதித்திருந்தார். நாங்கள் கடற்கரை மணலில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருப்போம். பல வருடங்களுக்குப் பின்னர் அவர் திருமணம் செய்து கொண்டார். எனினும் எனக்கு அடிக்கடி கடிதம் எழுதுவார்.

ஒரு நாள் நான் நீண்டதூரம் பயணம் செய்து விட்டுத் திரும்பியிருந்தேன். என்னிடமிருந்த வெள்ளைக் காற்சட்டைகளில் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டேன். காற்சட்டை முழவதும் தெள்ளுகளாகக் காணப்பட்டது.

நிலத்திலும் தெள்ளுகள் காணப்பட்டன. நான் எனது வேலைக்காரப் பையனைக் கூப்பிட்டேன். அப்போது மீனவ சமூகத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி அங்கு வந்தாள். நான் தெள்ளுகளுடன் அவஸ்தைப்படுதைக் கண்டு விட்டுப்போய் ஏதோ மூலிகைகள் சிலவற்றை எடுத்து வந்தாள். வேலைக்காரப் பையனிடம் கடதாசி எடுத்து வரச்சொன்னாள். வேலைக்காரப் பையன் கொண்டு வந்த கடதாசியில்தான் கொண்டு வந்த மூலிகைகளைப் போட்டுவிட்டு நிலத்தில் வைத்து நெருப்பை மூட்டினாள். தெள்ளுகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன.

ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் வில்லியம் துவைனத்தின் பங்களா எமது பங்களாவிலிருந்து சிறிது தூரத்திலிருந்தது. அப்போது அவருக்கு வயது 79. ஐம்பது வருடங்கள் குடியியல் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய துவைனம் தனது பதவிக்காலம் முழுவதையும் யாழ்ப்பாணத்திலேயே கழித்ததுடன் நாற்பது வருடங்கள் வடமாகாண அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியவர்.

இவருக்கு முதல் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய டைக் நாற்பது வருடங்கள் அரசாங்க அதிபராகக் கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் எண்பது ஆண்டுகள் இரண்டு அரசாங்க அதிபர்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்துள்ளது.

துவைனம் தனது வாழ்நாளில் ஒரேயொரு தடவை மட்டும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நியமனம் பெற்று வரும் குடியியல் உத்தியோகத்தர்கள் மரியாதையின் நிமித்தம் துவைனத்தைச் சென்று சந்திப்பது வழக்கம். நான் துவைனத்தைச் சந்திக்கச்செல்லும் போதெல்லாம் அவருடன் உள்ளூர் தலைமை அதிகாரியொருவரும் காணப்படுவார். இவருக்கு யாழ்.குடாநாட்டிலுள்ள தாதாக்களுடன் (Undenground world) தொடர்பு உண்டு.

**ஆவணப் பெட்டகம் 17**

துவைனம் கடற்படைத் தளபதி பதவியிலிருந்து இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டுப் பதவி நீக்கம் செய்யப்பட்டவர். ஆனால் துவைனத்திடம் இதைப் பற்றிக் கேட்பதற்கு எனக்குத் துணிவு வரவில்லை. ஆனால் அவரே இதைப் பற்றிச் சொன்னார். ஒருமுறை காலி முகத்திடலில் கடும் வெப்ப காலத்தில நடு மத்தியான வேளையில் இராணுவ அணிவகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சூரியக்கதிர்த் தாக்கம் காரணமாகப் பத்துப் பன்னிரண்டு பேர் வரையில் மயங்கி இறந்தனர். இது 1840 ஆம் ஆண்டு நடந்தது.

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

நான் முத்துக்குளிப்பு முடிந்து திரும்பியதும் யாழ்ப்பாணத்தில் பாரிய மாற்றம் ஒன்று இடம்பெற்றது. அரசாங்க அதிபர் லூயிஸ் கண்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

போர்டினண்டோ ஹம்லின் பிறைஸ் (Fendinando Hamlyn price) அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். பிறைசுக்கு 51 வயது, 25 வருட குடியியல் சேவை அனுபவம் பெற்ற உத்தியோகத்தர். இலங்கையிலுள்ள எவருமே நடைமுறையில் ஜெண்டில்மன் அல்ல என பிறைஸ் நம்பினார்.

பிறைஸ் குதிரைச் சவாரி செய்வதையும், கோல்ப் விளையாடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒருசமயம் காலி முகத்திடலில் குதிரைச் சவாரியிலீடுபட்டிருந்த போது குதிரையிலிருந்து வீழ்ந்ததில் பிறைஸின் நெற்றியில் பலமான அடிபட்டது. அதிலிருந்து பிறைஸின் புத்தி சற்றுப் பேதலித்துக் காணப்பட்டது.

**நாண்டவன்**

(வளரும்)

# பவள மல்லிகை, குருக்கத்தி, சிவகரந்தை இவை மூன்றும் சிறந்த மூலிகைகள்; வழிபாட்டுக்கும் உகந்தவை

### பவள மல்லிகை

வேறுபெயர் - பாரிஜாதம், சேடல், பவழக்கால் மல்லிகை
தாவரவியற்பெயர்: Nyctanthes arbortristis (நிக்ராண்தஸ் ஆர்போர்ரிஸ்ரிஸ்)
குடும்பம்: Oleaceae (ஒலியேசியே)
சிங்களப் பெயர்: ஸேபாலிகா
சமஸ்கிருதப் பெயர்: பாரிஜாத
ஆங்கிலப் பெயர்: Tree of Sorrow; Night Jasmine

தேவலோகத்திலிருந்து பாரிஜாத மரத்தை ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா பூலோகத்துக்குக் கொண்டுவந்து ருக்மணிதேவியின் அரண்மனையில் நட்டதாக மகாபாரதம் கூறுகிறது. இது சிறு மரவகுப்புக்குரியது.



தனி இலைகள். சொரசொரப்பானவை. முட்டை வடிவாக வும் கூர் நுனியுட னும் காணப்படும்.

இலை விளிம்பு பற்களுள்ளதாக அல்லது அழுத்தமாக இருக்கும். பூக்கள் மல்லிகைப் பூ வடிவமும் மணமும் உடையதாக இருக்கும். பூக்காம்பு மஞ்சள் கலந்த செம்மஞ்சள் நிறமுடையது. அதாவது பவளத்தின் நிறத்தை ஒத்திருப்பதால் இதற்குப் பவளமல்லிகை என்று பெயர். மழைக்காலத்தில் அதிகமாகப் பூத்துச் சொரியும்.

இதன் இலை, பூர், வேர்ப்பட்டை என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இலையைக் குடிநீர் செய்து கொடுக்க நாரிப்பிடிப்பு, நாரிநோ, முதுகுவலி, மலச்சிக்கல் என்பன குணமாகும்.

பூவைக் குடிநீர் செய்து மூலநோய், மூலவாயுவுக்குக் கொடுக்கலாம்.

வேரை அரைத்துப் பாலிலே கலந்து கொடுக்க வெள்ளை சாய்தல் நீங்கும்.

### குருக்கத்தி

வேறுபெயர்: மாதவி, குருகு.
தாவரவியற்பெயர்:Hiptage Parviflora (ஹிப்ரேஜ் பார்விபுளோரா)
குடும்பம் : Malpighiaceae (மல்பிஜியேசியே)
சமஸ்கிருதப்பெயர் : மாதவி

குருக்கத்திப் பூ முருகனுக்கு உகந்தது. கண்ணனும் விரும்பிச் சூடும் பூ இதுவாகும். ''குடந்தைக் கிடந்த எங்கோவே குருக்கத்திப் பூச் சூட்ட வராய்'' என்று பெரியாழ்வார் கண்ணனை அழைத்துப் பாடியுள்ளார்.

இது மரக்கொடி வருப்புக்குரியது. தனி இலைகள்.



எதிரொழுங்கில் காணப்படும். பூக்கள் பூந்துணரில் உருவாகும். நுனிவளர் பூந்துணர். பூக்கள் வெண்மை நிறம்.

இதன் பூவைக் குடிநீர் செய்து குடித்து வர தலைச் சூடு, நீர்வேட்கை என்பன நீங்கி உடலுக்குக் குளிர்ச்சியுண்டாகும்.

பூவை அரைத்து சிலேஷ்ம விரணங்கள் மீது பூசிவர அவை மாறும்.

### சிவகரந்தை

வேறுபெயர்: நறுங்கரந்தை
தாவரவியற்பெயர்: Saphaeranthus amaranthoides (ஸ்பீரோந்தல் அமராந்தோலிட்ஸ்)
குடும்பம்: Compositae (கொம்பசிற்றே)
சிங்களப் பெயர்: முட மஹந்த

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்


சமஸ்கிருதப் பெயர்: முண்டி.
ஆங்கிலப் பெயர்: East Indian Globe - Thistle.

''நொச்சியாயினும் கரந்தையாயினும் பச்சிலையிட்டுப் பரவுதல் தொண்டர்'' என்று இதனைக் கொண்டு சிவனைப் பரவுதலைப் பட்டினத்தார் குறிப்பிட்டுள்ளார்.

கரந்தையில் குத்துக்கரந்தை, கொட்டைக் கரந்தை, சுரைக் கரந்தை, சூரியக் கரந்தை, சிவகரந்தை என்று பலவகையுண்டு.

இவற்றுள் சிவகரந்தையும், கொட்டைக் கரந்தையும் ஏறத்தாழ ஒரேமாதிரியானவை. ஆயினும், சிவகரந்தை சிறப்பான நறுமணமுள்ளதால் நாறுங்கரந்தை எனப்படுகிறது. மணத்தைக் கொண்டே இவற்றை வேறுபடுத்த முடியும்.

சிவகரந்தையும், கொட்டைக் கரந்தையும் வயல் நிலங்களிலும், தோட்டங்களிலும் வளரும் பூண்டாகும். 1 - 1 1/2 அடி உயரம்வரை வளரக்கூடியது. சிறிய, நீண்ட தனி இலைகள். மாற்றடுக்கில் தண்டில் அமைந்திருக்கும். பூக்கள் சற்று நீண்ட முட்டை வடிவாக அல்லது உருண்டை வடி வான மஞ்சரியாகக் காணப்படும். வெண்மை, செம்மை, நீலம், இளஞ்சிவப்பு கலந்த நிறமுடைய யானவாக இருக்கும். மஞ்சரியில் நூற்றுக் கணக்கான பூக்கள் இணைந்து கொட்டைபோல இருப்பதாலயே கொட்டைக்கரந்தை என அழைக்கின்றனர்.



இலை, பூ, விதை, வேர், வேர்ப்பட்டை முதலிய அனைத்துப் பாகங்களும் மருத்துவத்தில் பயன்படுகின்றன. இவை அனைத்தையும் உலர்த்திப் பொடிசெய்து 1/2 - 1 கிராம் அளவில் பனங்கட்டி சேர்த்துச் சாப்பிட்டுவர மலச்சிக்கல், சொறி, சிரங்கு, கரப்பன், தோல் நோய்கள், வாதப்பிணிகள், குடற்புழுக்கள் என்பன தீரும். மூலநோயும் குணமாகும்.



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 137




அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. வலமிருந்து பார்த்தாலும் இந்த ஏளனப் புலவர் தோன்றுவார்.
5. துணை என்று பொருள் தரும்.
7. காயத்தின் மறு/ அடையாளம்.
8. வணங்குதல்/ தொழுதல்/ கும்பிடல்.
10. பல மரக்கறிகளுடன் வரும். இட்லிக்கு/ தோசைக்கு பக்க உணவு.
12. சாப்பிடு.
13. ஒரு ரூபாவின் நூறில் ஒன்று/ நூறு.
14. பாவம் செய்தவன்.
16. நெருப்பு / தீ.
17. சிறிது. ஆனால் காரம் பெரிது.
18. பசளை.
19. வடிவம்.
20. குளிர்மை.
21. இனிமையானது/ சீனித் தயாரிப்புக்கு மூலம்.
23. வைகறையில் கீழ் வானத்தில் தோன்றும்.
24. விதவை நிலைமை.

### மேலிருந்து கீழ்

1. கமக்காரன்.
2. கொடுமையான/ கடுமையான.
3. திருடுதல்.
4. கண்.
5. இணக்கம்.
6. பலதையும் குறிக்கும்/ வாயில் இருப்பதையும் குறிக்கும்.
9. அரசன்/ ஊர்/ புனித இடம்.
11. விவசாயம்.
15. பகுபத உறுப்பில் ஒன்று.
16. அகப்பை போன்றது/ அள்ளிப்போட உதவும்.
17. கறுப்பு நிறத்தைக் குறிக்கும் அடைமொழி.
18. ஒத்தாசை.
19. உருண்டு செல்லக் கூடியது.
21. பன்மையையும் குறிக்கும். போதையையும் தரும்.
22. நெருப்பில்லாமல் வராது.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலினோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 135 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)சதாவதானி. (5)சபா.(7)கண்டம். (8)அமனி.(9)திடும். (10)பலன். (11)பலம். (13)நால்வகை.(15) பகுதி. (16)சமைதல்.(18)பதம்.(20)பாதி.(21)தும்புக்கட்டை.

### மேலிருந்து கீழ்

(1)சகதி. (2) தாண்டுதல். (3) வடம். (4) தாம். (5)சமன்.(6) பாளி. (8)அலம்பல்.(10) பல.(11)பகைமை. (12)நீதிபதி.(13) நாற்பது. (14)வசம்பு.(17)தருக. (19)தம். (20)பாடை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 135 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **செல்வி த.சுவர்ணா,** மு/பாலிநகர் மகா வித்தியாலயம், வவுனிக்குளம்.

2 ஆம் பரிசு — **தே.சுனீத்தா,** 'ஸ்ரீபதி' சுதுமலை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.

3 ஆம் பரிசு — **தி.றதீஷன்,** புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை.

4 ஆம் பரிசு — **பா.அம்புஜன்,** புனித பத்திரிசியார் கல்லூரி விடுதி, யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு — **செல்வி ச.றிலானி,** இல.811, சிவிக் சென்றர்,வட்டக்கச்சி, கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி **கோமதி கமலகாசன்,** இராமகிருஷ்ணா வீதி, கோண்டாவில்.

(2) **சிவநாதன் மயூரன்,** 24/4, 1/1, பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை.

(3) **த.வாசுதேவன்,** கப்பம் புலம், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப் பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 137**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 17.11.2010 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.137 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 21.11.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

# கூசக்கப்படும்....

*(13ஆம் பக்கத் தொடர்ச்சி)*

"உம்! உம்!"

சில வேளைகளில் எசமானியம்மாளின் காதுகளில் இந்த உரையாடல்கள் விழுந்துவிடும். அவ்வளவுதான். அறைக்குள் ஐயாவை அழைத்து மிரட்டல் நாடகம் அரங்கேறும்.

"என்ன தீபாவளி அது இதுன்னு தங்கமணியைக் கொழப்புரிங்க, அதுக்கு இங்க என்ன கொறை, சும்மா இருக்கிற புள்ளய அது இதுன்னு எதையாவது சொல்லி சீண்டிக்கிட்டிருக்கிறதே உங்களுக்கு வேலையாபோச்சு..."

சிறுமியைத் தீபாவளிக்கு அனுப்பி வைக்கும் ஐயாவின் அந்த நினைவு அறுந்துவிடும். என்றாலும் ஒருநாள் மறுபடியும் ஒருநாள் அந்தக் கறுவல் நிற அப்பன் வருகிறபொழுது அந்த நினைவு மறுபடியும் வந்தவராக "அடடா தங்கமணியைத் தீபாவளிக்கு அனுப்பாமல் விட்டிட்டமே. சரி கொஞ்சம் பணம் கூடக் கொடுத்து அப்பனோடு அனுப்பி வைப்போம். பச்சப்புள்ளதானே அம்மாவோட கொஞ்சம் இருந்திட்டு வரட்டும்" என மனதிற்குள் மனித நேயம் நெருட அப்பனிடம் விசயத்தைச் சொல்லி அசட்டுத்தனமாகச் சிரிப்பார். அப்பனோ சர்ப்பம் தீண்டியவனாகக் குதிப்பான்.

"ஐய்யய்யோ என்னங்க ஐயா குட்டி வேலை செய்யுரா இல்லியா, கொன்னுபுடுவேன், சிறுக்கி அங்கே போய் ஆத்தாவுக்கு என்ன செஞ்சுடப் போரா, உங்க காலடியிலே சவமேன்னு கெடந்து வேலை செஞ்சா, நானு, அவ ஆத்தா ஏதோ அரைக் கஞ்சியாவது குடிசிக்கிட்டுக் கெடப்போம்..." எனப் படபடவென அலறுவான்.

கதவருகில் எசமானியம்மாளின் உருவம் தோன்றும், கோபம் கொண்ட முனிவர்களுடைய கண் போல் கண்கள் நெருப்பினை உமிழும்.

"என்ன சொல்லியும் இந்த மனுஷனுக்கு ஏறுதில்லையே" எனப் பற்கள் நறநறக்க அங்கலாய்த்துக் கொள்வாள். தங்கமணியின் அருமை எசமானிக்கு அல்லவா தெரியும்.

இவ்வளவு நாடகத்தையும் இன்று கண்கள் கண்டு விட்டன. நெஞ்சிற்குள் கல் செருகிக் கொண்டாற் போல் இறுகிவிட விக்கித்து ஜன்னலருகில் அமர்ந்து வெளியிலகில் பார்வை இலயித்த பொழுது முருங் கைக் கொப்பிலிருந்து 'சளா'ரெனச் சிட்டுக் குருவி கள் சிறகடித்துப் பறந்தன. பட்சிகள் வான் கடலுக் குள் ஒரு புள்ளியாய் அமிழ்ந்து விடும் வரை விழி மடல்களில் அசைவில்லை.

மலைச் சரிவுகளில், நீரோடைகளில், செம்மண் வெளிகளில், தேயிலைச் செடிகளின் 'இடைவெளிகளில் கால்களை இழுத்து இழுத்து ஓடிடச் சின்னாள், வேலன், தெய்வானை, மீனாட்சி இப்படியொரு கூட்டத்துடன் சிட்டுக் குருவிகளாப் பறந்தோடி, கூச்சலிட்டு ஆர்ப்பரித்துச் செல்வதில் மனமும், கண்களும் இலமித்துக் கிடக்கின்றன.

"கங்கா!"

எவரோ அழைக்கிறார்கள். அட, எசமான் குரல்தான். நினைவு கலைந்து, எழுந்து நடந்தபொழுது, ஆமாம் எசமான்தான் கடையைத் திறக்கப் போய்விட்டிருப்பாரே. மறுபடியும் வந்துவிட்டிருப்பாரா என்ன? இல்லை! இல்லை! அவள் நினைத்தது மாதிரி எசமான் அழைக்கவில்லை. அவர் எப்பொழுதோ போய்விட்டார்.

தங்கமணி எசமானியின் படுக்கை அறை அருகில் வந்து நின்றாள். அது சாத்திக் கிடக்கிறது! மெதுவாகத் திறந்தாள். ஆ....! கடவுளே!

***

விரைவாகப் பறந்து கொண்டிருந்த பஸ் வண்டி மலையகத்தின் நகருக்குள் இருள் லேசாகக் கனத்து விட்ட வேளையில் நுழைகிறது.

தேயிலைச் செடிகளினூடாகக் கால்களை இழுத்து 'விலுக் விலுக்' கென வேகமாக நடந்தபொழுது அப்பன் தலையில் குட்டுகளைச் சொறிந்தவாறே முணங்கிக் கொண்டு வந்தாள்.

"ஏலே! அந்த அம்மா ஒரு நாளும் உன்னை கூட்டிப் போகச் சொல்ல மாட்டாங்க. இன்னிக்கு ஏன் இவ்வளவு அவசரமாக உன்னைக் கூட்டிப்போ கூட்டிப் போன்னு நச்சரிச்சாங்க. ஏண்டி சிரிக்கி என்னடி அப்பிடி செஞ்சிட்ட....". அப்பன் இருளில் கர்ஜித்தான்.

சிறுமி மருண்டாள், மிருட்சியடைந்த கண்களால் இருளில் அப்பனை நடுக்கமுடன் பார்த்தாள். அப்பன் இன்னும் அதிகமாகக் குட்டுவானோ என்ற பயத்தில் கால்களை எட்டி எட்டி நொண்டி நடந்தாள். லயன் காம்பரா அருகில் வந்தபொழுது இருள் கண்களைக் குருடாக்குவதுபோல் கனத்து விட்டது.
காம்பராவுக்குள் அம்மா குப்பிலாம்பு வெளிச்சத்தில் எதையோ இடித்துக் கொண்டிருக்கிறாள்.

"என்ன அதிசயம், தங்கமணி இல்லே வந்திருக்கா" எனத் துடி துடித்துப் பதறியெழுந்த அவள், மகளை இறுக அணைத்துக் கொண்டாள். கண்ணீர் முத்துக்கள் மாலை மாலையாக வருஷிக்கின்றன.

"உம்.... உம்... சும்மா இருங்க. என் புள்ளை யைப் பார்த்து எத்துண வருஷமாயிருச்சி..." பெற்றவள் கொட்டும் கண்ணீர் மழை ஓயவில்லை.

"ஏலே ஒனக்கு வெவரம் தெரியுமா?"

"என்னது?"

அப்பன் அம்மாவின் காதில் எதனையோ கிசுகிசுத்தான்.

"அந்த வீட்டு ... இந்தச் சின் னச் சிறுக்கி 'கன்னா பின்னா'வென நடந்து கொள்ளுற நேரத்துலே எசமானியம்மா கண்டுட்டாங்க. அதுதான் வெரட்டிப்புட்டாங்க..."

நாரசம் காதில் பாய, அம்மாவின் குடலே அறுந்து விழுந்து விடுகிறது.

"அடிப்பாவி மகளே!"

***

இரவு!

லயனுக்குள் எங்கிருந்தோ நாயொன்று ஊளையிடுகிறது. நடுச் சாமமாகவிருக்கக் கூடும். ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்த தங்கமணி 'திடும்' என விழித்துக் கொள்கிறாள்.

குப்பிலாம்பு எரிந்து கொண்டிருக்கிறது. அம்மா சுவரில் சாய்ந்து யோசனையில் ஆழ்ந்து கிடக்கிறாள். தங்கமணி மறுபடியும் கண்களை மூடினாள் சீ....சீ... திரும்பத் திரும்ப அந்த நரகத்தனமான கனவு வருகிறது.

எவரோ அழைத்தபொழுது சென்று, எசமானியம்மாளின் படுக்கை அறைக் கதவைத் திறந்த பொழுது, எசமானியம்மாவும், அந்த டிரைவர் பயலும் முழு நிர்வாணமாக அலங்கோல நிலையில், கட்டிலில் பாம்புகள் நெளிவதைப் போல் நெளிந்து உருள்வதைக் கண்டாள் அல்லவா அந்தக் கனவு...

தங்கமணி உருண்டாள்; உளறினாள் எழுவதற்குக் கடும் பிரயத்தனப்பட்டாள். ஆ.. மிகவும் பிரயாசையுடன் திமிறியெழுந்தாள். அம்மாவைப் பார்க்கிறாள்.

அம்மாவின் முகம், முகமருகில் நாசியிலிருந்து வெளியாகும் உஷ்ணக் காற்றும், முத்து முத்தாகச் சொரியும் வியர்வை மணிகளும் சிறுமியின் முகத்தில்.

அம்மாவின் முகத்தில், அந்தக் கண்களில், பசுமையான மலர்ச்சி தெரிகிறது.

'என் பிஞ்சு மகள் கருகாதவள்' என அவள் இதயம் விசும்பி விசும்பி வேகிறது.★

# மழையின் இரு முகங்கள்

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

மின்னலும் இல்லாத இடியும் இல்லாத 'சோ' எனப் பொழிந்த இனிய மழையின் ஒலியே காதில் பலநாள் ஒலித்துக் கொண்டிருப்பதாகவும், அந்த 'சோ' எனப் பொழிந்த மழையின் காட்சியே கண்ணில் தெரிந்து கொண்டிருப்பதாகவும் காட்டுகின்றார் புலவர்.

மின்னலும் இடியும் கடுமையாக இருக்கும்போது பெய்த மழையின் நன்மையை அல்லது தன்மையை நாம் உணர முடியாமலிருந் தது. ஆயின், மின்னலும் இல்லை. இடியும் இல்லை. மழை, பெருமழையாகப் பெய்த போது, அது 'சோ' என இனிய ஓசையுடையதாக, பாணரின் யாழ் நரம்பு இசைத்தது போல இனிமையான இருந்தாக இங்கே தமது உணர்வினை இப் பாடல் கள் மூலம் வெளிப்படுத்தி, காட்சிப்படுத்தி, தாமும் இன்புற்று நம்மையும் இன்புற வைக்கின்றார் புலவர் இடைக்காடர்.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதிக் கடல்வளத்துறை எதிர்நோக்கும் சவால்கள்

## விவரிக்கிறார் கலாநிதி சூசை ஆனந்தன்

வடக்கு- கிழக்கு கடல் பகுதியில் யுத்தத்தின் முன்னதான காலப் பகுதியில் மீன்பிடித் தொழில் என்பது உச்ச நிலையில் இருந்தது. இதன் மூலம் இலங்கையின் முழுப்பாகத்துக்குமான கடலுணவு விநியோகம் வடக்கு- கிழக்கு கடற்பகுதி மூலமே நிறைவு செய்யப்பட்டது. ஆனால் யுத்த காலப் பகுதியில் இந்த நிலை முற்றுமுழுதாக மாறி வடக்குக் கிழக்குப் பகுதி மீன்பிடித் தொழிலே கேள்விக்குறியாகியிருந்தது. யுத்தம் முடிவுக்கு வந்துள்ள சூழலில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மீன்பிடித் துறையின் நிலை - அது முன்பிருந்த நிலையை எட்ட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்- இன்றும் அச்சுறுத்தலாக இருக்கும் கடல்சார் பிரச்சினைகள், சவால்கள் குறித்தும் யாழ். பல் கலைக்கழகத்தின் புவியியல்துறை விரிவுரையாளரான கலாநிதி எஸ்.சூசை ஆனந்தனுடன் நேர்காணல் ஒன்றை நடத்தியிருந்தோம். அந்த நேர்காணல் இங்கே.

கே: இன்றைய கடல்வளத் துறையின் நிலை பற்றி தங்களின் கருத்து?

ப: போர் முடிவுற்றுள்ள இந்நிலையில் வடபகுதியின் கடல் வளத்துறையானது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளமை பொதுவாக வரவேற்கக் கூடியதே. இத்துறை சார்ந்து விதிக்கப்பட்டிருந்த தடைகள், கட்டுப்பாடுகள் பெரியளவில் தளர்த்தப்பட்டுள்ளன. இத்துறைக்கான புதிய திணைக்களக் கட்டடம் ஒன்று திறக்கப்பட்டு இத்துறை சார்ந்த பணிகள் முடக்கிவிடப்பட்டுள்ளன. மீனவர்களும் சுறுசுறுப்பாகத் தமது தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதே.

கே: வடபகுதி கடல் வளத்துறை- மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பும் சாத்தியம் பற்றி?

ப: போரின் முன்னரான காலப்பகுதிக்கு வடபகுதி கடல்வளத்துறை திரும்புவதென்பது சற்றுக் கடினமானதாகவே அமையும் என நம்புகின்றேன். காரணம் இன்றைய மாதாந்த மீன் உற்பத்தியை (யாழ்.மாவட்டம்) அவதானிக்கின்ற போது வருடம் 20 முதல்- 25 ஆயிரம் மெற்றிக் தொன் வரையிலேயே அமையும் என எதிர்பார்க்கலாம்.

போர்க்காலத்தில் வருடாந்த மீன் உற்பத்தி சராசரி 2 ஆயிரம் மெற்றிக் தொன் வரையிலேயே அமைந்திருந்தது. யுத்தம் முடிவுற்ற பின் 2009 இல் 11 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரித்திருந்தது. 2010 இல் மாத உற்பத்தி சராசரி 1500 முதல்- 1900 மெற்றிக் தொன்னாக அமைந்துள்ளது. இதன் பிரகாரம் வருட உற்பத்தி 20 முதல்- 25 ஆயிரம் தொன் வரையிலேயே அமையலாம். இது போரின் முன்னரான காலப்பகுதியில் இருந்ததை விட 50 சதவீதம் குறைவாகும். போரின் முன்னர் வருடாந்த உற்பத்தி 48 ஆயிரம் மெற்றிக் தொன் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்றைய உற்பத்திப் போக்கு முன்னைய நிலைக்குத் திரும்புவதற்கு எதிராகவே உள்ளன.

கே: முன்னைய உற்பத்தியை அடைவதற்குத் தடையாகவுள்ள காரணிகள் பற்றிக் கூறுவீர்களா?

ப: இதற்குப் பல காரணிகள் உண்டு. ஒன்று பல மீனவக் குடும்பங்கள் இன்றும் தமது சொந்த இடம் திரும்பவில்லை. குறிப்பாக வலி.வடக்கு கரையோரப் பகுதி மீனவர்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களில் வாழ்வதாகக் கூறப்படுகிறது. 2009 ஆம் ஆண்டின் கணிப்பீட்டின் படி 15,594 மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த 17,688 மீனவர்களே - நேரடியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகிறது. போரின் முன்னர் (1983 இல்) - 22, 563 குடும்பங்களைச் சேர்ந்த 24,839 மீனவர்கள் இத்துறையில் ஈடுபட்டிருந்தனர்.

ஏறத்தாழ மூன்று தசாப்தங்கள் ஆகின்றன. வெளியேறிய மீனவர்கள் மீண்டும் தமது இருப்பிடம் திரும்புதல்- வேண்டும்.

இன்னொரு காரணி, உட்கட்டுமாண வசதிகள் மீண்டும் வழமைக்குத் திரும்பவில்லை. படகு உற்பத்தி, ஐஸ் உற்பத்தி, வலை உற்பத்தி மற்றும் பதனிடல் நிலையங்கள் புனருத்தாரணம் செய்யப்படல் அல்லது மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மற்றும் பொருளாதாரக் காரணி, பொதுவாகக் கரையோர மீன்பிடியானது இன்று மிகை வளச் சுரண்டலுக்கு உள்ளாகியிருக்கின்றது. இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல், தடை செய்யப்பட்ட ரோலர் பிடி பிரயோகம், டைனமெட் வெடிவைத்துப் பிடித்தல், சுருக்குவலைப் பயன்பாடு போன்ற நடவடிக்கைகள் காரணமாக வடபகுதி வளம் மிகை வளச் சுரண்டலுக்கு உள்ளாகியிருக்கின்றது. இந்நிலையில் மீண்டும் பழைய உற்பத்தி நிலைக்குத் திரும்புவதென்பது கடினமானதாகவே அமையும்.

கே: கடல்வளத்துறை மீளக்கட்டியெழுப்ப எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதுகின்றீர்கள்?

ப: இதில் முக்கியமானது, உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு அவ்விடங்களில் மீனவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டு சகல வசதிகளும் அவர்களுக்குச் செய்து கொடுப்பது அவசியம்.

* பாதுகாப்புப் படைவசமுள்ள துறைமுகங்கள் மீனவர்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படவேண்டும்.

* உட்கட்டுமாண வசதிகள் துரிதமாக ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். இதைவிட இந்திய இழுவைப் படகுகள் எமது பகுதிக்குள் ஊடுருவுவது முற்றாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

*தடை செய்யப்பட்ட இழுவை மடி, தங்கூசி வலைகள், டைனமெட் வெடி வைத்து பிடித்தல் போன்ற முறைகள் தொடர்ந்தும் பயன்படுத்தாதவாறு கண்காணிப்புச் செய்யப்பட வேண்டும். இதில் அரசியல் தலையீடுகள் தவிர்க்கப்படல் நல்லது.

கே: அண்மையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் தொடர்பாக?

ப: சில தவறான மீன்பிடி முறைகள் அண்மையில் தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிக்கப்பட்டுள்ளமை வரவேற்கக் கூடியதே. எனினும் இவை தொடர்ச்சியாக அத்துமீறிச் செய்யப்படுவது கண்காணிக்கப்படல் அவசியம். கடற்றொழில் திணைக்களம், மீனவர் சங்கங்கள், பாதுகாப்பு படையினரின் கூட்டு முயற்சி இதற்கு அவசியம். ஊழல்களும்- மோசடிகளும் நடைபெறாது கண்காணிப்பதன் மூலமே இது சாத்தியமாவதுடன் வளத்தையும் பேண முடியும். இது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியே. இன்று வளமுகாமைத்துவம் என்பது எமது பகுதியில் கிஞ்சித்தும் கிடையாது என்பது கவனிக்கத்தக்கது.

கே: இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் பற்றி?

ப: இது பற்றிப் பல தடைவைகள் எழுதியாயிற்று. எனினும் ஒரு வித பலனும் இல்லை. இது கொழும்பு- டில்லி/ சென்னை விடயமாக மாறியுள்ளது. வடபகுதி கடல் வளப் பொருளாதாரம் இந்திய மீனவர்களால் தொடர்ந்தும் நிர்மூலமாக்குவது தடுக்கபடாவிடில் எமது கடற்பரப்பு விரைவில் பாலை வனமாவதை எவராலும் தடுக்க முடியாது. இவர்களால் எமது வளம் அழிக் கப்படுவ துடன் உள்ளூர் மீனவர் களின் உடைமை களுக்கு பெரும் சேதம் விளைவிக்கப்பட்டு வருகிறது. மேலும் வாரத்தில் மூன்று தினங்கள் எம்மவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத அவல நிலையும் தொடர்கிறது.

கே: வடக்கில் ஆழ் கடல் மீன்பிடித் துறை பற்றி?

ப: ஆழ்கடல் மீன் பிடி என்பது 60 கி.மீ தொலைவுக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் மேற்கொள்ளப்படுவதாகும். வடபகுதியில் வட மராட்சி வடகிழக்கு, கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகள் மிகவும் வாய்ப்பான பகுதிகளாகும். தீவகம், வலி.வடக்கு, பண்ணைப் பகுதி இதற்குப் பொருத்தமற்றது. எனினும் இதுவரையில் வடபகுதியில் ஆழ்கடல் தூரக்கரை மீன்பிடி என்ற ஒன்றே இருந்ததில்லை. ஆழ்கடல் வளம் இருந்தும் இதனால் ஒரு பயனும் வடபகுதி மீனவர்களுக்குக் கிட்ட வில்லை. எமது ஆழ்கடல் வளம் தொடர்ந்தும் தென்பகுதி மீனவர்களாலேயே அள்ளிச் செல்லப்படுகின்றன. இலங்கையின் மொத்த மீன்உற்பத்தியில் இத்துறை 30- 35 சதவீதம் பெறுகிறது. வடபகுதியின் பங்கு இதில் பூச்சியமே என்பது வருந்தத்தக்கது.

கே: ஆழ்கடல் துறை விருத்திக்கான உபாயங்கள் பற்றி?

ப: இதற்கு முதலில் அரசினுடைய அனுமதி அவசியம். ஆழ்கடலில் மீன்பிடித் தொழில் புரியப் பொருத்தமான படகுகள் அவசியம். 'பன்னாட் கலம்' என அழைக்கப்படும் (Multi day boad) பல தினங்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடிக்கக்கூடிய சகல வசதிகளுடனும் கூடிய படகுகள் அவசியம். பாதுகாப்புடன் குளிரூட்டல், படுக்கை வசதி, தொலைத் தொடர்பு வசதிகள் கொண்டதாக இது இருப்பது அவசியம். தென்பகுதியில் மூவாயிரத்துக்கும் அதிகமாக இத்தகைய படகுகள் பாவனையில் உள்ளன. வடக்கில் ஒரு படகு கூட தமிழ் மீனவர்களிடம் இல்லையென்பது கசப்பான உண்மையாகும்.


இதற்குப் பெருமளவு நிதி தேவை (80 லட்சம் ரூபா) போதியளவு பயிற்சி தேவை ( ஆளணி வளம்). படகுகளை நிறுத்த வசதியான துறைமுகம் தேவை. வடபகுதியில் இப்படகுகளைப் பயன்படுத்த இத்தகைய மேற்சொன்ன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கபட்டாலேயே ஆழகடல் மீன்பிடியை விருத்தி செய்யமுடியும். இப்பகுதியில் இத்துறை இன்றுவரை (போரின் முன்னரும் பின்னரும்) பூச்சிய நிலையில் தான் உள்ளது. முதலீடுகளும் பயிற்சி வசதிகளும், துறைமுக வசதிகளும் இத்துறையின் விருத்திக்கு அவசியம்.

கே: இறுதியாக எமது கடல்வளத் துறை பற்றி?

ப: வடபகுதி மட்டுமல்ல கிழக்குப் பகுதியும் மிகச் சிறந்த கடல்வளம் மிக்க பகுதியாகவே இருந்து வருகின்றது. இப்பிரதேசத்தின் மிக முக்கிய பொருளாதார நடவடிக்கைகளில் இது முக்கியம் பெறுகின்றது. எனினும் இதன் முழுமையான பயனை இப்பகுதி மக்கள் பெறாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமே. இந்திய மீனவர்கள் ஒரு புறம், தென்பகுதி மீனவர்கள் மறு புறம், வளங்களைச் சுரண்டுதல், ஆழ்கடல் மீன்பிடிக்கான வாய்ப்பின்மை போன்ற காரணிகள் இத்துறையினர் எதிர்நோக்குகின்ற முக்கிய சவாலாகவுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக சொந்தக் கடற்பரப்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை இப்பகுதி மீனவர்களிடம் இல்லாத வரையில் இத் துறையினை மீளக்கட்டியெழுப்புதல் என்பது சாத்தியமில்லை.

நேர்காணல்- சசி

Oceanographic Background in the Northern Part of Sri Lanka




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் யாழ் நகரில் | NOV 08ம் திகதி

இலங்கை முழுவதும் பல நூற்றுக் கணக்கான Phone திருத்துனர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியரின்

**Diploma in Mobile Phone Repairing**



**Hardware**

- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting ஒழுங்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கழற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc.
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner. உபயோகம்
- விசே. Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகாணல் (Jumper System)

**Free!** Study Packs (Faults Solutions) Schematics Diagram Cd's Applications Software codes Special Web Site

**Rs.8750/=**

**Software** Setup Installation, Unlocking, Flashing

Jaf. P-Key. SE tool, NSpro. Infinity. Pin Finder. Spiderman. MX-Key.

**4 DAYS COURSE**

MON 8 NOV | TUE 9 NOV | WED 10 NOV | THU 11 NOV

10.00 AM - 3.00 PM

வகுப்பு நடைபெறும் இடம்

No: 102-2/2, Navalar Road, (Luxman Plaza Building) Jaffna.

Tel : 021 7538395

உங்கள் பதிவுகளுக்கு 0714241873


## ஓட்டோ விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், நவ.7

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் ஓட்டோ மின்கம் பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். வேகமாக வந்த ஓட்டோ பாதையை விட்டு விலகிஎதிரே இருந்த மின்கம்பத்துடன் மோதியது.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் யாழ்ப்பாணம், திருநகர் இராசலிங்கம் வீதியைச்சேர்ந்த இ.செல்லக்குமார் (வயது 32) என்ற இளைஞர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-319)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




பிரசாத்-சோபிகா தம்பதியரின் செல்வப் புதல்வன் **சந்தோஷ்** தனது முதலாவது பிறந்த தினத்தை ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருட்கடாட்சம் பெற்றுப் பலகலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா,
அத்தை, சித்தப்பாமார்:
தினேஸ் (டோகா),
நிஷாந், சசிகாந், பூட்டி
நாகம்மா.

மதவடி லேன், சுதுமலை.



AMCO

## அறிமுகமாகிறது... அம்கோ வெயிட் கெயின்

எடையைக் கூட்டுவதற்கு இலகுவான வழி!



அம்கோ வெயிட் கெயின் என்பது உங்கள் உடல் இழையங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை உள்ளடக்கியதாக மோல்ட் சாற்றிலிருந்து விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட புரதச்சத்து நிறைந்த பாலாகும். அது லைசின் பதார்த்தம் கொண்டு செறிவூட்டப்பட்டுள்ளதால், உடலின் எடையை அதிகரிக்கும் ஆற்றலை அல்லது புரத உள்வாங்கலை (புரத வினைத்திறன் விகிதம்) முன்னேற்ற உதவும். சமபோஷாக்கான உணவுடன் அம்கோ வெயிட் கெயின் எடுத்தால் உங்கள் எடையை அதிகரிக்கலாம்.

**சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் 450கி. டின்களில் கிடைக்கின்றது.**

சிபாரிசு செய்யப்பட்ட அம்கோ வெயிட் கெயின் அளவு ஒவ்வொரு உணவு வேளைக்கும் 1 மணிநேரம் கழித்து ஒரு கிளாஸ் சூடாக அல்லது குளிரூட்டிப் பருகவும். (நாள் ஒன்றிற்கு குறைந்தது 3 கிளாஸ்கள்)

இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளவை தகவலுக்காக மட்டுமே. எப்போதும் உங்கள் வைத்தியரின் ஆலோசனையை நாடவும்.

**எடுப்பான தோற்றம். நலமான வாழ்வு.**

அம்கோ வெயிட் கெயின் மூலம் உங்கள் எடையைக் கூட்டுங்கள்

AMCO weight GAIN




நாடெங்கும் முன்னணி பார்மஸிகளிலும் சுப்பர் மார்க்கட்களிலும் வாங்கலாம்

Gracewinds Advertising

அறிமுக விலை ... 980/= வளர்ந்தோர் ரூ. 1,200/=

ஏக விநியோகஸ்தர்:
**சூரி ட்ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்**
இல. 6, பங்களாவத்தை வீதி, மாபோல, வத்தளை, இலங்கை.
தொலைபேசி: +94 11 4810251 ஈ-மெயில்: info@suritrading.com
வெப்தளம்: www.suritrading.com



## தேவை

சுன்னாகம், நீர்வேலி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசங்களில் 3000 கண்டு தோட்டக் காணியும், வீடும் தனித்தோ அல்லது சேர்ந்தோ வருடக் குத்தகைக்குத் தேவை.
தொடர்பு:- 0772718292, 0759718292

**தேவை** எமது நிறுவனத்திற்கு ஆண் சுத்திகரிப்பாளர் (Cleaning Boy) உடனடியாகத் தேவை. வயதெல்லை 20-30 யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசித்தல் வேண்டும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. கிராம சேவையாளரின் நற்சான்றிதழுடன் நாளை (08.11.2010) திங்கட்கிழமை மு.ப. 11 மணி - பி.ப. 2 மணிக்குள் அலுவலகத்திற்கு நேரில் சமுகமளிக்கவும். இல.187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சத்திரச்சந்தியிலிருந்து 50 M தொலைவில்) (105658)

## வாகனம் விற்பனைக்கு

Scorpio 2003 புதிய இறக்குமதி செய்யப்பட்ட HCXXXX 4X4 Full Option, Leather interior, DVD Player,1030 km ஓடியது-முதலாவது சொந்தக்காரர் Fully AGENT MAINTAIN with Service history, நல்ல நிலையில் உள்ளது கவனமாகப் பாவித்த வாகனம். விலை -2,700,000 ரூபாய். விலை பேசித் தீர்மானிக்கலாம். உடன் விற்பனைக்கு.
தொடர்பு:- 0727506418



*Opening Newly on 20th Jan 2011*

Trilliam MONTESSORI
Our Children Bloom

## AMI Montessori House of Children

### Give your child the ideal foundation in life!!!

Trilliam Montessori is now enrolling children of age 2 1/2– 5 years at Montessori level.

- AMI method is followed
- Well equipped with full range of AMI Montessori materials
- Spacious play area & children library
- Beautiful classroom specially designed for children

**Medium: English**

**Conducted by Experienced AMI Dip. Holder**
**Mrs. P. Pirathajine – AMI (Dip.), BSc (Teaching Tech)**

அனுமதிகள் மற்றும் மேலதிக தொடர்புகளுக்கு: 0776078580
இல.45, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



MINISTRY OF IRRIGATION AND WATER RESOURCES MANAGEMENT

## CENTRAL ENGINEERING CONSULTANCY BUREAU VACANCIES

## TECHNICAL STAFF FOR HIGHWAY PROJECTS

Nature of employment : Contract Basis, renewable annually up to three years

An attractive remuneration package based on qualifications and experience will be offered to the selected candidates.

| | | |
|---|---|---|
| A. Resident Engineers | - | B.Sc.(Eng.) or equivalent with Full membership of a Professional Institute with minimum of 15 years experience of which at least 5 years in Contract Administration. |
| B. Planning Engineers | - | B.Sc.(Eng.) or equivalent with Full membership of a Professional Institute with minimum of 10 years experience of which 5 years Project Planning with a thorough knowledge in MS Project. |
| C. Material Engineers | - | B.Sc.(Eng.) or equivalent with Full membership of a Professional Institute with minimum of 10 years of which 5 years as Materials Engineer. |
| D. Site Engineers | - | Civil Engineer with B.SC (Eng.) or equivalent with 5 years experience of which 2 years in Road works. |
| E. Laboratory Technician | - | B.Sc.(Eng.) with 3 years experience in quality control of highway construction material and structures. |
| F. Technical Officers | - | NDT (Civil Eng.) with 5 years experience of which 2 years in Road works. |
| G. Quantity Surveyors | - | B.Sc.(Quantity Surveying) with a minimum of 5 years experience. |
| H. Surveyor | - | B.Sc.(Surveying Sciences) with a minimum of 5 years experience. |
| I. Work Supervisor | - | NCT(Civil Eng.) or equivalent with 5 years experience of which 2 years in Road works. |

Please forward detailed CV within 3 days of this advertisement to the following address, stating the post applied for on the top left corner of the enveloe. Interviews will be held in Jaffna & Vavuniya.

General Manager,
Central Engineering Consultancy Bureau,
415, Bauddhaloka Mawatha,
Colombo 7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளைத் தோற்கடிக்க உதவிய இந்திய அரசினால் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு உதவ முடியாமல் உள்ளது ஏன்?

# தமிழர்களின் தீர்வில் மட்டும் ஏன் இந்த மோதல் போக்கு?

மற்றெல்லா விடயங்களிலும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்பட்டு வரும் அவர்கள் ஒரேயொரு விடயத்தில் மட்டும் ஒத்துப்போகாமல் வெவ்வேறு திசைகளில் திரும்பி நிற்பதுதான் ஏன் என்று தெரியவில்லை. இந்த இரு தரப்பும் அந்த ஒரு விடயத்தில் ஒற்றுமையாகச் செயற்படாமல் இழுத்தடித்து வருவது தத்தமது சுயலாபங்களைக் கருத்திற் கொண்டே என்று சிந்திக்கும் நிலைமை இப்போது வந்திருக்கிறது.

நாம் இங்கே சொல்ல வருவது வேறொன்றும் அல்ல. இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினை விடயத்தில் இலங்கை அரசும் இந்திய அரசும் கொண்டுள்ள போக்கைத்தான். இப்போது எல்லா விடயங்களிலும் இந்த இரு தரப்பும் மிகவும் அன்னியோன்னியமாகச் செயற்பட்டு வருகின்றன. ஆனால் தமிழர்களின் தீர்வு தொடர்பாக அவர்கள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். அதன் காரணம்தான் என்ன?

இலங்கைத் தீவில் கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்த போர் முடிவுக்கு வந்துவிட்டது. தமிழர்களுக்கான உரிமையை வேண்டி ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் துயரமான நிலையில் முடிந்துவிட்டது. ஆயினும் தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்ந்த பாடாக இல்லை. தீர்வின்றித் தொடரும் அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தீர்வுபற்றிய பேச்சுக்கள் - அழுத்தங்கள் எழுந்தபோதெல்லாம் புலிகள் தோற்கடிக்கப்படவேண்டும். அதன் பின்னரே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று சொல்லி இலங்கை அரசும் அதனை தட்டிக்கழித்துத் தள்ளிவைத்து வந்தது. இலங்கை அரசு நினைத்தபடியே புலிகளும் போரில் தோற்கடிக்கப்பட்டார்கள். உரிமைக்கான ஆயுதப் போராட்டம் தோல்வியில் முடிந்தது. அது நடந்து ஓராண்டு கடந்துவிட்டது. ஆயினும் இலங்கை அரசு சொன்னபடி எதுவும் நடக்கவில்லை. போர் நடந்த போது எவ்வாறு சாட்டுப்போக்குகள் சொல்லி அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வை தள்ளிவைத்து வந்ததோ அதே நிலைமை இப்போதும் தொடர்கிறது. அதற்கு ஏற்றாற் போல் இப்போதும் சில சாட்டுப்போக்குகள். இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்ட இலங்கை அரசுக்கு அறவே மனமில்லை. அதற்காக அது பல்வேறு உத்திகளைக் கையாள்கிறது. சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு நடந்துகொண்டு இனப்பிரச்சினைத் தீர்வை பின்தள்ளிக் கொண்டே செல்கிறது.

அண்டை நாடான இந்தியாவும் இந்த விடயத்தில் இலங்கை அரசைப் போலவே உள்ளது. தமிழர் தரப்புக்கு ஒன்றும், இலங்கை அரச தரப்புக்கு ஒன்றுமாக இரண்டு முக மூடிகளை அணிந்துகொண்டு இந்திய அரசு செயற்பட்டு வருகின்றமை இப்போது பல விடயங்களில் அப்பட்டமாகி வருகின்றது.

விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்டுவதில் இலங்கை அரசுக்கு இந்தியா மிகப்பெரும் பங்களிப்பை ஆயுத - ஆட்பல ரீதியில் வழங்கியதாக ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆயினும் அந்தக் குற்றச்சாட்டுக்களை இந்திய அரசும் இதுவரை உத்தியோகபூர்வமாக மறுக்கவில்லை. தமிழக அரசியல் வாதிகள் கூட இந்தக் குற்றச்சாட்டுக்களை இந்திய மத்திய அரசின் மீது தொடர்ந்து சுமத்தி வருகிறார்கள். புலிகளைத் தோற்கடிக்க இலங்கை அரசுக்கு உதவிய இந்தியாவால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் ஏன் உதவ முடியவில்லை எனப் பகிரங்கமாக அவர்கள் கேள்வியெழுப்பியும் வருகிறார்கள். இந்திய நாடாளுமன்றில் இப்போது அடிக்கடி இந்த விடயம் சூடுபிடிக்கிறது. புலிகளுக்கு எதிரான போரின்போது இலங்கை வான்படைக்கான ராடர்கள் இந்தியாவால் வழங்கப்பட்டன. இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சியளிக்கப்பட்டது. ஆயுத உதவிகளும் பெருமளவில் வழங்கப்பட்டதாகத் தகவல். இலங்கைக்கு கொண்டு செல்வதற்காக யுத்த டாங்கிகள் ரயிலில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்ட வேளை ரயில் பாதையை முற்றுகையிட்டு கோயம்புத்தூரில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றது. இவ்வாறு யுத்தத்துக்கு இந்தியா உதவியமை நிரூபணமானது.

இப்போது நாட்டில் யுத்தம் இல்லை. பல விடயங்களில் இந்தியாவும் இலங்கையும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றன. யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதில் இந்தியாவும் உதவுகிறது. வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு 50,000 வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் இந்தியா முன்வந்திருக்கிறது. மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு இந்திய அரசின் கூரைத்தகடுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு மீளக்குடியமர்வு விடயத்திலும் இந்தியா தனது கணிசமான பங்களிப்பை வழங்கிவருகிறது.

யுத்தம் முடிந்த பின்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படும் என்று கூறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அது முடிந்ததும் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்பே அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்றார். அதன் படியே மீளக்குடியமர்வும் கிட்டத்தட்ட நெருங்கும் தறுவாயில் உள்ளது. ஆனால் தீர்வு தொடர்பாக ஒரு ஆரம்பகட்ட ஏற்பாடுகள் கூட இதுவரை நடைபெறவில்லை.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் மட்டும் இந்திய அரசு இழுத்தடிப்புடன் நடந்து கொள்கின்றமை குறித்து இப்போது பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. இலங்கையும் இந்தியாவும் தமிழர்கள் விடயத்தை

**முன்னர் மறுத்த போதும் இந்தியாவின் கடும் அழுத்தம் காரணமாக அம்பாந்தோட்டையில் துணைத்தூதரகத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டது.**

தமது நலனுக்காகவே பயன்படுத்துகின்றன என்பது நிரூபணமாகி வருகின்றது.

இலங்கையில் மேலோங்கிவரும் சீன ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இந்தியா இப்போது இறங்கியிருக்கிறது. இலங்கையில் சீன அரசின் உதவியுடன் பல அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ரயில் பாதை அமைப்பு, அம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானம், இலங்கையின் பல பாகங்களிலும் பாலங்களின் புனரமைப்பு, வீதி அபிவிருத்தி எனப் பல திட்டங்கள் சீன அரசின் உதவியுடன் நடைபெறுகின்றன. இந்த திட்டங்களில் நேரடியாகச் சீனத் தொழிலாளர்களே ஈடுபட்டு வருகின்றனர். இது இந்தியாவுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கிறது. இதனை அடுத்து இலங்கையில் தனது வர்த்தக முதலீடுகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றை மென்மேலும் அதிகரிப்பதற்கு இந்தியா ஏற்கனவே திட்டமிட்டுவிட்டது. சீனாவை ஓரங்கட்ட இந்தியா மேற்கொள்ளும் திட்டங்கள் இவை.

இதன் ஒரு அங்கமே அம்பாந்தோட்டை



யில் திறக்கப்படவுள்ள இந்தியத் துணைத்தூதரகம். ஏற்கனவே அம்பாந்தோட்டைத் துறைமுகக் கட்டுமானம் என்ற பெயரில் சீனா அங்கு காலூன்றிவிட்டது. இதனை அடுத்து இந்தியா துணைத்தூதரகம் என்ற பெயரில் அங்கு தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கிறது. அம்பாந்தோட்டையில் துணைத்தூதரகத்தை அமைக்கும் இந்திய அரசின் முடிவுக்கு இலங்கை அரசு முன்னர் அடியோடு மறுப்புத் தெரிவித்திருந்தது. அம்பாந்தோட்டையில் துணைத்தூதரகம் அமைப்பது ஏன்? என்றும் இலங்கை கேள்வியெழுப்பியிருந்தது. எனினும் இந்தியாவின் கடும் அழுத்தம் காரணமாக அம்பாந்தோட்டையில் துணைத்தூதரகத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி இந்தியாவில் இடம்பெற்ற கொமன் வெல்த் விளையாட்டு விழாவுக்கு சிறப்பு விருந்தினராகச் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசியிருந்தார். இந்தச் சந்திப்பின் பின்னர் இரு தலைவர்களும் இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் நெருக்கமுறச் செய்வதற்கு இணக்கம் கண்டனர். ஆயினும் இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக எதுவும் பேசப் படவில்லை. வெறுமனே மீள்குடியமர்வு, அபிவிருத்தி விடயங்கள் மட்டுமே பேசப்பட்டன.

அம்பாந்தோட்டையில் துணைத்தூதரகத்தை அமைப்பதற்கு இலங்கை அரசுக்கு கடும் அழுத்தத்தை பிரயோகிக்க முடிந்த இந்தியாவால் தமிழர்களின் இனப்பிரச்சினை விடயத்தில் அழுத்தம் கொடுக்க முடியாமல் உள்ளமை ஏன் என்ற கேள்வியே இப்போது அனைத்து மட்டங்களிலும் எழுகின்றது. உண்மையில் இந்த விடயம் இந்தியாவால் முடியாததொன்றல்ல. இந்தியா நினைத்தால் இதனை நிச்சயம் செய்ய முடியும். ஆனால் இதில் இந்தியாவும் இலங்கையும் ஒரு மறைமுகத் திட்டத்துடனேயே செயற்படுகின்றன என்பதே உண்மை. 'நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறன் நீ அழுகிற மாதிரி அழு' என்ற திட்டத்துடனேயே அவை செயற்பட்டு வருகின்றன.

இந்தியத் தலைமை இலங்கை அரச பிரதிநிதிகளை சந்திக்கின்ற போது ஒன்றையும், தமிழர் பிரதிநிதிகளைச் சந்திக்கின்ற போது ஒன்றையும் கூறி இந்த பிரச்சினையை மேலும் இழுத்தடித்தே வருகின்றது. இந்தியாவுக்கு ஜனாதிபதி மஹிந்தவுடன் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஜனாதிபதி நாடு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிப் ,பேசுவார் என்று அங்கு ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். ஆனால் ஜனாதிபதி நாடு திரும்பியதும் அப்படி எதுவும் நடைபெறவில்லை.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இலங்கை அரசு இப்போது புதியதொரு சாட்டுப்போக்கைக் கூறியிருக்கிறது. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு உடன்பாட்டுக்கு வந்த பின்னரே இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேச முடியும் என அரசு அறிவித்திருக்கிறது. தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் கூட்டமைப்பும் இணைந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதையே அரசு மறைமுகமாகச் சுட்டியிருக்கிறது.

**அதிரன்**

இது இவ்வாறு இருக்க கடந்த 2 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையேயான சந்திப்பு ஒன்று தூதரகத்தில் இடம்பெற்றது. இதன்போது இலங்கை அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்க்கமான தீர்வைக் காண வேண்டும் என்பதே இந்திய அரசின் நிலைப்பாடாகும் என்று இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா கூட்டமைப்பினரிடம் கூறியிருக்கிறார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் இணைந்து செயற்படுவது குறித்து தூதுவர் அந்தச் சந்திப்பின் போது எதுவும் கூறவில்லை.

இவ்வாறு இந்தியா இரண்டு முகமூடிகளை மாற்றிமாற்றிப் பயன்படுத்திச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு செயற்பட்டு வருகிறது. இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் ஒரு தெளிவான பார்வையோ - அக்கறையோ இந்தியாவிடம் இல்லை. மாறாக இந்த விடயத்தில் ஏனோதானோ என்ற நிலை யிலேயே அது உள்ளது. அனைத்து விடயங்களிலும் இலங்கையுடன் கைகோர்த்து ஒன்றித்துச் செயற்படும் இந்தியாவுக்கு இனப்பிரச்சினை விடயத்தில் இலங்கையை ஒரு நிலைக்குக் கொண்டு வருவது கடினமான விடயம் அல்ல. ஆயினும் இந்தியா அதனை விரும்பவில்லை என்பதே உண்மை. தனது நலனுக்காக அது தமிழர்களின் தீர்வு விடயத்தில் பாரபட்சமாக - அக்கறையீனமாக - திட்ட மிட்டு செயற்படுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

தமிழர்களுக்கு இந்தியா மீது ஏற்பட்டுள்ள சந்தேக நிலைமையை தீர்த்துக் கொள்ள - தெளிவுபடுத்த அது எதிர் காலத்தில் என்ன செய்யப் போகிறது என்பதே கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## 07.11.2010 முதல் 13.11.2010 வரை

தருபவர் - வித்யா

### மேடம்



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள், சிரமங்களை எதிர்கொள்ளலாம். மற்றவர்களுக்காகச் செலவு செய்யலாம். தொழில் ரீதியான விடயங்களிலோ, குடும்ப ரீதியான விடயங்களிலோ முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். கடந்த காலத்தில் சங்கடங்களைக் கொடுத்த விவகாரங்கள் எல்லாம், இப்போது சுமூகமாக முடிவுக்கு வரும். அவசியமான, அத்தியாவசியமான கடமைகளை எல்லாம் சிரமம் இல்லாமல் நிறைவேற்றிக் கொள்வீர்கள். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். கடன்களால் உருவான கவலை தீரும். பெண்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். தந்தையுடன் கருத்து மோதல்கள் உருவாகலாம். அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் திடீர் ஆதாயம் பெறலாம். அதேநேரத்தில் எதிர்பாராத திடீர் செலவுகளும் உருவாகலாம். பணவரவுகளைப் பெறலாம். நண்பர்கள் வழியில் உதவி கிடைக்கும்.

### இடபம்



ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். ஆதாயம் தரும் சில காரியங்களைச் செய்வீர்கள். எதிலும் நல்ல முடிவெடுப்பீர்கள். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். நடக்காத சில வேலைகளை நினைத்து வருத்தம் அடைவீர்கள். ஒவ்வாத உணவு வகைகளை சாப்பிடுவதால், உடல் உபாதைகளை சந்திக்கலாம். மற்றவர்கள் வேலைகளையும் நீங்கள் சேர்த்துச் செய்யலாம். தண்டச் செலவு நேரும். மறதி, கவனக்குறைவு, தடுமாற்றம், வீண் அலைக்கழிப்பு, தேவையற்ற குழப்பங்கள் போன்றவற்றைச் சந்திக்கலாம். எதிர்பார்த்தபடி காரியங்கள் நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடைபெறுவதாலும் எரிச்சல் அடையலாம். எதிலும் அவசரப்பட்டு முடிவெடுத்து விட்டு பின்னர் வருத்தம் அடைவீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமான முடிவுக்கு வரும். அரசியல்வாதிகள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகி பாசம் அதிகரிக்கும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வீட்டு உபயோகப் பொருள்கள், வாகனங்கள் பழுதாகி திடீர் செலவை உண்டாக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் சிரமம் நேரலாம். வாகனங்களில் செல்லும் போது கவனம் அவசியம். தண்டச் செலவுகள் நேரும். திடீர் பயணம் செல்லலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### மிதுனம்



குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுப்பீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். அதிக அலைச்சல், செலவு இல்லாமல் சுலபமாகச் சில வேலைகளை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும். உடல் ஆரோக்கியத்திலும் அவ்வப்போது குறைபாடுகள் உருவாகலாம். தொழில் புரிவோர் நிர்வாக ரீதியாகப் பல பிரச்சினைகளைச் சந்திக்கலாம். வேலையாள்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். மற்றவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் பல வேலைகளை நீங்களே செய்ய நேரிடலாம். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். மருத்துவச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. தாய் வழி உறவுகளுடன் கருத்து வேறுபாடுகள், மனஸ்தாபம் உருவாகலாம். போட்டி, எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். கடன் பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறலாம். தண்டச் செலவுகள் நேரும். உறவினர்களுக்காக அலைய நேரிடலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

### கடகம்



எதிர்பாராத ஆதாயங்களைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் பிரச்சினைகள் உருவாகலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட சில வேலைகளை செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கொடுத்த வாக்கை காப்பாற்ற கடும் பிரயத்தனம் மேற்கொள்வீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர். உங்களை விமர்சித்தவர்கள் எல்லாம் பாராட்டும் சூழ் நிலை உருவாகலாம். சொந்தபந்தங்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகும். எந்த விடயத்திலும் தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பயணங்கள் அதிகரிக்கும். பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவது போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பெண்கள் கணவர் மூலம் விரும்பியதை சாதித்துக் கொள்வர். பிள்ளைகளின் செயல்பாடு பெருமை தரும் வகையில் அமையும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லி வழிநடத்துவீர்கள். கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்தில் நடக்கும். பணவரவு உண்டு. அலைச்சல், திரிச்சல் உண்டு.

### சிங்கம்



ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். திடீர் செலவுகளால் பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம். விருந்தினர்கள் வருகையாலும் உங்களின் வேலைகளில் மாற்றங்களைச் சந்திக்கலாம். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறக்கலாம். வரவுக்கு ஏற்ற வகையில் செலவுகளை ஈடுகட்டுவது பெரும் சிரமமாகவே இருக்கும். எதிர்பார்த்த பணம் வராமல் தேங்கியிருக்கலாம். அல்லது முதலீடாக போட்ட பணத்தை எடுக்க முடியாமல் தவிக்கலாம். கொடுக்கல் வாங்கல்களிலும் நாணயத்தை காப்பாற்றுவது பெரும் சிரமமே. எதிலும் தன்னம்பிக்கை, துணிச்சலுடன் செயற்படுவீர்கள். எது சரி என உங்களின் மனதிற்கு படுகிறதோ அதைச் செய்ய முற்படுவீர்கள். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். அரசாங்க ரீதியாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கடனுதவி பெறவும் வாய்ப்பு உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். தொழில் ரீதியாக பரபரப்பாக செயற்படலாம். குடும்பச் செலவு கூடும். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். பணவரவு உண்டு.

### கன்னி



ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைத்து பெருமை அடைவீர்கள். மதிப்பு மேம்படும். விருந்து, விசேஷங்களால் கலகலப்பு உண்டு. சிறிய வேலைகளுக்கு கூட பலமுறை அலையலாம். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியாக மற்றவர்களின் விமர்சனங்களை அல்லது பாராட்டுக்களைச் சந்திக்கலாம். புதியவர்களின் சந்திப்பு நிகழும். அலுவல் நெருக்கடிகள் தொடர்ந்து கொண்டிருக்கும். ஓய்வில்லாது பணியாற்றினாலும், அதற்கேற்ற பலன் கிடைப்பது கடினம். அலைக்கழிப்புகள், தடை தாமதங்கள் தொடரும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் வரும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் முன்னேற்றம் உண்டு. தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடுக்கி விடுவீர்கள். நோய் உபாதைகள் இல்லாமல் ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள், தகப்பனார் தொடர்பான வகையில் சிரமங்கள், செலவுகள் தொடரும். வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளாமல் இருக்க சர்ச்சைக்குரிய விடயங்களில் தலையிட வேண்டாம். குடும்பத் தேவைகளை குறைவின்றி நிறைவேற்றுவீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும். திட்டமிட்ட காரியங்கள் நடக்கும். செலவு கூடும்.

### துலாம்



குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். ஏதோ ஒரு வகையில் பணவரவுகளைப் பெறலாம். தம்பதியர் இடையே பாசம் அதிகரிக்கும். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். ஆதாயகரமான பொருள் வரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மனதில் நிம்மதி குடிகொள்ளும். வரவுகளை மீறிய செலவுகள் தொடர்ந்து கொண்டிருக்கும். எந்த விடயத்திலும் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். தொழில் ரீதியான முதலீடுகளில் எச்சரிக்கை அவசியம். மற்றவர்கள் பேச்சை நம்பி எதிலும் இறங்காமல், நீங்களே ஒன்றுக்கு பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விடயங்களிலும் எச்சரிக்கை அவசியம். அடிக்கடி, எரிச்சல் கோபத்தை உண்டாக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளாலும் அவதிப்படலாம். அரசியல், அரசாங்கம், மருத்துவம் தொடர்பான வகையில் அலைச்சல், தண்டச் செலவு நேரும். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். செலவு, அலைச்சல் உண்டு. தர்ம காரியம் செய்வீர்கள். ஆறுதலான அனுபவங்களை எதிர்கொள்ளலாம்.

### விருச்சிகம்



அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். சில காரியங்கள் நினைத்தது போல நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் முடிவுக்கு வரும். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். தம்பதியர் இடையே பாசம் கூடும். எந்த விடயத்திலும் புத்திசாலித்தனமாக செயற்பட்டு மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். தொழிலில் வளர்ச்சி காணப்படும். கடந்த காலத்தில் ஆசைப்பட்டும் கிடைக்காதவை எல்லாம் இப்போது எளிதாக கிடைக்கும். இழுபறியாக இருந்த வழக்கு விவகாரங்கள் முடிவுக்கு வரும். உறவினர்களின் சகாயம் கிட்டும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், மருத் துவ சிகிச்சை மேற்கொள்ளுதல், தந்தையின் கடமையை நிறைவேற்றுதல், சகோதரிகள் வீட்டு சுபகாரியங்களுக்கு செய்ய வேண்டிய உபகாரங்களைச் செய்தல் போன்ற வழிகளிலும், அரசியல் வாதிகள் சந்திப்பாலும், தந்திரமாக சில வேலைகளை முடிக்கவும் கணிசமான பணத்தை செலவிட லாம். யாரிடமும் கோபம் வேகத்தை காட்டாமல் பொறுமையாக செயல்பட வேண்டும். கடன் பிரச்சி னைகளை சமாளிப்பீர்கள். மாமன், மைத்துனர்களால் சிரமங்கள், அன்புத் தொல்லை உண்டாகலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். விருந்து, விசேஷ நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். செலவு, அலைச்சல் உண்டு.

### தனுசு



எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்படவேண்டும். குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதங்கள், மனஸ்தாபம் ஏற்படலாம். தண்டச் செலவுகள் நேரும். குழப்பங்கள், தடுமாற்றங்கள் உருவாகலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். வழக்கமான பணிகளை உற்சாகத்தோடு செய்ய முடியாத வகையில் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். அடிக்கடி சலிப்பு, வெறுப்பு ஆள்கொள்ளும். உடன் பணிபுரிவோரின் ஏட்டிக்குப் போட்டியான செயல்பாடுகளாலும் எரிச்சல் அடையலாம். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் குறை, விமர்சனங்களுக்கு அடிக்கடி ஆள்படலாம். விரும்பத்தகாத இடமாற்றங்களாலும் சங்கடங்கள் நேரும். கடன் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். உறவுப் பெண்கள் சிலரின் சந்திப்பு நிகழும். கேளிக்கை, கொண்டாட்டங்களால் சந்தோஷம் அடைவீர்கள். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்கலாம். மாமன், மைத்துனர்கள், சகோதரர்கள், நண்பர்கள் வழியில் செலவுகள் உண்டு. அவர்களுக்காக அலையலாம். காரிய வெற்றி உண்டு. நல்ல செய்தி கேட்கலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### மகரம்



ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லலாம். விருப்பமானதை சாப்பிடுவீர்கள். திட்டமிட்ட காரியங்களைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். தந்தை வழியில் எதிர்பாராத உதவி கிடைக்கும். பெண்கள், பயணங்கள், கேளிக்கை, கொண்டாட்டங்கள் போன்றவற்றால் செலவுகள் நேரும். பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். மாற்று மொழி பேசுவோர், மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்கள், பங்காளிகள் வகையில் அனுகூலம், ஆதாயம் பெறலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம், புதிய வீடு வாங்கும் முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். பக்தி நாட்டம் கூடும். காரிய வெற்றி, பணவரவு உண்டு.

### கும்பம்



உறவினர்களுக்காக சில உதவிகளைச் செய்வீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள்களாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். அலைச்சல், சிரமங்கள் இருந்தாலும் திட்டமிட்ட வேலைகளை சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தொழில் ரீதியான விடயங்களிலும், கடன் பிரச்சினைகளிலும் அவ்வப்போது கலக்கம் அடையலாம். வருமானத்தில் ஒரு பகுதியை மற்றவர்களுக்கு கொடுக்கும் சூழ்நிலை இருக்கலாம் என்பதால், மன அமைதி பாதிக்கப்படும். வழக்கு விவகாரங்கள் எதிர்பார்த்தபடி முடியாமல் இழுத்தடிக்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். ஓய்வாக இருக்காமல் பரபரப்பாக செயற்பட நேரிடலாம். சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். அவர்களின் நன்மைக்காக உதவி செய்யலாம். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். பொறுமை, நிதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டும். உடல் உபாதைகளுக்கு ஆளாகலாம்.

### மீனம்



உடல் ரீதியான உபாதைகளால் அவதிப்படலாம். சிலருடன் சேர்ந்து வெளியூருக்கோ, வெளியிடங்களுக்கோ செல்லும் வாய்ப்பு உருவாகும். தண்டச் செலவுகள் நேரும். அலைச்சல், திரிச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். கணவன் மனைவிக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்படலாம். விரும்பாத இடமாற்றங்கள், வீடு மாற்றங்களாலும் அவதிப்படலாம். தொழிலுக்காக கடன் வாங்கியோர் அதைத் திருப்பிச் செலுத்த முடியாமல், சிரமப்படலாம். நண்பர்கள், புதிதாக பழகிய நண்பர்களின் பேச்சை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். கேளிக்கை, கொண்டாட்ட விடயங்களில் நாட்டம் செல்லும். எதிர்ப்புகள், போட்டிகள் குறையும். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். சொத்து வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீண்ட தூர பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்வீர்கள். பிள்ளைகளின் சுபகாரிய விடயங் களில் முன்னேற்றம் உண்டு. மாற்று மதத்தினரால் அனுகூலம் இல்லை. ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிட்டும். பொறுமை, நிதானம் அவசியம். தடை, தாமதங்கள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுனிப்புல் மேய்தல்

## நேர ஒதுக்கீட்டில் காட்டப்படும் கஞ்சத்தனம்



குட்டித்தூக்கம்: மக்கள் மீது இலங்கை அரசு பொஸ்பரஸ் குண்டுகளை வீசியதை பொதுமகன் ஒருவர் சாட்சியமாகக் கூறுகையில் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர்.டி.சில்வா

பி.ப. 1.30 மணி.

*கண்களில் துயரோடு மனது முழுதும் வலியை ஏந்திக் கொண்டு ஒரு நடுத்தர வயது மனிதர் வந்த மர்கிறார். மெல்ல தன்னுடைய இழந்துபோன குரலின் தொனியை வரவழைத்துக்கொண்டு தன்னை அறிமுகம் செய்கிறார். அவர் தமிழில் கூறியவற்றை இன்னொருவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்கிறார். அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை அவருக்கு முன்னால் கதிரைகளில் அமர்ந்திருந்தவர்கள் ஆங்கிலத்தில் வினாவுகிறார்கள். அதனை தமிழில் மொழிபெயர்ப்பாளர் சொல்கிறார்.*

பி.ப. 1.31மணி.

*''ஐயா ! நாங்கள் படாதபாடெல்லாம் பட்டு யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறம். சண்டையில ரெண்டு பகுதியாலும் நாங்கள் பாதிக்கப்பட்டுட்டம். அதையெல்லாம் இஞ்ச சொல்லவேணும்'' வந்தவர் தமிழில் சொன்னதை தயாராக இருந்த மொழிபெயர்ப்பாளர் உரியவர்களுக்கு ஆங்கிலத்தில் ஒப்புவிக்கிறார். குறித்த நபர் சொல்ல வந்ததை சொல்லலாம் என்று ஆங்கிலத்தில் கதிரையில் இருந்தவர்கள் கூறியதை மொழிபெயர்ப்பாளர் தமிழுக்கு மாற்றுகிறார்.*

பி.ப. 1.32 மணி.

*வந்தவர் கண்களில் வழியும் நீரைத் துடைத்துக் கொண்டு தயாராக வைத்திருந்த புகைப்படம் ஒன்றை நீட்டுகிறார். மொழிபெயர்ப்பாளர் அதனை வாங்கி அதிகாரிகளிடம் கொடுக்கிறார். எல்லோருடைய கைகளுக்கும் ஒருவர் பின் ஒருவராக அது தவழ்கிறது. '' இது யாருடைய படம்? இதனை ஏன் இங்கு தந்தீர்கள் ?'' கதிரையில் இருந்தவர்கள் கேட்டதை மொழிபெயர்ப்பாளர் தமிழில் சொல்கிறார். அந்த மனிதர் தொண்டையைச் செருமிக் கொண்டு "இது என்ர பிள்ளை. கடைசியா நடந்த சண்டையில அவனைக் காணல்ல. அவனை ஆமிதான் .....'' என்று கூறிமுடிப்பதற்கிடையில் மொழிபெயர்ப்பாளர் குறுக்கிடுகிறார்.*

பி.ப. 1.33 மணி.

*'' மன்னிக்கவேண்டும் ஐயா! உங்களைப் போல இன்னும் நிறையப் பேர் சாட்சியமளிக்க வேண்டியிருப்பதால் உங்களுக்கு வழங்கப்பட்ட நேரம் இவ்வளவுதான். நீங்கள் உங்கள் குறைகளை கடிதமாக எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். நன்றி ஐயா. அடுத்த ஆள் சாட்சியமளிக்க வாங்கோ'' உரத்த குரலில் மொழிபெயர்ப்பாளர் கூறியதும் வந்தவர் விக்கித்துப் போனார்.*

*'' ஐயா! நான் இன்னும் என்ன சொல்ல வந்ததெண்டதை சொல்லவே தொடங்கேல்லை. அதுக்குள்ள போகச் சொல்லுறீங்கள் ?''- இது வந்தவர்.*

*'' நாங்கள் ஒண்டும் செய்ய ஏலாது. எங்கட முகவரிக்கு நீங்கள் சொல்ல நினைச்சதையெல்லாம் எழுதி அனுப்பினால் சரி.''- இது மொழிபெயர்ப்பாளர்.*

*'' ஐயோ! என்ர பிள்ளை! அவனை உங்களிட்ட சொல்லியாவது கண்டுபிடிப்பம் எண்டு வந்தன். ஐயா அவன் எங்க இருக்கிறான் எண்டாவது சொல்லுங்கோ சாட்சியம் எண்டுட்டு அரைகுறையா கேட்டுட்டு அனுப்பிறீங்களே? உங்களால எங்களுக்கு நீதி கிடைக்கும் எண்டு எப்பிடி நம்பிறது?'' அழுதுகொண்டே வார்த்தைகளைக் காற்றில் கரைத்தபடி அந்த மனிதர் அகன்று செல்கிறார்.*

**ஔண்யன்**

- மேலே சொல்லப்பட்டது ஒரு கற்பனைச் சம்பவம்தான். ஆனாலும் இதுபோன்ற நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர் வின் போது இடம்பெறும் வாய்ப்புகள் மிக அதிகம்.

யாழ்ப்பாணத்தில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் இந்த மாதம் 11 ஆம் திகதி முதல் நான்கு தினங்களுக்கு நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும்- ஒக்ரோபரில்- ஆணைக்குழுவின் அமர்வுகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டபோதும், எவ்வித மாற்று அறிவித்தல்களும் இல்லாமல் குறித்த தினங்கள் கிழக்குப் பகுதியில் ஆணைக்குழு தன் அமர்வுகளை நிகழ்த்தியிருந்தது. இதோ, அதோ என்று இழுத்தடித்துக் கொண்டே சென்ற ஆணைக்குழுவின் வருகை இம்முறை நிச்சயமாக நடந்தே தீரும் என்று உரிய அதிகாரிகள் கற்பூரம் ஏற்றி சத்தியம் செய்யாத குறையாகச் சொல்கிறார்கள். தமது கூற்று ஆதாரமாக ஆணைக்குழுவின் நான்கு நாள் அமர்வுகளின் நிகழ்ச்சி நிரலையும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி நிரலும் அது கொண்டுள்ள நேர அட்டவணையும் ஆணைக்குழுவின் அமர்வுகள் எல்லோரும் கூறுவதைப் போலவே வெறும் கண் துடைப்பு என்பதை நிரூபிப்பது போலவே அமைந்திருக்கிறது.

மூன்று தசாப்தங்களாக இலங்கையில் மையங் கொண்டிருந்த போர் பற்றிய முழுமையான விசாரணைகளுக்கு ஆணைக்குழுவில் இடமில்லை. கடந்த 10 ஆண்டுகளுக்குள் நடந்தேறிய அனர்த் தங்கள் பற்றிய சாட்சியங்களே பதிவுக்குள்ளாக் கப்படு கின்றன. அதற்கு முன்னர் நிகழ்ந்தவற்றை எல்லாம் போர்க்குற்றங்களாகவோ அல்லது போர் சார்ந்த அழிவுகளாகவோ கருத்தில் எடுப்பதற்கே அரசு மறுத்திருப்பது இதன் மூலம் தெட்டத் தெளிவாகியுள்ளது. தனது வசதிக்கேற்ப, எல்லைகளில்லாமல் விரிந்து கிடக்கும் போரின் வடுக்களில் ஒரு சிறு பகுதியை மாத்திரம் கவனத்தில் கொள்வது உண்மையில் எந்தவிதமான பாடத்தையும் சரிவரக் கற்றுக்கொள்ள உதவப் போவ தில்லை. ஆயினும் அதைப் பற்றியெல்லாம் அதிகார வர்க்கத்தினருக்கு அக்கறையில்லை. ஒரு விசார ணைக்குழு மூலம் போர்க்குற்றங்கள் நிகழ்ந்தனவா என்று ஆராயப்படுவதாக உலகுக்குக் காட்டவேண் டும். அதன் மூலம் சர்வதேச ரீதியில் நாறிப்போய்க் கிடக்கும் இலங்கையின் பெயரை ஓரளவுக்காவது நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டும். இதுவே ஆள்வோரின் கணக்கு.

ஆயினும் அதிகாரத்தின் கணக்குக்கு எதிர்மாறாக கிணறுவெட்ட பூதங்களும் கிளம்பத் தொடங்கின. ஆணைக்குழுவின் அமர்வுகளின் போது அரசின்

> **அதிகாரத்தின் கணக்குக்கு எதிர்மாறாக கிணறுவெட்ட பூதங்களும் கிளம்பத் தொடங்கின. ஆணைக்குழுவின் அமர்வுகளின் போது அரசின் போர்க்குற்றங்களை உறுதிப்படுத்தும் பல சாட்சியங்கள் பதிவாகின.**

போர்க்குற்றங்களை உறுதிப்படுத்தும் பல சாட்சியங்கள் பதிவாகின. இவையெல்லாம் உடனுக்குட னேயே ஊடகங்கள் வாயிலாக உலகின் கண்களுக்குத் தெளிவாகப் புலப்பட்டன. இது பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய கதையாக மாறிவிட்டது அரசுக்கு. பொதுவாவே அரசுக்கு சார்பான கருத்துக் களை வெளிப்படுத்தும் சாட்சியங் களே ஆரம்பத்தில் பதிவாகியிருந் தன. இது அரசுக்கு பெரும் 'புளு கத்தை' ஏற்படுத்தியிருந்தது. மிக விரைவில் உலகின் முன்னால் கனவான் வேடத்தை மீண்டும் அணிந்து கொள்ள இத்தகைய சாட்சியங்கள் வழி சமைத்துவிடும் எனவும் அவர்கள் எண்ணினர். ஆனாலும் மெல்ல மெல்ல துணிவு வரப்பெற்ற சிலர் நடந்த உண்மைகளை அவிழ்த்துவிட அரசின் பொய் முகமும் கிழியத்தொடங்கியது.வன்னியில் நடந்த இறுதிப் போரின் போது அரசு என்னென்னவெல்லாம் சொல்லி வந்ததோ அவற்றுக்கு எதிர்மாறாக அங்கு பாதிப்புற்ற மக்கள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்துவிட்டனர்.

மக்களை பொஸ்பரஸ் குண்டுகளை படையினர் வீசிக் கொன்றமை, ஏராளமானோரை விசாரணைக்கென்று அழைத்துச் சென்று விட்டு இப்போது அவர்களைப் பற்றி தமக்கு எதுவுமே தெரியாது என்று படையினர் கை விரித்தமை, வெள்ளைக் கொடியுடன் படகில் வந்த மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களைக் கடற்படை கொன்றமை என்பன போன்ற ஏராளமான அரசின் போர்க் குற்றங்களை பாதிக்கப்பட்ட மக்களே சாட்சியங்களாக வெளிப்படுத்தினார்கள். இது அரசுக்கு இன்னமும் சங்கடங்களை அதிகரிக்கச் செய்தது. எனவே சாட்சியங்களின் வாய்களை எப்படியாவது மூட வேண்டிய நிலை அரசுக்கு எழுந்தது. வன்னியில் மக்கள் பொங்கியெழுந்ததை விடவும் யாழ்ப்பாணத்தில் அரசுக்கு இன்னமும் அதிக பாதிப்பை உண்டுபண்ணக்கூடிய சாட்சியங்கள் பதிவாகிவிடுமோ என்ற அச்சம் ஆணைக் குழுவுக்கும் அரசுக்கும் எழுந்திருக்க வேண் டும். அதனால்தான் பிள்ளையார் திருமணம் போல ஆணைக் குழுவின் வருகை தள்ளிக்கொண்டே போனது. இப்போது நிச்சயமாகியுள்ள ஆணைக்குழுவின் இம்மாத விஜயம் கூட ஒரு நுனிப்புல் மேயும் வகையிலேயே அமையப் போகிறது என்பதை அவர்கள் வெளியிட்ட நிகழ்ச்சி நிரலே கட்டியம் கூறி நிற்கிறது.

யாழ்ப்பாண அமர்வுகளின் போது ஆணைக்குழு சாட்சியங்களுக்கான நேர ஒதுக்கீட்டில் கஞ்சத்தனம் [illegible] வெளியிட்ட அட்டவணையைப் பார்த்தாலே புரியும்.அநேகமாக ஒருவர் சாட்சியம் அளிக்க ஆகக்குறைந்தது பத்து நிமிடங்களாவது தேவைப்படும். ( உண்மையில் பத்து வருட அவலங்களையும் தமது வலிகளையும் வெளிப்படுத்த அவர்களுக்கு பத்து நிமிடம் போதாதுதான்) ஆனாலும் 75 இற்கும் மேற்பட்டோர் சாட்சியமளிக்க விண்ணப்பித்திருந்த இடங்களில் வெறும் மூன்று மணித்தியாலங்கள் மாத்திரமே ஆணைக்குழு சாட்சியங்களைச் சேகரிக்கவுள்ளது.இதன்போது ஒருவரிடமிருந்து சாட்சியங்களைப் பெற 3 நிமிடத்திற்கும் குறைவான நேரமே ஒதுக்கப்பட்டுள்ளது. சாட்சியம் ஒருவர் தன்னை அறிமுகப்படுத்தி முடிப்பதற்கிடையில் அவருக்கான நேர எல்லையும் முடிந்துவிடும். இதில் இன்னொரு முக்கியமான விடயமும் உண்டு. ஆணைக்குழுவின் தலைவர் உட்பட பெரும்பாலான உறுப்பினர்களுக்கு தமிழ் மொழி புரியாத காரணத்தால் சாட்சியமளிப்போரின் வாக்குமூலங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும். ஆகவே ஒருவர் சாட்சியமளிக்க எடுக்கும் நேரத்தின் சமமான நேரத்தை மொழிபெயர்ப்புக்கும் செலவிடவேண்டியிருக்கும். இதனால் ஒருவர் சாட்சியழளிக்க ஒரு நிமிடம் மாத்திரமே வழங்கப்படுகின்ற நிலையே யாழ்ப்பாணத்தில் ஏற்படப்போகிறது. இந்த லட்சணத்தில் எல்லா இடங்களிலும் ஏற்கனவே விண்ணப்பித்ததை விட வேறுயாராவது சாட்சியமளிக்க விரும்பினால் அவர்களும் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. சிலவேளைகளில் வன்னியில் செய்ததைப் போன்று 'உங்கள் சாட்சியங்களைத் தபாலில் அனுப்புங்கள்' என்று கூறுகின்ற உத்தியை இங்கும் ஆணைக்குழு பிரயோகிக்கலாம்.

ஏற்கனவே ஆணைக்குழு ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்வதாக சொல்லப்படுகின்றது. "இராணுவ பிரசன்னத்தை மக்கள் விரும்புகிறார்கள். இதனை ஆணைக்குழு அமர்வுகளுக்குச் செல்லும் வழியில் எதிர்ப்படும் மக்களைக் கேட்டு அறிந்துகொண்டேன்.'' என்று அண்மையில் ஆணைக்குழுவின் தலைவர் சீ. ஆர்.டி. சில்வா தன்னுடைய 'கண்டுபிடிப்பை' வெளிப்படுத்தியிருந்தார். கிணற்றுக் கட்டில் பிள்ளையை வைத்துவிட்டு வந்தது போல அவசர அவசரமாக அமர்வுகள் நடைபெறும் இடத்துக்கு வந்துவிட்டு குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே பறந்துவிடும் ஆணைக்குழுவினர் வழியில் எதிர்பட்ட மக்களைச் சந்தித்து கருத்துக் கேட்டதாகக் கூறுவதை சிறுபிள்ளை கூட நம்ப மறுக்கும். ஆனாலும் அரச விசுவாசத்தைக் காட்டுவதற்கு ஆணைக்குழுத் தலைவருக்கு இப்படிச் சொல்வதைத் தவிர வேறு மார்க்கங்கள் இல்லை. சாட்சியங்கள் மூலம் அரசுக்குச் சார்பான முடிவுகளைப் பெற முடியாமையால் இவ்வாறு தான் மக்களைச் சந்தித்ததாக இல்லாத சாட்சியங்களை கொண்டு வர முனைகிறார்.

ஆனாலும் யார் குற்றியாவது அரிசியானால் சரி என்ற நினைப்போடுதான் பெரும்பாலான மக்கள் இருக்கிறார்கள். எனவே ஆணைக்குழுவுக்குச் சென்று சாட்சியமளிப்பதன் மூலம் காணாமல் போன அல்லது தடுப்பில் உள்ள உறவுகளை மீட்கலாம், தமக்கேற்பட்ட அழிவுகளை பதிவு செய்யலாம் என்ற நம்பிக்கை இன்னமும் நிறையப் பேரிடம் உள்ளது. இந்த மக்களின் நம்பிக்கையை காப்பாற்ற வேண்டியது ஆணைக்குழுவின் கடமை. இனியாவது மக்களின் வாக்குமூலங்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களுக்குரிய நேரங்களை ஒதுக்கிக் கொடுத்து விசாரணைகளை சரியான திசையில் பயணிக்கச் செய்ய வேண்டியது ஆணைக் குழுவின் முன்னால் உள்ள பணிகள். அவற்றை யாழ்ப்பாணத்திலாவது செய்வார்களா? அல்லது எச்சில் கையால் காகம் துரத்தியது போல ஒவ்வொருவருக்கு ஒரு சில நிமிடங்களை மாத்திரம் ஒதுக்கிக் கொடுத்து விட்டு தமது கடமை முடிந்ததென்று பறந்துவிடுவார்களா? இந்த ஆணைக்குழு இன்றும் நிறையப் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது என்பதினையே இந்தக் கேள்விகள் சுட்டி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## Dr.சுப்பிரமணியம் சின்னத்தம்பி

7 ஆம் கட்டை வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதியும் சத்திரசிகிச்சை நிபுணருமான சுப்பிரமணியம் சின்னத்தம்பி நேற்று (06.11.2010) சனிக்கிழமை அவுஸ்திரேலியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கனகநாயகி தம்பதியரின் அன்பு மகனும் தம்புபூரணப்பிள்ளை (செல்வம்) தம்பதியரின் மருமகனும் சுந்தரநாயகியின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம் (கண்ணன்), சிறிஸ்கந்தராஜா (மணிவண்ணன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அஞ்சலாவின் அன்பு மாமனாரும் சச்சினின் அன்புப் பேரனும் Proctor கந்தையா இராஜேஸ்வரியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மா.இராமலிங்கம்
(கிராம அலுவலர் - மருமகன்)
கப்பல் வளவு,
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

தொ.பே:
0061297463843
அவுஸ்திரேலியா (சி-572/10)

---

## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில, By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. தொ.பே:- 0776751649

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகர மத்தியிலுள்ள காகிதாதிகள் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் ஆண் / பெண் தேவை. தொடர்பு:- 0212229928, 0214900582

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. 1Kg 470/=
தொடர்பு:- 859, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
(U.S கேபிள் T.V முன்பாக ) 0779672599

## காணி மற்றும் வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட
வீதியில் 1¼ பரப்பினுள்
காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
பெற விரும்புவோர்
தொடர்பு கொள்ளவும்:
0771508081

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் தாதிய போதனாசிரியர் திருமதி சதானந்தி நந்தகுமாரன் அவர்களின் தகப்பனாரும் 2007 பிரிவு தாதிய மாணவன் செல்வன் ச.சதாரூபவின் தந்தையாரும் ஆகிய

அம்பலவாணர் சதாசிவம்

06.11.2010 அன்று சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியக் கல்லூரி சமூகம்,யாழ்ப்பாணம்.

---

# நெஞ்சம் கனக்க கண்ணீர் மல்கி
# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அம்மா மடியில்:
11.11.1950

காளி தேவி மடியில்:
08.10.2010

## அமரர் கந்தையா நித்தியானந்தன்
(வேலணை)

அன்பே எமது உறவே சென்றதெங்கே?
எம் செல்வ உறவே உன்
இதய நினைவுகள் காற்றில் பறந்ததென
அறிந்து ஓடோடி வந்தோம். துடிப்புடனே
நீரோ எம்மைக் கண்விழித்துப் பார்க்கவில்லை
உன் திருமுகத்தை இனி எப்போ காண்போம்
பாசத்தின் நேசத்தால் பரிதவிக்கும் எமக்கு
ஆறுதல் வார்த்தை கூறாயோ- எம்
நித்தியானந்தமே!
ஓம் சாந்தி!

வேலணை. (சி-105699) உருகித் தவிக்கும் அன்பு உறவுகள்

---

## விற்பனைக்கு

பொமேரியன்
நாய்க்குட்டிகள்
விற்பனைக்கு
உண்டு.
தொடர்பு:-
0776220971

---

# மரண அறிவித்தல்

## திருமதி இராசையா மகேஸ்வரி



அல்வாய் கிழக்கு, பத்தானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு மதி இராசையா மகேஸ்வரி 04.11.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், புஸ்பநாதன் (கனடா), காலஞ்சென்றவர்களான யோகநாதன், ஜெகநாதன் (கனடா), மற்றும் அற்புதநாதன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும், விமலாதேவி (கனடா), புஸ்பதேவி, மகேஸ்வரி (கனடா), குலராணி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியும் சாஜன், துர்க்கா (கனடா), ரஜீபா, ரஜீகரன் (இத்தாலி), விஜிதா, வினோதா, யசோதா, விசித்திரா, ஜனனி (கனடா), மதுரா, ரேணுகா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், தேனுகாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.11.2010) ஞாயிற்றுக்கிழமை அல்வாய் கிழக்கு மணியம் பாடசாலை வீதியில் உள்ள அவரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியம் பாடசாலை வீதி,
அல்வாய் கிழக்கு, அல்வாய். (105962)

தகவல்:
குடும்பத்தினர்.

---

சர்வோதய பொருளாதார விவசாய அபிவிருத்தி சேவைகள் (கரண்டி) லிமிட்

# சீட்ஸ் (கரண்டி) லிமிட்டட்.

சீட்ஸ் நுண்நிதி வியாபார சேவைகள் பயிற்சி ஆகியவற்றின் முதன்மையான சேவைகள் வழங்குநர்

**நாம் எதிர்பார்ப்பது தகுதிவாய்ந்த, திடநம்பிக்கையுடைய அதி ஊக்கமுடைய தனித்து இயங்கும் திறன்மிக்க ஆற்றல் உடையவர்களை.**

## சங்க அபிவிருத்தி பிரதிநிதி
வவுனியா / மன்னார் / யாழ்ப்பாணம்

**விண்ணப்பத்திற்கான தகுதியும், அனுபவமும்**

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணக்கியல் பாடத்துடன் சித்தி. 04 வருட காலம் பிரதேச சமூக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தில் பயிற்சி பெற்றவராகவும் அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**வயது : 35 வயதிற்கு உட்பட்டவர்**
**ஊதியம் : பேசித்தீர்மானிக்கப்படும்**

## சங்க மேற்பார்வை அலுவலகர்
வவுனியா / மன்னார் / யாழ்ப்பாணம்

**விண்ணப்பத்திற்கான தகுதியும், அனுபவமும்**

- க.பொ.த. ( உ/த ) பரீட்சையில் கணக்கியல் பாடத்துடன் சித்தி 02 வருட காலம் பிரதேச சமூக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தில் பயிற்சி பெற்றவராகவும் அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**வயது : 30 வயதிற்கு உட்பட்டவர்**
**ஊதியம் : பேசித்தீர்மானிக்கப்படும்**

## கணக்கு உதவியாளர்
வடக்கு பிராந்தியம் / மன்னார் / யாழ்ப்பாணம்

**விண்ணப்பத்திற்கான தகுதியும், அனுபவமும்**

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி *HNDA III* நிலை அல்லது *AAT III* நிலை பரீட்சையில் சித்தி.
- 02 வருட காலம் நிதி நிறுவனத்தில் பயிற்சி பெற்றிருத்தல்.

**வயது : 35 வயதிற்கு உட்பட்டவர்**
**ஊதியம் : பேசித்தீர்மானிக்கப்படும்**

## கணக்கு எழுதுவினைஞர்
வடக்கு பிராந்தியம் / மன்னார் / யாழ்ப்பாணம்

**விண்ணப்பத்திற்கான தகுதியும், அனுபவமும்**

- க.பொ.த. ( உ/த ) பரீட்சையில் சித்தி *HNDA I* நிலை அல்லது AAT II II நிலை பரீட்சையில் சித்தி.
- 01 வருட கால அனுபவம் நிதி நிறுவனத்தில் பயிற்சி பெற்றிருத்தல்.

**வயது : 30 வயதிற்கு உட்பட்டவர்**
**ஊதியம் : பேசித்தீர்மானிக்கப்படும்**

**பொதுவானவை**

- சிறந்த முறையில் தமிழ் சிங்கள மொழிகளில் தகவல் பரிமாற்று திறமைகள் உடையவராய் இருத்தல் வேண்டும். (எழுத்து,உரையாடல்)
- குழுவாக இணைந்து செயற்படக்கூடிய நபராய் இருத்தலோடு, கணினி அறிவு உடையவராய் இருத்தல் வேண்டும்.
- தனித்து இயங்கக்கூடிய ஆளுமை படைத்தவராய் இருத்தல் வேண்டும்.
- வெளிக்களத்தில் வேலை செய்யக் கூடியவராய் இருத்தல் வேண்டும்.
- சிறந்த ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**உங்கள் விண்ணப்பத்துடன் உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்,விலாசத்தையும் இணைத்து விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்தில் இருந்து 7 நாள்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

*CEO* முகாமைத்துவ இயக்குனர்

## சீட்ஸ் (கரண்டி) லிமிட்டட்

"அர்த்தர்ம கேந்திரய" இல: 45, ராவதாவத்த வீதி, மொறடுவ

*E-mail – recruitment@seeds.lk, Tel : 011 5444666*

விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடப்பக்கத்தின் மேல் முனையில் குறிப்பிடவும்.

---




# வாக்காளர் பதிவு 2010

## வாக்களிப்பதற்கு பதிவு செய்து விட்டீர்களா?

✓ வட மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30ம் திகதி வரை தொடரும்.

✓ மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களை பெற்றுக் கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அணுகுங்கள்.

**இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:**

CPA
minority rights group international

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிரங்க மடல்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''மனிதாபிமான நடவடிக்கை'' என்றும் ''பயங்கரவாத வேரறுப்பு'' என்றும் சர்வதேசத்திற்குப் பிடித்த வர்ணம் தீட்டப்பட்ட தலைப்புகளிற்குப் பின்னால் என்ன நடந்தது என்பதை வெட்ட வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் அந்த மக்கள்.

கன்னியாய் வெந்நீரூற்று பற்றி கவிஞர் ஒருவர் பாடுகின்றபோது ''காதலனைப் பிரிந்தவளின் மனம்போலொன்று; கவிபாடி பரிசு பெறான் மனம் போலொன்று; நீதி பெறா வேளை துயர் மனம் போலொன்று...'' என்று ஒவ்வொரு ஊற்றினதும் வெப்பநிலையை ஒப்பிட்டிருப்பாரே... அத்தகைய ஓர் அனுபவத்தைத்தான் வன்னி மக்களின் சாட்சியங்களைக் கேட்டபோது நீங்கள் பெற்றிருப்பீர்கள் என நான் நம்புகிறேன்.

அவ்வாறு சாட்சியமளித்தவர்களின் சுட்டு விரல்கள், இலங்கையின் ஆயுதப்போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் எனவும் ஒரு கையில் ஆயுதத்தையும் மறுகையில் மனிதாபிமானத்தையும் ஏந்திப் போராடி, மிகக் குறைந்த உயிர் மற்றும் சொத்தழிவுகளுடன் அமைதியை நிலை நாட்டியவர்கள் எனவும் புகழப்படும் படைத்தரப்பினரைப் பார்த்து நீட்டப்பட்டிருக்கிறது.

புலிகள் முக்கிய உறுப்பினர்களாக விளங்கிய பலரின் மனைவிமார் - தமக்கு முன்பாக தமது கணவர்மார் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர் எனச் சொல்லி அவர்களின் நிலை தொடர்பில் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். இன்னும் சிலர் காணாமலாக்கப்பட்ட தமது பந்தங்களின் நிலைகுறித்து குரலெழுப்பியிருக்கிறார்கள். இன்னும் சிலர், குறிப்பாக அந்தக் கமநல சேவை அலுவலருக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து வாய்திறந்திருக்கிறார்கள்.

போரின் உச்சக் கட்டத்தில் வன்னியிலிருந்து ஊடகங்களுக்குக் குரல் தந்தோரெல்லாம் புலிகளின் அழுத்தத்தினால் விடயங்களை ஊதிப் பெருப்பித்தார்கள் என அரசு கூறிநிற்க, மீளக்குடியேறி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து கொண்டு இந்த மக்கள் பதிவு செய்த சாட்சியங்கள் உங்களை நன்கு சிந்திக்க வைத்திருக்குமென நான் எண்ணுகிறேன்.

புனர்வாழ்வு எனும் போர்வையின்கீழ் சர்வதேச மனிதாபிமான அமைப்புகளின் பிரதிநிதிகள்கூட அண்ட முடியாத இடங்களில் கைதிகள் என்ன செய்யப்படுகிறார்கள் என்ற- பலரிடம் உள்ள உள்மனக் கேள்வியினை- அவர்கள் உங்களிடம் பகிரங்கமாகக் கேட்டிருகிறார்கள். இவர்களுக்கான உங்கள் பதில் என்ன?

''போர் நிறுத்த ஒப்பந்த முறிவு'' என்பதனை பிரதான பாடு பொருளாகக் கொண்டுள்ள உங்கள் ஆணைக்குழு - அவ்வொப்பந்த நடைமுறைகள் பற்றிக் கண்காணிக்க ஸ்கன்டிநேவிய நாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு (SLMN) உறுப்பினர் எவரையும் சாட்சியத்திற்கு அழைத்ததாகவோ, அவர்களிடம் இருந்து கருத்துக்களைப் பெற்றதாகவோ இதுவரை தகவல் இல்லை.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மறுதரப்பான ஐ.தே.க.வோ ரணில் விக்கிரமசிங்கவோ இதுவரை சாட்சியமளிப்பதற்கான ஏற்பாடுகள் ஏதும் இல்லை. புலிகள் சாட்சியமளிக்கும் நிலையோ சூழலோ இல்லை.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலத்தில் இராணுவத் தளபதியாகப் பணியாற்றிய முன்னாள் ஜெனரல் சரத் பொன்சேகாவின் சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் உங்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கிறதா என்றால் அதுவும் வினாவிற்குரியதே.

போரில் ஒவ்வொரு படையணியையும் வழிநடத்திய படை அதிகாரிகள் முக்கியமானவர்கள். உங்கள் ஆணைக்குழுவிற்கான கால எல்லை எதிர்வரும் 15ஆம் திகதியுடன் முடிவடையும் நிலையில் (அது நீடிக்கப்படலாம் என இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது), இவர்களிடமிருந்தெல்லாம் நீங்கள் சாட்சியம் கோராமல் இருப்பது, உங்கள் ஆணைக்குழுவின் வினைத்திறன் மற்றும் நம்பகத் தன்மை குறித்து சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

போட்டி ஒன்றை நடத்தும் போது அதன் நிபந்தனைகளில் ஒன்றாக ''நடுவரின் தீர்ப்பே இறுதியானது'' எனக் குறிப்பிடப்படும். அந்த வகையில் உங்கள் ஆணைக்குழு விடயத்திலும் - அதன் 'செல்லும் செல்லாத் தன்மைகளை தீர்மானிக்கப் போகும் செட்டியாராக ' - நடுவராக விளங்கப்போகின்றவர் ஜனாதிபதி ராஜபக்ஷவேதான். இதேவேளை, உங்களது இறுதி அறிக்கை ஐ.நா.விற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக - ஐ.நாவின் நிபுணர் குழு தமக்குச் சாட்சியங்களை அனுப்புவதற்கான ஈ-மெயில் முகவரியையும் முடிவுத்திகதியையும் அறிவித்த பின் - ஹெகலிய ரம்புக்வெலவால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

படைத்தரப்பினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள், பொது மக்களின் வாக்கு மூலங்களில் இருந்து அம்பலத்திற்கு வருகின்ற நிலையில் , குறித்த அறிக்கையை ஐ.நாவிடம் கையளித்து, சர்வதேசத்திடம் பொல்லைக் கொடுத்து அடிவாங்க அரசு எத்தனிக்குமா என்றொரு சந்தேகம் எனக்குள் எழுவதை என்ன செய்தும் என்னால் தடுக்க முடியவில்லை.

உங்களிடம் நான் எழுப்பும் வினா எதுவெனில், இலங்கையின் ஆயுத முரண்பாட்டு வரலாற்றின் இறுதிப் பகுதியாக, அதிகளவில் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்ட நாள்களாகக் கருதப்படும் அந்த இறுதி நாள்களில் நடந்தவை தொடர்பில் படையினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள், சாட்சியங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டால்... படைத்தரப்பினர் மீது, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏனெனில், போர்க் குற்றங்கள் தொடர்பில் தமது படைத்தரப்பினர் மீது தாமாகவோ, சர்வதேசம் மூலமாகவோ எந்தவொரு விதத்திலும் நடவடிக்கை எடுக்க அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி இதற்கு முன்னர் பல தடவைகள் கூறி இருக்கிறார்.

எது எப்படியோ, உலகப் படத்தில் குட்டித் தீவாய் இருந்தும், உள்நாட்டுப் பிணக்கினால் குட்டிச் சுவராய்ப் போயுள்ள நம்நாட்டின், தொலைந்து போன இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எந்த வகையிலேனும் மீளக்கொண்டு வரும் எனில், அது எவராலும் வரவேற்கப்படக்கூடியதே!

உங்கள் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் சிபார்சுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி உப குழு ஒன்றை அமைக்கப் போகின்றார் என்ற தகவலை, கடந்த ஐப்பசி 2010 நாள் 29 தமிழ்த் தினசரிகள் யாவும் ஒரே நேரத்தில் தமது பிரதான தலைப்பாக்கி இருந்தன. உங்கள் ஆணைக்குழு தொடர்பில் தமிழர்களுக்குள்ள ஆவலை இது நன்கு வெளிப்படுத்தியிருந்தது எனலாம்.

பாமரனாக நின்று உங்களிடம் நான் கோருவது என்னவென்றால், - தப்பான அபிப்பிராயத்தைக் கொண்டு உங்களின் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விமர்சிக்க வேண்டாம் என அந்த மூன்று முக்கிய மனித உரிமை அமைப்புகளுக்கு பதிலிறுத்திருக்கும் நீங்கள்,

* யாருடைய அழுத்தங்களுக்கும் எந்தவொரு ஆயுதம் தாங்கிய, தாங்காத சக்திகளுக்கும் அடிபணியாது உங்கள் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

* பாதிக்கப்பட்ட தரப்பினர், அவர்கள் எவர்களாயிருந்தாலும் திருப்தியடையும் வகையில் உங்கள் செயற்பாடுகள், யோசனைகள் இருக்க வேண்டும்.

* சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரதும் சாட்சியங்களைத் திரட்ட நீங்கள் முனைய வேண்டும்.

* பொதுமக்களுடைய சாட்சியங்களைக் கோரும் போதும் ஏற்கனவே சாட்சி தந்தவர்களுக்கும் போதுமான பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். உங்களுடைய முயற்சிக்குச் சாட்சியம் தந்தமைக்காக அவர்கள் யாருக்கும் பலிக்கடாக்கள் ஆக்கப்படக்கூடாது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கார்த்திகை 11 தொடக்கம் 14 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் உங்கள் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பொது இடங்கள் தேர்வு செய்யப்பட்ட நிலையில், அங்கு சாட்சியமளிக்க வருபவர்கள் எந்த விதத்திலும் இடைஞ்சலையும் எதிர்கொள்ளா வண்ணம் அவர்களுக்கான புறச்சூழல் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும்.

* தமிழர் தரப்பினரால் உங்களிடம் முன்வைக்கப்படும் கோரிக்கைகளும், எழுப்பப்படும் வினாக்களும், கேட்கப்படும் நியாயங்களும் இலங்கை அரசுக்கு ஒன்றுமே புதியவை அல்ல. கைதாகி விசாரணையிலிருப்போர் தொடர்பிலும் காணாமற்போனோர் தொடர்பிலும் அவர்கள் எழுப்பிய கேள்விகளாகட்டும், உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டு குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கைகளாகட்டும், அரச கரும மொழியான தமிழ் செவ்வனே நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்ற வேண்டுகோளாகட்டும் எல்லாமே முன்னர் அரசுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தான். அவை ஒன்றும் இப்போதுதான் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டவை அல்ல.

இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தவென உங்கள் ஆணைக்குழுவை அமைத்து விட்டு மறுபுறத்தில் மீள் குடியமர்வுக்குச் சில மில்லியன்களையும் பாதுகாப்புச் செலவீனமாகப் பல மில்லியன்களையும் அரசு ஒதுக்கி இருக்கிறது. அவசர காலச் சட்டம் மாதா மாதம் மேலதிக வாக்குகளினால் இப்போதும் நடைமுறைக்கு வருகிறது.

இந்தப் பின்னனியில், உங்களின் இறுதி அறிக்கை, அதன் பின் தொடர்ந்து நடைபெறப் போகின்றவை என்பவற்றை அறிவதில் ஆர்வமுள்ள தரப்பினரில் நானும் ஒருவனாய்க் காத்திருக்கிறேன்.

நன்றி. - [illegible] -

## மக்கள் முகம்

### மன்னார் செம்மொழி மாநாட்டு கவிதைப் போட்டியில் பரிசு



சிந்துபுரம், வட்டு.வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபரும் கவிஞருமான வ.யோகானந்த்சிவம் (சிந்துபுரம் கவிராயர்) மன்னார் செம்மொழி மாநாட்டுக் குழுவினரால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதற் பரிசுபெற்றுள்ளார்.

### மன்னார் செம்மொழி மாநாட்டு சிறுகதைப் போட்டியில் பரிசு



கடந்த நான்கு தசாப்த காலங்களுக்கு மேலாக கவிதை, சிறுகதை, கட்டுரை, நாவல், நாடகம் போன்ற பல துறைகளிலும் பங்களிப்புச் செய்து வருபவர் த.பரமலிங்கம். நவாலி,அங்கையானைப் பிறப்பிடமாக்வும், வண்-வட மேற்கு நாவலடி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்டவர்.

மன்னார் தமிழ்ச் சங்கம் நடத்திய செம்மொழி மாநாட்டை சிறப்பிக்கும் முகமாக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றுள்ளார்.

முன்பாக கவிதை, சிறுகதைப் போட்டிகளில் முதல் பரிசுகள் பலவற்றைப் பெற்றுக்கொண்டவர்.

இவர் உதயனில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகப் பிரதேச செய்தியாளராகப் பணியாற்றி வருகிறார்.

### இசைத்துறையில் விருட்சமாய் மிளிர்ந்தவர்; ஆசிரியை அமரர் சாரதா பரஞ்சோதி



தனது நாற்பத்தைந்தாவது அகவை நிகழ்வைக் கொண்டாடி மகிழ வேண்டிய இசைக்கலைஞர் திருமதி சாரதா பரஞ்சோதி இன்று நம்மிடையே இல்லை அவர் மறைந்து மூன்றாண்டுகள் கடந்தும் எம்மால் அதனை நம்ப முடியவில்லை. மரபு வழி தவறாத குரலிசை நாய கியாய் ஈழத்தின் இசைத் துறையில் வலம் வந்த இவரது இழப்பை ஈடு செய்வதென்பது சாதரணவிடயமல்ல.

முத்தமிழ் வளம் கொளிக்கும் மூளாய் என்னும் அழகிய சிற்றூரில் பிறந்த இவர் சிறுவயது முதல் எமது கலை, கலாசாரங்களைப் பெரு விருப்போடும் சிறப்போடும் பேணவும் வளர்க்கவும் முனைந்தவர். நுண்கலைகளுள் முதன்மைக் கலையாக விளங்கும் வாய்ப்பாட்டை வரன் முறையாகக் கற்று ஒப்பற்ற கலைஞராக நம்மிடையே திகழ்ந்தவர்.

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்று பட்டப் படிப்பை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இசைத்துறையில் நிறைவு செய்து பட்டம் பெற்றவர்.

ஈழத்தின் பல பகுதிகளிலும் இசைக் கச்சேரிகளைத் திறம்பட வழங்கி வந்த இவர், பல நாட்டிய நாடகங்களிற்கு இசையமைத்துப் பாடிய அனுபவமும் கொண்டவர். ஆசிரியத் தொழிலிலும் மேன்மை கொண்டவராய் விளங்கினர்.

1991 தொடக்கம் 1997 ஆம் ஆண்டுவரை உதவி விரிவுரையாளராக யாழ். பல்கலைக் கழகத்தின் இசைத்துறையில் பணிபுரிந்த போது அன்னையை நிகர்த்த ஆசிரியையாக மாணவர் மனங்களில் இடம் பிடித்துக் கொண்டவர். இதன் பின் பாடசாலை ஆசிரியையாக நியமனம் பெற்று சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் தனது நற்பணியைச் செவ் வனே தொடர்ந்தவர்.

தமிழ்த்தினப் போட்டிகளிற்காக மாணவர்களைத் தயார் செய்து தேசிய மட்டம் வரை சென்று, அதில் வெற்றிபெற வைத்தார் தனது கடின உழைப்பின் பயனைக் கண்டவர். இவ்வாறு தனதூ ஞானத்தாலும் முயற்சியாலும் உயர் நிலையில் அடைந்து எமது இசைத்துறையில் பெருவிருட்சமாக கிளைபரப்பி வந்த வேளையில் சாரதா பரஞ்சோதி என்னும் ஆசிரிய ஆல மரம் திடீரெனச் சாய்ந்தது.

தன் பணிக்காகப் பாடசாலை நோக்கிச் கடமை உணர்வோடு உந்துருளியில் வந்த போது நெஞ்சினிலே பாய்ந்த சிறு குண்டு எமது இசைக் கருவூலத்தை மண்ணிலே வீழ்த்தி உயிரைப்பறித்தது. இவரின் உலக வாழ்வானது இடையிலே நிறுத்தப்பட்டுப் போனது எனினும் வாழ்ந்த காலத்தில் ஆற்றிய பணிகள் இவரை என்றென்றும் நினைவு கொள்ளச் செய்கிறது.

*மாணவன் த.றொபேட்*
*விரிவுரையாளர் இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்.*

### ஈழம் கண்ட பொதுநலத் தொண்டன் அமரர் ச.முத்துலிங்கம்



தன்னலமற்ற மனிதகுலத் தொண்டர்களைச் சமூகம் என் றுமே மறப்பதில்லை; மறைவின் பின்னும் மதித்துக் கொண்டாடுகிறது. இந்த வகையில் மதித்துக் கொண்டாடப்படுபவர் சமா தான நீதிவான், கூட்டுறவுத் தலைவர், உள்ளூராட்சிச் சபைத் தலைவர் அமரர் ச.முத்துலிங்கம்.

இணுவிலில் பிறந்து உடுவில் உள்ளூராட்சிச் சபைத் தலைவராகப் பல ஆண்டுகளும், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத் தலைவராகப் பல ஆண்டுகளும் பணியாற்றியவர். உடுவில், சுன்னாகம், ஏழாலை, கந்தரோடை, இணுவில், சங்குவேலி, தாவடி போன்ற வலி. தெற்குக் கிராமங்களின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார முன்னேற் றங்களுக்காகப் பாரபட்சமின்றி இரவு, பகல் உழைத்தவர். இன மொழிப்பற்றோடு அரசியல் துறையில் செயற்பட்டவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தந்தை செல்வா காலத்திலிருந்தே தீவிர உறுப்பினர்; தொண்டனாக உழைத்தவர். உடுவிற் கிராம சபைத் தலைவராயிருந்து இவர் விருத்தி செய்த மருதனார் மடம் சந்தை, நிறுவிய நூல் நிலையம், ஆயுள்வேத வைத்தியசாலை, பூரணை இரவுகள் தோறும் நடத்திய, இலக்கிய விழாக்கள் பிரபலம், தமிழ் நாட்டுச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. உட்படத் தாயக அறிஞர்களை அழைத்து உடுவில் கிராம சபைத் திறந்த வெளியரங்கில் இவர் நடத்திய முத்தமிழ் விழாக்கள் இவ ரின் பணியைப் பறைசாற்றி நிற்பனவாகும். ஆன்மீகப் பணிகள் பலவற்றிலும் பயபக்தியுடன் ஈடுபட்டவர். கோயில்கள், மக்கள் பொது நூலகம், கந்தன் இளந் தொண்டர் சபை, விவசாய உற்பத்திச் சங்கம் என்பவற்றின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்த தோடு சிறுபான்மைத் தமிழரின் ஆலயப் பிரவேசங்களுக்கும் உதவிகள் புரிந்துள்ளார். தம்மை எதிர்ப்பவர்கள் ஆயினும் உதவி என்று கேட்டு வந்து நின்றால் முகம் மலர்ந்து, மனமுவந்து எப்பாடுபட்டும் அந்த உதவியைச் செய்து கொடுப்பது இவரது உச்சமான மனிதப் பண்பாகும்.' பிறந்த மண் இணுவில் பெருமைப்படும்படியாக 85 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த அமரர் இணுவில் ச.முத்துலிங்கம் மக்களால் என்றும் நினைவு கூரப்படுவார் என்பது உறுதி.

பண்டிதர் சா.வே.பஞ்சாட்சரம் (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பான மைதானங்கள் எவையும் இல்லை

## யாழ். வீரர்கள் கவலை

நாவற்குழி, நவ.7

சிறப்பான பயிற்சிகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், விளையாட்டு மைதானங்கள் இல்லாதமையாலேயே அண்மையில் நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பிரகாசிக்க முடியாது போனதாக வட மாகாண வீரர்கள் கவலை தெரிவித்தனர்.

கண்டி, போகம்பரவில் நடை பெற்ற தேசிய விளையாட்டு விழாவில் வடமாகாணம் இறுதியான 9வது இடத்தைப் பிடித்தது.

இதுதொடர்பாகக் கேட்ட போதே வீர, வீராங்கனைகள் இவ்வாறு கூறினார்கள்.

தென்பகுதி மாகாணங்களில் பதக்கம் பெற்ற வீரர்களில் பெரும்பாலானோர் முப்படைகளையும், பொலிஸையும் சேர்ந்தவர்களாகவே காணப்பட்டனர்.

அவர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கப்படுவதுடன், தினசரி விளையாட்டுப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. போதுமான ஓய்வும் கொடுக்கப்படுகின்றது.

அத்துடன் சிறந்த விளையாட்டு மைதானங்கள் பல இலத்திரனியல் சாதன வசதிகளைக் கொண்டுள்ளன.

வெளிநாடுகள் பலவற்றுக்குச் சென்று பயிற்சிகளைப் பெற்ற விளையாட்டுப் பயிற்றுனர்களும் உள்ளனர். அரசாங்கத்தின் மிகத் தாராளமான உதவிகளும் அவர்களுக்குக் கிடைக்கப் பெறுகின்றன.

உள்நாட்டு அமைதியின்மையை கடந்த இருபது வருடகாலமாக அவர்கள் அனுபவிக்கவுமில்லை.

எமது வடமாகாணத்தில் இவை யாவும் இல்லாததால் நாம் இறுதி இடத்தையே சொற்ப புள்ளிகளுடன் பெற முடிந்ததெனவும் வீரர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் துரையப்பா விளையாட்டரங்கு தென் பகுதி வணிக நிறுவனங்களின் கேளிக்கைகளும், கூட்டங்களும் அடிக்கடி நடைபெறும் இடமாகவே உள்ளது.

இந்த மைதானமாவது மிக நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டு, விளையாட்டு நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்தப் படுமாயின் எமது வீரர்களுக்கு ஓரளவு நன்மை பயக்கும்.

வடமாகாணத்தின் மாவட்டங்களில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஒரு விளையாட்டு மைதானம் என்றாலும் மிக நவீன வசதிகளுடன் அமைக்கப்படுதல் வேண்டும். அன்றாடம் வருவாய் ஈட்டும் செயற்பாடு களில் ஈடுபடும் விளையாட்டு வீரர்களுக்கு முழுநாள் பயிற்சிகளுக்கு சமுகமளிக்கும் போது ஊக்குவிப்புத் தொகைகள் வழங்கப்படல் வேண்டும்.

எமது மாகாணம் கௌரவமான இடத்தைப் போட்டிகளில் பெற வேண்டுமென்ற மனப்பாங்கும் யாவரிடமும் வளர வேண்டும்.

இவை யாவும் நடைபெற்றால் தான் நாம் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் முன்னேற்றகரமான நிலையைப் பெறமுடியும் என்றனர் அவர்கள். (த - 121)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ.7

யாழ். கோட்டமட்ட பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

✱ சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை எதிர் சென். சாள்ஸ் மகாவித்தியாலயம்.

✱ யாழ். மத்திய கல்லூரி எதிர் சென். ஜோண்ஸ் கல்லூரி. (த - 23)

# 'பொன் அணிகளின் போர்' 2 பிரிவுகளில் பற்றிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.7

'பொன் அணிகளின் போர்' சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் 14, 20 வயது பிரிவுகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், 16 வயதுப் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் வெற்றி பெற்றுள்ளன.

கடந்த வாரம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் முதலில் இடம்பெற்ற 14 வயது பிரிவுக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 2 : 0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி 1 : 0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை வென்றது.

18 வயதுப் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாமையால் அது சமநிலையில் முடிவடைந்தது.

20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 5 : 2 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது.

இதில் சிறந்த ஆட்டநாயகனாக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் ஏ.ரி. நிதர்ஷன் தெரிவு செய்யப்பட்டார். (த - 23)

# அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் சர்வதேச தரத்திலான பயிற்சிகள்

## சபாநாயகர் சமல் ராஜபக்ஷ

கொழும்பு, நவ.7

எமது விளையாட்டு வீரர்களுக்கு எதிர்காலத்தில் சர்வதேச தரத்திலான பயிற்சிகள் வழங்கப்படும். விளையாட்டு வீரர்களுக்கு முறையான பயிற்சிகளையும் அவர்களுக்குத் தேவையான



அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தால் எமது வீரர்கள் சர்வதேச ரீதியில் வெற்றிகளைக் குவிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரி வித்தார்.

கண்டி போகம்பரை மைதானத்தில் கடந்த முதலாம் திகதி இரவு 9 மணியளவில் நிறைவடைந்த 36 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் பரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

விளையாட்டு வளர்ச்சிக்கு பயிற்சிகள் மிக முக்கியமானதாகும். சர்வதேச தரத்தினாலான பயிற்றுவிப்பாளர்களால் வழங்கும் பயிற்சிகள் மூலம் எமது வீரர்கள் பல்வேறு வெற்றிகளை பெற்று அதனை நிரூபித்துள்ளனர்.

எனவே எதிர்காலத்தில் சர்வதேச தரத்திலான பயிற்சிகளையும் அவர்களுக்கு முக்கியம் எனக் கருதப்படும் அடிப்படைத் தேவைகளான போசாக்கு மற்றும் இதர தேவைகளையும் வழங்கி எமது விளையாட்டு வீரர்களை முன்னேற்றவுள்ளோம்.

மஹிந்த சிந்தனையில் விளையாட்டுத் துறையை முன்னேற்றுவதாக கூறியுள்ளோம். அதன்படி எதிர்காலத்தில் அதனை செய்யவுள்ளோம். - என்றார்.

## விளையாட்டு அரங்குகளில்

# கோபிநாத்துக்கு 3 பதக்கங்கள்



யாழ்ப்பாணம், நவ.7

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையே அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இவ்வாண்டுக்கான தடகளப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் இரண்டு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

ஆண்கள் பிரிவில் யாழ். பல்கலைக்கழக மாணவன் சி. கோபிநாத் 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் முதலாம் இடத்தையும், 4 x 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் முதலாம் இடத்தையும் வென்று இரு தங்கப்பதக்கங்களையும் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று வெள்ளிப்பதக்கத்தினையும் பெற்றுள்ளார். (த - 23)

# கீர்த்திகாவின் சாதனை பதிவு

வலி.வடக்கு, நவ.7

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் 100 மீற்றர் தடை தாண்டல் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கே. கீர்த்திகாவின் 18 : 5 செக்கன் புதிய சாதனையாக பதிவு செய்யப்படவுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைப்பட்டியலைத் தயாரிக்க நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

இதனடிப்படையில் 2007ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ரி. செபமலர் 20 : 0 செக்கன்களிலும், 2009 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பி. மயூரி 19.6 செக் கன்களிலும், 2010ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கே.கீர்த்திகா 18: 5 செக்கன்களிலும் ஓடிய பெறுபேறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த பெறுபேறுகளின் அடிப்படையில் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் 100 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் கே. கீர்த்திகாவின் 18 : 5 செக்கன் புதிய சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (த - 86)

# சம்பியனானது சென். பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், நவ.7

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி அணியை 171 ஓட்டங்களால் வெற்றி கொண்டு சம்பியனானது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.

யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்ட 17 வயது பிரிவினருக்கான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த வாரம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 240 ஓட்டங்களைப் பெற்றது.

வி.குகபாலா 49 ஓட்டங்களையும், எ. கவாஸ்கர் 44 ஓட்டங்களையும், ஜே. கிளிங்ரன் ஆட்டம் இழக்காமல் 37 ஓட்டங்களையும் எ.எம். நோபேட் ஆட்டம் இழக்காமல் 25 ஓட்டங்களையும், டபிள்யூ. சி. எல். லிவிங்ஸ்ரன் 17 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஹாட்லிக் கல்லூரி அணியைச் சேர்ந்த ரி.திவாஷ் 7 ஓவர்கள் பந்துவீசி 54 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

241 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய ஹாட்லிக் கல்லூரி அணி 24 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 59 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் அதிக பட்ச ஓட்டமாக ஹாட்லிக் கல்லூரி அணி வீரன் ஜே. சாகித்யன் 11 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த எ.எம். நோபேட் 9 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களையும், எ. கவாஸ்கர் 7 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் எ. கவாஸ்கர் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் வி. குகபாலா தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த பந்துவீச்சாளராக, சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் எ.எம். நோபேட் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த கள தடுப்பாளராக ஹாட்லிக் கல்லூரி அணி வீரன் எ.நீலவண்ணன் தெரிவானார். (த - 23)



சுண்டுக்குளி கிறின்பீல்ட் சனசமூக நிலையத்தின் 52ஆவது ஆண்டு நிறைவை யொட்டி இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில் பலூன் உடைத்தல் போட்டியில் சிறுவர்கள் ஈடுபட்டிருப்பதையும், ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி நிகழ்வில் பங்குகொண்ட வீரர் களையும் படத்தில் காணலாம்.

(படங்கள்:- தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ச்சிப் பாதையில் ஆஸ்திரேலிய அணி!

## ஊடகங்கள் கடும் விமர்சனம்

மெல்போர்ன், நவ. 7

அதிக பணம் மற்றும் மதிப்பின் காரணமாக, ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீழ்ச்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கி உள்ளது என ஆஸ்திரேலிய ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

சமீபகாலமாக ஆஸ்திரேலிய அணியின் செயற்பாடுகள் படுசொதப்பலாக அமைந்துள்ளது. டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் 5 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. சமீபத்தில் விளையாடிய 7 சர்வதேச போட்டிகளில் தோல்வி அடைந்துள்ளது. இந்த மாதம் இறுதியில் வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில், இங்கிலாந்துக்கு எதிராக விளையாட உள்ள நிலையில், அடுத்தடுத்த தோல்விகள் ஆஸ்திரேலியாவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது.

இது குறித்து ஆஸ்திரேலிய ஊடகங்கள் கடுமையாக சாடியுள்ளன. ஏன் ஆஸ்திரேலிய அணி நெருக்கடியில் உள்ளது என்ற தலைப்பில் ''டெய்லி டெலிகிராப்'' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி: ஆஸ்திரேலிய அணி வீரர்கள் தற்போது அதிகப்படியான பணம் சம்பாதிக்கிறார்கள். அணியில் இடம் பெற்றுள்ள வீரர்களில் குறைந்தது 6 பேராவது, ஆண்டுக்கு 5 கோடி ரூபா வரை சம்பாதிக்கிறார்கள். மைக்கேல் ஹசி, நார்த் போன்ற வீரர்கள் குறைந்தது 10 ஆண்டுகள் முதல்தர போட்டிகளில் விளையாடிய பின், சர்வதேச அணியில் இடம் பிடித்தனர். தற்போது அணியில் இடம் பெற்ற வீரர்களில் பலர், முதல் தர போட்டிகளில் போதிய அனுபவம் இல்லாதவர்கள். இவர்களுக்கு விரைவில் சர்வதேச போட்டிகளில் விளையாடும் வாய்ப்பு கிடைத்து விட்டது. இதனால் 3 அல்லது 4 போட்டிகளில் விளையாடினால், ஆஸ்திரேலிய அணியில் இடம் பெற்று விடலாம் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. இதனால் தங்களது மதிப்பு உயர்ந்து விட்டதாக, அவர்கள் கருதி விடுகின்றனர். இவை எல்லாம் சேர்ந்து ஒட்டுமொத்தமாக ஆட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. ஆஸ்திரேலிய அணி தன் நம்பிக்கையை தற்போது இழந்து விட்டது. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



''தி ஏஜ்'' பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தி: முந்தைய சாதனைகளை மனதில் வைத்துக் கொண்டு, அதே நினைப்பில் உள்ளது ஆஸ்திரேலியா. தற்போது அணிக்கு ஏற்பட்ட பின்னடைவை சரி செய்ய தவறி வருகிறது.

இது தொடர்ந்தால், கிரிக்கெட் மீதான மக்களின் ஈர்ப்பு குறைந்து விடும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெர்ஷெல் கிப்ஸ் மீது வழக்கு

ஜோஹன்னஸ்பேர்க், நவ. 7

[illegible] கிரிக்கெட் வீரர் ஹெர்ஷெல் கிப்ஸ் மீது வழக்குத் தொடர தென்னாபிரிக்க வீரர்கள் முடிவு செய்துள்ளனர்.



சமீபத்தில் கிப்ஸ் தனது சுய சரிதைப் புத்தகமான 'டு திபோலன்த்' புத்தகத்தை வெளியிட்டுள்ளார். இதில் சர்ச்சைக்குரிய வகையில் பல தகவல்கள் உள்ளன. மேலும் தென்னாபிரிக்க வீரர்களைப் பாதிக்கும் விதத்தில் புத்தகத்தில் தகவல்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள்சங்கத்தின் தலைமைச் செயல் அதிகாரி மோனி ஜரிஷ் கூறியதாவது:

சக வீரர்களைப் பற்றிசர்ச்சைக் குரிய வகையில் புத்தகத்தில் எழுதுவதற்கு கிப்ஸ்க்கு உரிமை யில்லை.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சங்க ஒப்பந்தத்தின்படி விளையாடும் வீரர்தான் அவர். இதுதொடர்பாகத் தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரியத்தில் புகார்செய்துள்ளேன். சங்கத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஜெரால்ட் மஜோலா இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பார் - என்றார் அவர். (த)

# ஆசிய விளையாட்டு விழாவில் மழையைத் தடுக்க சீனா திட்டம்

பீஜிங், நவ. 7

ஆசிய விளையாட்டு ஆரம்ப விழாவில் மழை குறுக்கிடாமல் இருக்க, சீனா அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. விமானங்கள் மூலம் இரசாயனங்களை தூவி, மேகங்களை கலைந்து போகச் செய்ய திட்டமிட்டுள்ளது.

சீனாவின் குவாங்சு நகரில் (நவ. 12ஆம் திகதி முதல் 27 திகதிவரை) ஆசிய விளையாட்டு போட்டி நடக்க உள்ளது. இதில், 45 நாடுகளைச் சேர்ந்த 11,700 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். இந்தியா சார்பில் 609 பேர் கொண்ட ''மெகா'' குழு பங்கேற்கிறது. வரும் 12ஆம் திகதி நடக்க உள்ள ஆரம்ப விழாவின் போது மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக, வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இதனைத் தடுக்க ரொக்கெட்டுகளை ஏவுதல், விமானங்கள் மூலம் மேகக் கூட்டங்களின் மீது ரசாயனங்களை தூவுதல் உட்பட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.




இது குறித்து குவாங்சு மாகாணத்தின் வானிலை ஆய்வு மைய தலைவர் யு யாங் கூறியது:

கடந்த 2008இல் பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப விழாவின் போது மழை ஆபத்து இருந்தது. அப்போது விழா நடக்க இருந்த ''பேர்ட்ஸ் நெஸ்ட்'' மைதானத்தை சுற்றி காணப்பட்ட மேகக் கூட்டத்தை கலைக்க, வானில் 1, 100 முறை ரொக்கெட்டுகள் ஏவப்பட்டன. இதே போன்ற ஏற்பாடுகளை ஆசிய விளையாட்டுக்கும் செய்துள்ளோம். மேகங்களைக் கலைந்து போகச் செய்வதற்கான இரசாயனங்கள் அடங்கிய 5 விமானங்களை தயார் நிலையில் வைத்துள்ளோம். மேகங்களை வேறு பக்கம் திசை திருப்ப ஏதுவாக ரொக்கெட்டுகளும் ஏவப்படலாம். இதற்காக ரொக்கெட்டுகளும் தயாராக இருக்கின்றன.

- இவ்வாறு யு யாங் கூறினார்.

## பார்திவ் பட்டேல் வீட்டில் தீபாவளி

அகமதாபாத், நவ. 7

தங்கள் வீடுகளை விட்டு தொலைவில் இருக்கும் இந்திய கிரிக்கெட் அணியின் அணியினர், தங்கள் குடும்பத்தாருடன் தீபாவளி கொண்டாட இயலாத நிலையில், குஜராத் ரஞ்சித் அணியின் கப்டன் பார்திவ் பட்டேல் வீட்டில் தீபாவளியைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்திய அணி கப்டன் தோனி, செவாக், சச்சின், சுரேஷ் ரெய்னா, லக்ஷ்மன் உள்ளிட்ட வீரர்கள் பார்திவ் பட்டேல் வீட்டுக்கு வந்தனர். பார்திவ் வீட்டு மொட்டை மாடிக்குச் சென்று மிக உற்சாகமாக பட்டாசுகளைக் கொளுத்தி தீபாவளி கொண்டாடினர்.

கடந்த 2 வருடங்களாக பார்திவ் படேல் இந்திய அணியில் நிலையான இடத்தைப் பிடிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார். தற்போது அவர் குஜராத் ரஞ்சி அணியின் கப்டனாக உள்ளார்.

இந்தியா வந்துள்ள நியூசிலாந்து அணி வீரர்களும் தீபாவளி உற்சாகத்தை வெளிப்படுத்தினர். அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் பட்டாசுகளை வெடித்து மகிழ்ந்தனர். நியூசிலாந்து வீரர்களுடன் இந்தியா வந்துள்ள அவர்களின் மனைவி குழந்தைகளையும் தீபாவளி உற்சாகம் தொற்றிக் கொண்டது. இனிப்புகளை உண்டும் மத்தாப்புக் கொளுத்தியும் தீபாவளிப் பண்டிகை உற்சாகத்தை வெளிப்படுத்தினர். (த)



# கர்நாடக கிரிக்கெட் தேர்தலில் கும்ளே!

பெங்களூர், நவ. 7

கர்நாடக கிரிக் கெட் சங்கத் தலைவர் தேர்தலில் அனில் கும்ளே போட்டியிட இருப்பது, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவரது வருகை, கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசியல்வாதிகளின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கர்நாடக கிரிக்கெட் சங்கத் தலைவராக தற்போது மைசூர் மன்னரும் அரசியல் பிரமுகருமான ஸ்ரீகாந்ததத்தா உடையார் உள்ளார். செயலராக முன்னாள் வீரர் பிரிஜேஷ் படேல் இருக்கிறார். இவர்கள், தனித்தனி குழுக்களாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த நிழலில் புதிய நிர்வாகிகளுக்கான தேர்தல் வரும் 21ஆம் திகதி நடக்கிறது. இதில், உடையார் செல்வாக்கை முறியடிக்க பிரிஜேஷ் படேல் திட்டமிட்டுள்ளார். இதையடுத்து கர்நாடகாவை சேர்ந்த மும்மூர்த்திகளான கும்ளே, வெங்கடேஷ் பிரசாத், ஸ்ரீநாத் ஆகியோரை களமிறக்குகிறார். இம்முறை பிரிஜேஷ் போட்டியிடவில்லை.

இந்திய அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவான் கும்ளே, தலைவர் பதவிக்கு போட்டியிடுகிறார். துணை தலைவர் பதவிக்கு வெங்கடேஷ் பிரசாத் மற்றும் செயலர் பொறுப்புக்கு ஸ்ரீநாத் போட்டியிடுகின்றனர். மற்றொரு கர்நாடக வீரரான டிராவிட் தற்போது விளையாடி கொண்டிருக்கிறார். இவருக்கும் நிர்வர்கத்தில் வாய்ப்பு அளிக்கப்படும் எனத் தெரிகிறது. கடந்த முறை நடந்த தேர்தலில் முன்னாள் வீரரான குண்டப்பா விஸ்வநாத்தை, உடையார் வீழ்த்தினார். எனவே, இவரைக் சமாளிப்பது எளிதான காரியம் அல்ல.

தற்போது தேசிய கிரிக்கெட் அகாடமியின் தலைவராக கும்ளே உள்ளார். இதே போல ஐ.சி.சி., ''மேட்ச் ரெப்ரி''யாக ஸ்ரீநாத் உள்ளார். இப்படி முக்கிய பணிகளில் இருக்கும் போது, கர்நாடக கிரிக்கெட்டின் முன்னேற்றத்துக்கு இவர்களால் போதிய நேரம் ஒதுக்க முடியாது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## அருளீஸ்வரன் நர்சுதன்

(ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

ஆயிரம் பேர் துயரில் மூழ்கினோம்
நீ ஒருவன் நீரில் மூழ்கியதால்
வாழும் போதே சிலர் இறந்து போகின்றனர்
நீ இறந்தும் நம்மில் வாழ்ந்து கொண்டிருப்பாய்...

அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நண்பர்கள் :
இளங்கோ, செந்தூரன், செந்தூரன் (கான்டா), நவநீதன்.

# கண்ணீர் அஞ்சலி



## அருளீஸ்வரன் நர்சுதன்

(ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக 3ம் வருட முகாமைத்துவ பீடம்)

கண் கலங்குகிறதே
காற்று வீச மறுக்கிறதே
உன் மறைவுச் செய்திகேட்டு...
நெஞ்சு வெடிக்கிறது
நேற்று வரை வாழ்ந்த
வாழ்க்கை இன்று
பாரை விட்டுப் போனதேனோ ?
கதறியழும் உன் உறவுகள்...
கண்ணீருடன் உன் நண்பர்கள்...
பிரிய முடியவில்லை...
பிரிந்து நீ போனதேனோ ?

யா/சென். ஜோன்ஸ் கல்லூரி
2007ஆம் ஆண்டு A/L மாணவர்கள் (வர்த்தகப் பிரிவு)

# மரண அறிவித்தல்

## அருளம்பலம் நவரத்தினம்



**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் நவரத்தினம் நேற்று (06.11.2010) சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும் கைதடி மேற்கு காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா, தம்பதியரின் மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும், முகுந்தன், அயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமித்திராவின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சதாசிவம், தர்மதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவராசா, தியாகேஸ்வரன், நித்தியானந்தன், ஆகியோரின் மைத்துனரும் நிஷ்மிதாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2010) ஞாயிறு பி.ப 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு. (105699)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## யாழ். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைநிறுத்தப்பட்டுள்ளன. அது நிறைவு பெற்றதும் இரண்டாம் கட்டமாக யாழ். காங்கேசன்துறை வீதியை அகலமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

காங்கேசன்துறை வீதியை அகலமாக்குவதற்கான தொடக்கப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. அகலிப்புப் பணியை அடுத்த மாத இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம் - என்றார் அவர். (ஒ-ஐ)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி செயலகத்தின் இந்தக் கோரிக்கையை அடுத்து, அறிக்கையைத் தயாரிக்கவென குழுவின் செயலாளரால் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை- ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க பலரும் கோரிக்கை விடுத்து வருவதால் ஆணைக்குழுவின் கால எல்லையை மேலும் ஆறு மாத காலத்துக்கு நீடிக்க வேண்டும் என்று ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர்.டி.சில்வா ஜனாதிபதி செயலகத்தைக் கேட்டுள்ளார். ஆனால், நீடிப்புத் தொடர்பான உத்தியோகபூர்வமான தகவல் நேற்றுமுன்தினம் வரை கிடைக்கவில்லை.

எனினும் அது தொடர்பான சாதகமான முடிவு நாளை வெளிவரலாம் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-ஐ)


### விற்பனைக்கு

தெல்லிப்பழை துர்க்காபுரம் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு அருகில் 5 பரப்புக் காணியும் கிணற்றுடன் கூடிய வீடு, வளவும் விற்பனைக்கு உண்டு. விலை 16 லட்சம்
விவரங்களுக்கு- 0718414614

### வீடு வாடகைக்குண்டு

யாழ். மானிப்பாய் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய 04 அறைகளுடனான வீடு வாடகைக்குண்டு. முற்பணம் எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு: 021-3211033, 0775530703, 0770723171.

### வீடு தேவை

- மூன்று அறைகள் கொண்ட சிறிய வீடு (குடி தண்ணீர் அடிப்படை வசதிகள் கொண்ட) யாழ். நகரில் இருந்து 4-5 Km தூரத்திற்குள் உடன் தேவைப்படுகின்றது.
தொடர்பு:-0772004484, 0773609671.

### திருமண சேவை

15 வருட திருமண சேவை நிறைவினை முன்னிட்டு வேல் அமுதன் பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு! விவரங்களை "சுயதெரிவு முறை முன்னோடி" சர்வதேச, மூத்த திருமண ஆற்றுப்படுத்துநர் வேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்புகொண்டு விசாரித்தறிக!
தொலைபேசி: 0112560488, 0112360694, 0114873929

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ் நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ். பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் தனி வீடு, நன்னீர் தனிக் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0783251872

### விற்பனைக்கு

நல்லூர், நாவலர் வீதிக்கு அண்மையில் 3½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு:- 0789136878

### பளையில் காணி விற்பனைக்கு

பளைச் சந்தியிலிருந்து 100m இற்குள் A-9 வீதியில் 47 பரப்புக் காணி விறபனைக்கு உண்டு.
தொடர்பு :
0778019595, 0723213640

### காணி வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு அருகில் வெற்றுக்காணி வாடகைக்கு / குத்தகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு- 0776599791.

### வேலையாள் தேவை

சங்கத்தானை, சாவகச்சேரி, A-9 வீதியில் அமைந்துள்ள ரமேஸ் அச்சகத்திற்கு கணினி Type Setting தெரிந்தவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0772247422


# மரண அறிவித்தல்கள்

## தியாகராஜா செல்வராஜா



யாழ்ப்பாணம், நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா செல்வராஜா 02.11.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - சின்னத்தங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - ஞானகி தம்பதியரின் அன்பு மருமகனும் பரிபூரணியின் அன்புக் கணவரும் பிரியாந்தினி (கனடா), நிலாந்தினி (கனடா), கஜாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கராஜா (முருகன் மோட்டோர்ஸ்), தர்மராஜா, விக்னராஜா, லிங்கராஜா (கனடா), பத்மராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் விவேகானந்தன் (கனடா), ஜீவரூபன் (கனடா), ரவிசங்கர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஷ்ணுதன், விதுஷன், பிரவீனா, அர்ஜீன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 286, நீர்கொழும்பு வீதி, வத்தளை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 03.11.2010 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் கெரவலபிட்டிய இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேச் றோட்,*
*வத்தளை.*
*0712516236* (105686)

*தகவல் :*
குடும்பத்தினர், சகோதரர்கள்.

## அம்பலவாணர் சதாசிவம் (சத்தியவான்)

**(முன்னைநாள் இயந்திரப் பொறியியலாளர், சீநோர், மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க உறுப்பினர்)**



சண்டிலிப்பாய், சீரணியைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சதாசிவம் (சத்தியவான்) நேற்று (06.11.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும், வாலமனோன்மணியின் அன்புக் கணவரும், சதானந்தி (தாதிய போதனாசிரியர், தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்), சதானந்தன் (ஆசிரியர், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), சதாரூபி (பிரான்ஸ்), சதாரூபன் (தாதிய மாணவன், 3ஆம் வருடம் - 2007) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தகுமார் (வைத்திய அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), கிருபாகரன் (பிரான்ஸ்), சிவசுகந்தினி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், வேலணை) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், சோதி மற்றும் இராசலட்சுமி (இந்தியா), ஞானலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தரண்யா, ரிசோபனா, சிவசுதன் (பிரான்ஸ்), கீதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி தெற்கு, கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'றங்கூன் இல்லம் ,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (105687)

*தகவல் :*
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி கந்தையா இராசபூபதி



சண்டிலிப்பாய் வீதி, பண்டத் தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி கந்தையா இராசபூபதி நேற்று (06-10-2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையாவின் அன்பு மனைவியும், பூவிராசா (கொழும்பு), காலஞ்சென்ற பூபாலராசா மற்றும் திருமதி தங்கபூபதி, சண்முகநாதன், காலஞ்சென்ற அருமைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரசோதி, ஜெயகுலசிங்கம் (றஞ்சன் ஹாட் வெயர்ஸ், மானிப்பாய்), ஜெகசோதி, ஜெயபாலசிங்கம், ஜெயவேல்முருகன், விஜயசோதி (கனடா), ஜெயச்சந்திரன், ரவிச்சந்திரன், உதயசந்திரன், வினோதசந்திரன், நிமலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் ஆனந்தராணி, சண்முகம், ஜறின், விஜயமாலா, ராஜேந்திரன், பாமதி, சிறீவதனி, சிவசுதா, சுபாஷினி ஆகியோரின் அருமை மாமியாரும், பிரியதர்சினி, ராஜதர்சினி, காலஞ்சென்ற சிவதர்சினி மற்றும் விஜயதர்சினி, ஜனந்தன், டிசாந்தன், நிறோஜா, நித்திகா, நிறஞ்சி, தாரணி, தனுசன், ரவிதர்ஷன், ஜெறூஷன், டிதுர்ஷன், கோகிலன், அபிநயன், சேசாந்த், நிதுஷா, நிதுஷன் ஆகியோரின் பேர்த்தியும், பிரவீன், யதுஷி, அர்ச்சயா, ஆர்த்தியா, அட்சரா ஆகியோரின் பூட்டியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (8-11-2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*சண்டிலிப்பாய்வீதி,*
*பண்டத்தரிப்பு.* (சி/572725)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்
**கனகசபாபதி செல்லம்மா**

கடந்த 09.10.2010 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் தெணியம் மன் ஆலய மடத்திலும் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (08.11.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்திலும் நடைபெறும்.

திங்கட்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

'ராசா பேக்கரி'
வதிரி, கரவெட்டி. (104478)

குடும்பத்தினர்.
021 226 4296

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மகிழ: 12.06.1919
சேய் நெகிழ: 12.11.2007

**திருமதி செல்லத்துரை தங்கம்மா**

திதி: துதியை

ஆண்டு மூன்று வந்தது அம்மா
அகலவில்லை உன் நினைவு
போதனைகள் பல புகன்றீரே அம்மா!
சாதனைகளைப் படைக்கவில்லையே
வேதனையால் வெந்துளம் சாய்கின்றேன் அம்மா!
நின் ஆன்மா சாந்திபெற வல்ல சக்தி ஸ்ரீ கண்ணகா ராஜராஜேஸ்வரி அம்பாளை நிதம் வேண்டுகின்றேன்.

வண்-வடமேற்கு,
ஆனைக்கோட்டை.

நின் பிரிவால் துயருறும்:
நின் சேய் எஸ்.பவானி (ஆசிரியை)

## தசாக கிருஹ யக்ஞ அழைப்பு

கடந்த (30.10.2010) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

**பிரம்மஸ்ரீ. விஸ்வநாத ஐயர்**
**சுப்பிரமணிய ஐயர்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

08.11.2010 திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு தசாகம்
.11.2010 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு ஏகோத்திஷ்டம், மாசியம்
10.11.2010 புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு சபிண்டீகரணம்
11.11.2010 வியாழன் காலை 8 மணிக்கு (கிருஹயக்ஞம்) வீட்டுக்கிருத்தியம்
நண்பகல் 12 மணிக்கு சமாராதனை (மதியபோசனம்)

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் சமாராதனையிலும் கலந்த கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

3ஆம் கட்டை,
வாசிகசாலை வீதி,
கல்வியங்காடு. (105698)

பிள்ளைகள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்

**கிறிஸ்தோப்பர் சின்னையா**
**அந்தோனிப்பிள்ளை**

(கீன்ஸ், முன்னாள் முகாமையாளர் -
யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஸ்ருடியோ )

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி பிளச்சர்ஸ் லேனைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலை நிரந்தர வதிவிடமாகவும், வவுனியா பூவரசங்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் சின்னையா அந்தோனிப்பிள்ளை நேற்று (06.11.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற மருத்துவமாது திருமதி டெய்சி அந்தோனிப்பிள்ளையின் அன்புக் கணவரும் அன்ரன் அன்பழகன் (ஆசிரியர்), காலஞ்சென்ற அன்ரனிற்றா தயாநிதி, திருமதி யூடிஸ் திருசா தவனேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பரமேஸ்வரி அன்பழகன் (ஆசிரியர், பளை மத்திய கல்லூரி), தவனேசன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 06.11.2010 மு.ப. 10 மணிக்கு பூவரசங்குளத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூவரசங்குளம்,
வவுனியா. (சி-572714)

தகவல்: அ. அன்ரன் அன்பழகன்
(ஆசிரியர்)

## யாழ்ப்பாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகக்கடக்கும்போது வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு பிரதேசங்களில் இடி மின்னலுடன் கூடிய கடும் மழை பெய்யும்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, அனுராதபுரம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் இடிமுழக்கத்துடன் கடும் மழை பெய்யும். நுவரெலியா, கண்டி, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்யும்.

வடக்கு, கிழக்கில் கடல் கொந்தளிப்பாக இருக்கும். வடமேற்கு அல்லது மேற்கில் இருந்து கடும் காற்று வீசும். அதன் வேகம் மணிக்கு 30 முதல் 50 கிலோ மீற்றராக இருக்கும். இது 60 கிலோ மீற்றர் வரைக்கும் அதிகரிக்கவும் கூடும் - என்றுள்ளது.

நேற்றிரவு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் 'ஜல்' புயல் இந்தியா நோக்கி மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. நண்பகல் இருந்ததைவிட அதன் வேகம் தணிந்து காணப்பட்டதால் அதனால் இலங்கையின் கரையோரங்களுக்கு ஆபத்து ஏற்படும் சாத்தியங்கள் குறைந்திருந்ததாக வானிலை ஆராய்ச்சி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-ஐ)

## தெற்கு உல்லாச..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துண்டுப் பிரசுரங்களும் தெற்கு உல்லாசப் பயணிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த மாதம் 23 ஆம் திகதி யாழ். நூலகத்தில் தெற்கு உல்லாசப் பயணிகள் அடாவடித் தனத்தில் ஈடுபட்ட சம்பவத்தை அடுத்தே இந்த ஏற்பாடு எனக் கூறப்படுகிறது. (ஒ-ஐ)

## பிரத்தியேகக் கணித வகுப்பு

தரம் 6-11 வரையான வகுப்பு மாணவர்களுக்கு பிரத்தியேக கணித வகுப்பு கற்பிக்கப்படும்.
தொடர்புக்கு:- 0773114443

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வரதராஜக்குருக்கள்**
**அரிகரசர்மா**

பிறப்பு: 20.08.1980
இறப்பு: 14.11.2004

ஆண்டுகள் ஆறு ஆகிவிட்டாலும்
ஆறவில்லையடா! - அரி
நீ எங்கு இருக்கின்றாய்
என்றும் உன் நினைவுடன்

வீரபத்திர கோயில்,
கல்வியங்காடு

குடும்பத்தினர்,
பொ. வரதராஜக்குருக்கள்.

(சி/572727)

## உளம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

**லயன் K.P. ஆனந்த நடேசன்**

(தலைவர், வடமராட்சி லயன்ஸ் கழகம், செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, கிழக்கு மாகாணம்)



வடமராட்சி லயன்ஸ் கழகத் தகைசார் தலைவரே
யாழ்.குடாநாட்டில் தேசத்தின் வங்கி தனில் மாவட்ட
முகாமையாளராய்த்
தயவான சேவையினைத் திறம்படவே செய்தீர்
இன்று கிழ்மாகாணச்
செயற்பாட்டு முகாமையாளராய் உயர்வுற்றீர்
வாழ்த்துகின்றோம்

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர்

(சி-572713)

## விற்பனைக்கு

யாழ். நகரின் மையப்பகுதியில் ஆஸ்பத்திரி வீதியில், கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, K.K.S. வீதியில் கடைகளும் மற்றும் யாழ். ஸ்ரான்லி வீதி குறுக்கு வீதியில் 10 பரப்புக் காணித்துண்டும், யாழ். மின்சார நிலைய வீதியில் 04 பரப்புக்காணித்துண்டு, 03 பரப்புக் காணித்துண்டும் 2½ பரப்புக் காணித்துண்டும், மணிக்கூட்டு வீதி ஆஸ்பத்திரிக்கு முன்பாக 05 பரப்பு, 05½ பரப்புக் காணித்துண்டும் பருத்தித்துறை வீதியில் யாழ். நகருக்கு அண்மையாக 05 பரப்பும், 03 பரப்புக் காணித்துண்டும், யாழ்.வைமன் வீதியில் 3½ பரப்புக்காணியில் அமைந்த வீடும், பிறவுண்வீதியில் 03 பரப்புக்காணியில் அமைந்தவீடும் யாழ். பரமேஸ்வரா சந்திக்கு அண்மையாக சகல வசதிகளுடன் இரண்டு வீடும், திருநெல்வேலி சந்திக்கும் பரமேஸ்வரா சந்திக்கும் இடையில் 24 பரப்புக்காணியும், அராலி அம்மன் கோயிலுக்கு அண்மையாக கடற்கரைக்கு அண்மையாக தரவைக்காணி 160 பரப்பும், வயல் காணி 100 பரப்பும் யாழ். K.K.S.. வீதியில் சிவன்கோவிலுக்கு அண்மையாக 06 பரப்புக் காணித்துண்டு உடன் விற்பனைக்குண்டு.

குறிப்பு:- திருநெல்வேலி இல 187, ஆடியபாதம் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(சட்டத்தரணியால் உறுதிசெய்யப்பட்டுள்ளது)

தொடர்பு-
01) கனகசபை தர்மகுலசிங்கம்
187, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

02) கனகசபை தர்மகுலசிங்கம்
165, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(105680)

## காணியும் வீடும் விற்பனைக்கு

பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் கோயிலுக்கு முன் பாக செல்லும் ஒழுங்கையில் அமைந்துள்ள காணியும், இரண்டு மாடிக் கட்டடத்தில் முதல் தளம் அமைக்கப்பட்டு முற்றுப்பெறாத வீடும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு: 0772008157**

## MAHY BEAUTY PARLOUR

**கிராமக்கோட்டுச் சந்தி, புலோலி.**

Hair Cutting, Straighting, Rebouding, Perming, Eye Brow Threading, Facials (முகத்தோல் பிரச்சினை ஆயுள்வேத முறையில் தீர்த்தல்) அத்துடன் அழகுக்கலை பயிற்சி வகுப்பு, நவீன முறையில் கேக் தயாரித்தல் பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

**தொடர்பு:-0774521392**

(சி/572715)

## ஐடியலின் கண்ணீர்க் காணிக்கை



எமது கல்வி நிறுவனத்தின் கணித பாட ஆசிரியரான திரு. ச.சதானந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**அம்பலவாணர் சதாசிவம்**

அவர்களின் திடீர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அந்தோனியார் கோயிலடி,
மானிப்பாய்.

ஐடியல் அக்கடமி
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறப்பு விழா

நாவற்குழி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாத விழாவும் சிறுவர் பகுதிக்கான கட்டடத் திறப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுவிஸ் அபிவிருத்தி நிலையத்தின் அதிகாரி மாட்டீன் ஸ்ரியூடர் கலந்துகொள்வார். (ஒ-131)


## உரவகைகள்/ விவசாய இரசாயனங்கள் விநியோகஸ்தர்கள் தேவை..



இலங்கையில் உரவகைகளை விநியோகிப்பதில் சிறப்புப் பெற்றுள்ள நிறுவனம் ஒன்று யாழ்ப்பாண மாவட்டத் தில் விநியோகத்தர்களை எதிர்பார்க்கிறது. நீங்கள் உரவகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொ ருள் விற்பனையாளராகவும்/விரிவான வாடிக்கையாளர் வட்டத்தைக் கொண்ட விநியோக வலையமைப்பைக் கொண்டவராகவும் இருப்பீர்களாயின் எங்களுடன் இணைந்து கொள்ளலாம்.

நவம்பர் 9ஆம் திகதி மாலை 4மணிமுதல் 6 மணிவரையும்.
10ஆம் திகதி காலை 9மணிமுதல் மாலை 4 மணிவரையும் எமது பிரதி நிதிகளால் பின்வரும்முகவரியில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
0770704177,
0718687753 (நாதன்)
0714186585 (சமன்)

Landmaark Resort
#247, K.K.S. வீதி,
(குளப்பிட்டி சந்தி)
கொக்குவில், யாழ்ப்பாணம்.


## ஜனவரிக்குப் பின்பே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றிருந்த சமயமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லியிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் தமிழக முதல்வர் மு.கருணாநிதியைச் சந்தித்துப் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தியா வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று தன்னைச் சந்தித்த இலங்கை ஜனாதிபதியிடம் தான் வலியுறுத்தினார் என்றும் சிதம்பரம் கூறினார்.

கோபாலபுரத்தில் உள்ள முதல்வரின் வீட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. மரியாதை நிமித்தம் தான் முதல்வரைச் சந்தித்தார் என சிதம்பரம் தெரிவித்தார்.

கருணாநிதியைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''இலங்கை ஜனாதிபதி புதுடில்லிக்கு வந்திருந்த போது, அவரோடு பேசிய செய்திகளை முதல்வருடன் பரிமாறிக் கொண்டேன். மீளக்குடியமர்ந்த இலங்கைத் தமிழர்கள் 50 ஆயிரம் பேருக்கு வீடுகட்டி தரும் திட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று இலங்கை அதிபரிடம் நாங்கள் வற்புறுத்தியுள்ளோம். மழைக்காலம் முடிந்த பின்னர், வீடு கட்டும் பணிகள் ஆரம்பிக்கும் என்று அதிபர் ராஜபக்ஷ என்னிடம் வாக்குறுதி அளித்தார். அது குறித்தும், பொதுவான விஷயங்கள் குறித்தும் முதல்வருடன் பேசினேன்.''- என்றார்.

## மெனிக்பாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தினர். இதைக் கேட்டு அழுது குளறிய மக்கள், வசதி குறைந்த கதிர்காமர் முகாமுக்குத் தங்களை அனுப்ப வேண்டாம் என்று அரச அதிபரிடமும் படைத் தளபதியிடமும் மன்றாடினார்கள்.

கடந்த வாரம் அங்கு வந்த மீள்குடியமர்வுப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடமும் தாம் இதே கோரிக்கையை முன்வைத்திருந்தனர் என்று முகாம்வாசிகள் தெரிவித்தனர்.

ஆனால், மக்களின் கோரிக்கைகள் புறந்தள்ளப்பட்டன. பொலிஸாரும் படையினரும் பஸ்களைக் கொண்டு வந்து கொட்டும் மழைக்கு மத்தியில் மக்களைப் பலவந்தமாக ஏற்றிச் சென்றனர். 'மெனிக் பாம்' முகாமின் இரு பிரிவுகளில் இருந்த மக்கள் இவ்வாறு நேற்றுக் கொண்டு செல்லப் பட்டனர்.

எஞ்சியுள்ள நான்கு பிரிவுகளில் உள்ளவர்களையும் இன்று கதிர்காமர் முகாமுக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பொதுமக்கள் தமது முழுப் பொருள்களையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று முகாம் மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (ஒ-ஐ)

## தமிழ் மக்களுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக் கிரிக்கெட் அணியில் இடம்பெற்றுள்ளார் முரளி. அந்த மண்ணில் அவர் விளையாடப் போகும் கடைசி சர்வதேசக் கிரிக்கெட் போட்டி இது என்பதால் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

ஆஸ்திரேலியாவில் உள்ள முரளி அங்குள்ள பிரபல பத்திரிகையாளர் ஒருவருக்குப் பேட்டி அளித்துள்ளார். தனது எதிர்காலத் திட்டம் குறித்து அவர் தெரிவித்ததார்.

''2005ஆம் ஆண்டு ஆழிப்பேரலையால் அழிவுகள் ஏற்பட்ட போது நாம் மருந்துகளையும் வைத்திய உதவிகளையும் இலவசமாக வழங்கினோம். பாதிக்கப்பட்ட மக்களுக்காக கிரிக்கெட் மைதானம் மற்றும் பாடசாலைகள் என வசதிகளைக் கொண்ட 1,000 வீட்டுத் தொகுதியையும் அமைத்தோம்.

அதேபோன்று வடக்கிலும் எதிர்காலத்தில் உதவிகளை வழங்க இருக்கின்றேன். முன்பள்ளிகள் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டதாக 300 வீடுகளை உள்ளடக்கிய கிராமம் ஒன்றை உருவாக்கப் போகிறோம். இதற்கென ஜனாதிபதி 50 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளார். இந்தத் திட்டத்தால் 15,000 பேர் வரையில் பயன் பெறுவார்கள்'' - என்றார்.

1977 ஆம் ஆண்டு நடந்த இனக் கலவரத்தில் தனது வீடும் தந்தையாரது தொழிற்சாலையும் தீக்கிரையாக்கப்பட்டதையும் இந்தப் பேட்டியில் முரளி நினைவுபடுத்தினார்.

''எங்களது வீடும் தொழிற்சாலையும் எரிக்கப்பட்டன. அது மிக வேதனை தந்த தருணங்கள். ஆனால், சிங்கள மக்களாலேயே நாங்கள் பாதுகாக்கப்பட்டோம். வெறிகொண்ட மக்கள் எம்மைக் கொல்வதற்கு முன்பாக அவர்கள் வந்து எம்மைக் காப்பாற்றினார்கள். எப்போதும் அதை நாம் மறக்க மாட்டோம். நாங்கள் எல்லாவற்றையும் மீளக்கட்டியெழுப்பினோம். தொடர்ந்து முன்னேறினோம். அதுதான் எங்களது குடும்பத்தின் பாணி. நாங்கள் வர்த்தகர்கள், அரசியல்வாதிகள் அல்லர். எனது தந்தையார் முடிந்தவரைக்கும் எல்லா விடயங்களை யும் சாதாரணமாகவே எடுத்துக் கொள்வார்'' - என்று மேலும் தெரிவித்தார் முரளி.

இலங்கையில் தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் கடினமான காலத்தைக் கடந்துதான் வந்திருக்கிறார்கள் எனவும் அவர் குறிப் பிட்டார். ''பொதுவுடமைவாதிகள் வந்தபோது பெரும் எண்ணிக் கையான சிங்கள மக்கள் கொல்லப்பட்டார்கள்'' -என்றார் அவர். இடது சாரிகள்என அவர்குறிப்பிட்டது ஜே.வி.பியையே எனத் தெரிவிக்கப் படுகிறது. (உ)


### மாடி வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கதீற்றல் வீதியில், சகல, நவீன வசதிகளும் கொண்ட மாடி வீடு, கீழும் மேலுமாகப் பத்து அறைகள், இணைக்கப்பட்ட குளியலறை, குளிரூட்டப்பட்ட இரு அறைகள், கொண்டதாக, ''லொட்ஜாகவோ'' வேறுபாவனைகளுக்கோ உகந்ததாக விற்பனைக்குண்டு - அறிவித்தல் கொடுத்துவிட்டு நேரில் பார்வையிடலாம்.

தொடர்பு :- டாக்டர் அல்பிரட்
தொலைபேசி :- 0773039606, 0774921597

### புதியபிரிவுகள் ஆரம்பம்

Advanced Dip. in Video mixing
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Graphics Design
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes

தனைய கற்கை நெறிகளுக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

முழுமையான கணனிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

### தேவை

யாழ். நகருக்குள் பொருள்களை விற்பனை (Sales) செய்வதற்கு Aluminiyam Bodyயுடன் கூடிய வாகனம் தேவை.
தொடர்பு : 0777294327

### COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY (CHEC)

யாழ். மாணவர்களுக்கு இனிய தீபத்திருநாள் வாழ்த்துக்களை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றது.

STUDY and WORK IN LONDON (U.K.)

January மாத அனுமதிகள்

→ குறைந்த பட்சக் கல்வித்தகைமை G.C.E (O/L) (IELTS கட்டாயமில்லை).
→ மிகக்குறைந்த கட்டணங்களில் கல்லூரி அனுமதிகள் [1,500 $ (பவுண்ட்ஸ்) - LKR 2,70,000].
→ மிகக்குறைந்த கட்டக்கழிவில் SPONSER வசதிகள்.

[High Commisition (U.K) சில நெருக்கலான விதிமுறைகளைக் கொண்டு வருவதன் காரணத்தால் அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும்]

மாணவர்களின் சிறந்த எதிர்காலத்தை நிர்ணயிக்க,

No : 51, Dharmapala mawatha, Colombo - 07, Sri Lanka. (105691)
Tel : 0779265447 (Jaffna - Sisil) 0773858916 (Colombo - Harris)

### மயில் அழகுக்கலை நிலையம்



அழகுக்கலையை பயில விரும்புபவர்களுக்கு
*பேசிக் பயிற்சி [Basic Coruse]
*அட்வான்ஸ் பயிற்சி [Advance Cource]
*டிப்ளோமா பயிற்சி [Diploma Course]

மேலும் பல பயிற்சிகள் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு பயிற்சியும் விளக்கமான செய்முறைகளுடன் இந்திய முறையில் நடைபெறும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சிகள் யாவும் 10.11.2010 புதன்கிழமை 10 மணிக்கு நடைபெறும். அதற்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். வகுப்புகள் உங்கள் தேவைக்கேற்ப நேரம் ஒதுக்கி நடைபெறும்.

இல. 137 தபால்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.p 077 4749101 021 4922023

### லண்டனில் உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு.

No Need IELTS

Bank Sponsorship ஒழுங்குசெய்துதரப்படும்.



West London College,
Ethames Graduate School,
East London College,
Cambridge Ruskin International College போன்ற பிரபலமான UKBA Highly Trusted கல்லூரிகளில் உயர்கல்வி கற்க ஓர் அரியசந்தர்ப்பம்.
சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
January, February Intake இற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

விசாவிற்கு 100 % உத்தரவாதம்.

கடந்த வாரத்திலும் எமது மாணவர்கள் பலர் விசாக்களைப் பெற்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
அனைத்துச் சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

SM Consultant services
148, கோவில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.
Mobile: 0774528818, Tel: 0215673818, Fax: 0212223818.
E-mail: mg1404_2009@yahoo.com

### சாரதி தேவை

அனுபவமுள்ள வாகன சாரதி உடன் தேவை. திருமணமாகாத கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் மாதாந்தச் சம்பளம் 15,000/=வும் தங்குமிட வசதியும் உணவும் வழங்கப்படும்.
தொடர்பு : 0779845884, 0113158360

### கணனிக்கற்கை நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| பிரிவு 01 | 07.11.2010 |
| பிரிவு 02 | 08.11.2010 |

இக்கல்வியாண்டுக்குரிய இறுதிப்பிரிவுகள் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
இயக்குனர், IIS
#100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2831, 021 4922741


## மரண அறிவித்தல்

### திருமதி கதிரவேலு பொன்னாச்சி (தேவி)



கைதடி, நாவற்குழி, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு பொன்னாச்சி 02.11.2010 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் செல்லையா - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் சுப்பு - பருவதம் தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்பு கதிரவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரஜனி மற்றும் ரகுலகரன், றஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், நவீனின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் நாகம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி வீ.முத்து, சு.கந்தையா, காலஞ்சென்றவர்களான கந்தையா, நவரத்தினம் மற்றும் சிவயோகசெல்வம் ஆகியோரின் மைத்துநரும், தர்மலிங்கம் மலர், ரஞ்சன், சின்னம்மி, காலஞ்சென்ற குணேஸ், சிறி, நந்தகுமார், பாபு, விஜி, ரூபன் ஆகியோரின் சித்தியும், ராதிகா, ராகுலன் ஆகியோரின் பெரியம்மாவும் நிஸ்மிதன், தயூரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொல்லங்கிராய் காந்தாரம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி நாவற்குழி, கைதடி. (105659)
தகவல் : அ.கதிரவேலு (கணவர்) (0779072467)
திருமதி றஜிதா நவீன் (மகள்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RanHomes

## 2010 கௌரவ விருது

யாழ்ப்பாணத்தில் புதிய கிளை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



சுவர்ண லங்கா - ஷ்றாம்பிமானி

வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின்

## சிறந்த தெரிவுகள்

உங்களது சொந்த நிலத்திலேயே நாம் வீடுகள் அமைப்போம்



## எமது திட்டங்கள்

ஜா-எல, மஹாற
எக்கல, சீதுவ
கந்தானை, வென்னப்புவ
கொட்டுகொட, களனி



Swarna Lanka Award



Shramabhimani Award

## எமது சேவைகள்

★கடந்த 15 வருடங்களாக அரச, தனியார் வங்கிகள் மூலம் கடன் வசதிகள் ஒழுங்குசெய்து கொடுக்கின்றோம்.


★வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் இலங்கைக்கு வராமலேயே கடன் பெற்றுக்கொள்ள உதவுதல்.

★தரத்தில் சிறந்த பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்களின் மேற்பார்வை

★உங்கள் சொந்த நிலத்திற்குக் கட்டணம் எதுவுமின்றி வருகைதந்து விவரங்களைத் தருதல்



HOUSE TYPE - OVG



HOUSE TYPE - UV



HOUSE TYPE - SB2



HOUSE TYPE - UH



HOUSE TYPE - UJ

போயா, ஞாயிறு தினங்கள் உட்பட ஒவ்வொரு நாளும் திறந்திருக்கும். நீங்கள் விரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும் தொடர்புகொள்ளுங்கள்



HOUSE TYPE - SE



HOUSE TYPE - UI

நீங்கள் விரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும்...
தொடர்புகொள்ளுங்கள்

**0773763122 / 0772646637**

## Ranasingha Homes (Pvt) Ltd.

No 9/2 A Perera Mawatha, Ja-ela. Fax: 011-4 831 787 E-mail: ranhomes@sltnet.lk Web: www.ranhomes.com
Branch Office :No 841,Hospital Road,Chundikuli,jaffna TP/Fax: 021-2220400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பின் உருவமான

MRF

மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி டயர்கள்

இப்பொழுது

யாழ்ப்பாணத்தில்!




சாதாரண டயரை விட
3 மடங்கு தூரம்!

பலமான கட்டமைப்பு

உயர் தரம் கொண்ட மூலப்பொருள்

சிறந்த பதிப்பு

உயர்ந்த பட்ச பாதுகாப்பு

முச்சக்கர வண்டிக்கு மற்றும் மோட்டார் சைக்கிளுக்கு சிறந்த [illegible]

யாழ்ப்பாணம் மற்றும் நாடு பூராகவும் உள்ள அங்கீகாரம் பெற்ற அசல் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் முகவர்கள் மற்றும் MRF முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் டயர் விற்பனை முகவர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

நிறுவன பதிவு இலக்கம்: PB270

த.பெ. 1909,75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600

# பருக்களின் வடுக்களை போக்க முடியுமா?

பருக்கள் வருவதை விட, அவை விட்டுச் செல்லும் வடுக்கள்தான் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பருக்கள் வராமல் தடுக்கவும், பரு வடுவைப் போக்கவும் வழி உள்ளதா?

பருக்கள் வந்ததால் முகத்தில் இருக்கும் ஓரிரு வடுக்களை நிச்சயமாக போக்க முடியும். முதலில் வடுக்கள் ஏன் ஏற்படுகின்றன என்றால், முகப்பரு வந்ததும் அதனை நகத்தால் கீறுகிறார்கள்.

நகம் பட்டாலே வடு விழுந்துவிடும். அதனை உடனடியாகப் போக்க முடியாது. சிறிது காலம் பிடிக்கும். சிலருக்கு பருக்கள் வந்து முகத்தில் சிறிய பள்ளங்களே ஏற்பட்டிருக்கும்.



முகப்பரு வந்தால் அதனை நீக்குவதற்கு முன்பு, ஐஸ் கட்டிகளால் ஒத்தனம் கொடுத்த பிறகு அதில் கைவைப்பது நல்லது. இதனால் பருக்களின் வழியாக இரத்தம் வெளியாவது தவிர்க்கப்படுகிறது. பொதுவாக பருக்கள் வந்தால் அது முற்றிய நிலையில் அதில் இருக்கும் வெள்ளையான திரவத்தை எடுத்துவிடுவது மிகவும் முக்கியம். அதிலும் மற்ற இடங்களில் அவை படாமல் எடுக்க வேண்டியதும் அவசியமாகிறது.

மேலும், பருவை நீக்குவது என்பதை கவனமாக செய்ய வேண்டும். பருவை கைகளால் கிள்ளி எடுத்துவிடுகிறோம். அதில் இருந்து வெள்ளையான திரவம் வெளியான பிறகு இரத்தம் வரும். அதனை துடைத்துப் போட்டுவிட்டு அப்படியே விட்டுவிடக் கூடாது. அப்படி விட்டுவிட்டால் தான் பருக்கள் பரவுகிறது.

பருக்கள் வந்தால் அதனை நீக்கியதும் உடனடியாக அதனைச் சுத்தப்படுத்திவிட்டு அதில் ஏதாவது ஒரு முகப்பூச்சைப் (க்ரீம்) போட வேண்டும். அப்படி போடாவிட்டால், பருவில் ஏற்பட்ட துளைக்குள் தூசு, துகள்கள் போய் பெரிய பிரச்சினையாகி விடும்.

முகப்பரு வந்தவர்கள் அதிலும், அதிகமாக முகப்பருவினால் பாதிக்கப்படுபவர்கள் தங்களது முகத்தை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். பருக்கள் வருபவர்கள் எந்த விதமான பூச்சுக்களையும் பயன்படுத்தக் கூடாது. சிலரது முகத்தில் விரலைக் கூட வைக்க முடியாது. அந்த அளவிற்கு வலி எடுக்கும். அவர்கள் அழகுக் கலை நிபுணரிடம் செல்வதை விட, ஒரு தோல் மருத்துவரிடம் செல்வதுதான் நல்லது.

அழகுக் கலை நிபுணரால் எல்லாமே செய்ய முடியாது. எனவே; அவர்களுக்கு அடிப்படையில் என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை மருத்துவர் மூலம் அறிந்து கொண்டு அதற்கு முதலில் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

பருவை மட்டும் நீக்கிவிட்டாலும், உள்ளூர்க்குள் இருந்து சீழ் போன்ற ஒன்று வந்து கொண்டே இருக்கும். அதனை எவ்வளவுதான் எடுக்க முடியும். ஒரு வேளை அது சருமத்திற்கு அடியிலேயே தங்கிவிட்டாலும் பிரச்சினையாகிவிடும். அதிகமாக எடுத்தாலும் பரு இருந்த இடத்தில் வடு ஏற்பட்டுவிடும். எனவே பருவை அழகுக் கலை நிபுணரிடம் சென்று நீக்கிக் கொள்வதை விட, அதிகமாக பரு இருப்பவர்கள் ஒரு மருத்துவரிடம் செல்வதுதான் நல்லது.

பருக்களினால் ஏற்பட்ட வடு நிச்சயமாக போகும். அதற்கு ஒரு நீண்ட சிகிச்சை உள்ளது. முதலில் பரு உள்ளவர்கள் பேஷியல் செய்து கொள்ளவே கூடாது. ஏன் அப்படிக் கூறுகிறேன் என்றால், பரு வருகிறது என்றால் அவர்களது சருமத்தில் அதிகப்படியான எண்ணெய்ப் பசை உள்ளது. மேலும், பேஷியலின் போது பயன்படுத்தும் முகப்பூச்சுக்கள் அனைத்திலும் அதிகப்படியான எண்ணெய் பசைதான் இருக்கும். எனவே அவர்களது சருமத்தை பேஷியல் மேலும் சிக்கலாக்கும்.

முகத்தில் அதிகமான பருக்கள் இருப்பவர்கள் அவசியமாக பேஷியல் செய்தே ஆக வேண்டும் என்று நினைத்தால் முதலில் ஒரு மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுவிட்டு பிறகு பேஷியல் செய்து கொள்ளலாம்.

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லையா சிவசாமி

(திக்கம் சுருட்டு தொழிலக உரிமையாளர், அல்வாய் மேற்கு, அல்வாய்)

அன்னை மடியில்:
17.02.1929

ஆண்டவன் அடியில்:
21.10.2009

அன்பின் திருவுருமாய், பாசத்தின் முகவரியாய் குடும்பத்தின்
ஒளிவிளக்காய் எங்களை வழிநடத்தி வாழவைத்த தெய்வமே!
அருட்பெரும் சோதியில் ஒன்றரக் கலந்து ஓராண்டு
ஓடி மறைந்தனவே ஐயா! ஓராண்டல்ல நூறாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காது ஐயா! எங்கள் எல்லோருடைய கண்ணீர் பூக்களால்
உங்கள் பாதங்களை அர்ச்சித்து தினமும் இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம் ஐயா!

தகவல்: மகன்மார்
சி.இராசகுமார் இந்தியா, 00919894062492.
சி.இரவீந்திரன் அவுஸ்திரேலியா, 0061413427932.

உங்கள் பிரிவால் துயருறும்: பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள் மற்றும் உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org